

யார் அந்த நிலவு?
முத்துலட்சுமி ராகவன்

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : யார் அந்த நிலவு...? |
| ஆசிரியர் | : முத்துலட்சுமி ராகவன் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| முதல் பதிப்பு | : பிப்ரவரி, 2011 |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 204 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : புவனேஸ்வரி பதிப்பகம் புஎண்: 32, ப.எண்: 107, கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014. |

**விலை: ரூ.75.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர் - 94441-01753 |
| அச்சிட்டோர் | : எஸ்.எஸ்.கிராபிக்ஸ், சென்னை-14. |




# யார்
# அந்த நிலவு...?

# யார் அந்த நிலவு...?



# 1

குளிர்ச்சியான ஏ.ஸி. அறையை விட்டு வெளியே வந்தான் ஜெகந்நாதன்... அவனுடைய அறையின் கதவின் மேல் ஜெகந்நாதன் எம்பிஏ... மேனேஜிங் டைரக்டர் என்ற எழுத்துக்கள் பித்தளையால் பொறிக்கப் பட்டிருந்தன. அலுவலகத்தில் இங்கொருவர்.. அங் கொருவராக வேலை செய்ய முடியாமல் அமர்ந்திருந்த மிகச் சிலரைத் தவிர, மற்றவர்கள் சென்றிருந்ததால்.. ஒரு வித நிசப்தம் அங்கே நிலவியது.. சற்று முன் பரபரப் புடன் இயங்கிக் கொண்டிருந்த இடமா இது என்ற

ஆச்சரியத்துடன் அவன் லிப்டிற்குள் நுழைந்தான். தரைத் தளத்தை அடைந்ததுமே.. லிப்டிலிருந்து வெளிப் பட்டு.. நீண்ட ஹாலில் நடந்து.. வாசல் படிகளில் இறங்கினான். அவன் ஏறுவதற்குத் தயாராக கார் வழுக்கிக் கொண்டு வந்து நின்றது. டிரைவர் கார் கதவைத் திறந்துவிட.. ஏறிக் கொண்டான். கார் அலுவலக வளா கத்தை விட்டு வெளியேறிச் சாலைப் போக்குவரத்தில் கலக்கும்போது.. தன் அலுவலகத்தைத் திரும்பிப் பார்த்துக் கொண்டான்.

'மோனா கம்ப்யூட்டர்.. சாப்ட்வேர் சொலுசன்..' என்ற கொட்டை எழுத்துக்கள் மின்னின.

கடற்கரைச் சாலையில் கார் ஓட ஆரம்பித்தது. இத மான கடற்காற்று உடல் வருட... சீட்டில் சாய்ந்து அமர்ந்து கொண்டான்.

''இந்தச் சென்னையின் வெயிலுக்கு.. கடற்காற்று எவ்வளவு இதமாக இருக்கிறது.. பார்த்தாயா டேவிட்..'' என்றான்.

காரை ஓட்டிக் கொண்டிருந்த காரின் டிரைவரான டேவிட் மரியாதையாய்த் தலையை ஆட்டிச் சிரித்தான்.

''அது என்னவோ டேவிட்.. மழை பெய்தாலும் நம் சென்னையில் தாங்க முடிவதில்லை.. வெயிலடித் தாலும் நம் சென்னையில் தாங்க முடியவில்லை!'' சாலையை வேடிக்கை பார்த்தவண்ணம் கூறினான் ஜெகந்நாதன்.

மழை பெய்ததால் கழுவி விட்டுத் துடைத்தது போல் பளிச்சென்று இருந்த சாலையைப் பார்த்தபடி அதற்கும் சிரித்தான் டேவிட்.



'எஜமானர்கள் பேசினால் பதிலுக்குப் பேசக்கூடாது என்று இவன் கற்று வைத்திருக்கிறான்..' என்று நினைத் துக் கொண்ட ஜெகந்நாதனின் இதழ்களில் புன்னகை தோன்றியது.

அவனுடைய வீடு இருக்கும் பகுதியில் கார் திரும் பியது. பிரம்மாண்டமான வெளிச்சுவரின் வாசல் கேட் டின் அருகே இருந்த சிறு அறையில் இருந்த செக்யூரிட்டி அவசரமாய்க் கதவைத் திறந்து விட்டான்.

'ம்ம்.. சுதந்திரமாய் வீட்டுக்குள் போய் வர முடியாமல்.. காவலுடன் வாழும் பணக்கார வாழ்க்கை...' பெருமூச்சு விட்டான் ஜெகந்நாதன்.

'இந்த செக்யூரிடிக்குத் தெரியாமல் நான் கூட வீட்டை விட்டு வெளியில் போய் வர முடியாது..' என்று நினைத் துக் கொண்டவனுக்கு அப்படி ஒரு நாள் எந்தவித அடை யாளமும் இல்லாமல் தன்னிச்சையாக ஊர் சுற்றிப் பார்க்க ஆசை வந்தது.

'ம்ஹூம்... ஒரு நாள் என்ன.. ஒரு மணி நேரம் நான் என் தொழிலை மறந்து இருந்துவிட முடியுமா? போனில் அமெரிக்காக்காரன் அலறி விடுவானே... புரொஜெக்ட் வொர்க்கை முடித்துக் கொடுப்பதிலேயே என் ஆயுள் முழுவதும் கழிந்து கொண்டிருக்கிறது.'

அலுப்பாக உணர்ந்தான் ஜெகந்நாதன்.. இயந்திரத் தின் முன்னே அமர்ந்து.. இயந்திரத்துடன் உறவாடிக் கொண்டிருக்கும் இந்த இயந்திர மயமான வாழ்க்கையில் ஒரு மாற்றத்தைத் தேடியது அவன் மனம்.

விட்டுச் சிறகடிப்பாய்...

அந்தச் சிட்டுக் குருவியைப் போல்...

என்றானே பாரதி.. அதைப் போல்.. இவை எல்லா வற்றையும் விட்டுவிட்டு.. பணத்தைத் துரத்தாமல்.. சிறகடித்துப் பறக்க முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

சிறகுகள் இல்லா விட்டாலும் பரவாயில்லை... சிறகைப் போன்ற லேசான மனம் இருந்தால் போதும்.. அழுத்தங்கள் அழுத்தி.. அழுத்தி.. மனம் ஒரு பாறையைப் போல் கனக்காமல் அமைதியாக இருந்தால் போதும். ஆனால்.. எந்த நேரமும் பரபரப்பாய் இயங்கிக் கொண் டிருக்கிறவனுக்கு அதற்கான கொடுப்பினைதான் இல் லாமல் போய்விட்டதே.

ஜெகந்நாதன்.. ஓர் பெருமூச்சோடு காரை விட்டு இறங்கினான். பக்கவாட்டில் தெரிந்த அகன்ற பிரம் மாண்டமான தோட்டத்தைப் பார்த்தான். ஓர் அரண் மனையில் அமைக்கப்பட்டிருந்த பூங்காவனம் போல் அது இருந்தது. அந்தப் பூந்தோட்டம் கூட அவனுடைய மனதிற்குச் சாந்தியை அளிக்கவில்லை. வீட்டின் பக்க வாட்டில் தெரிந்த வாசலின் வழி போனால் வரும் நீச்சல் குளத்தின் குளுமை கூட அவன் மனதில் வெம்மையைப் போக்கவில்லை.

எதனால் இந்த எரிச்சல் என்று அவனுக்கே தெரிய வில்லை.. இரவு பகல் பாராமல் கம்ப்யூட்டரே கதி என்று கிடந்தவனின் மனது மாற்றம் தேடி அலுப்புக் கொண் டது. எதைக் கொண்டு மனச் சோர்வை அகற்றுவது என்றுதான் அவனுக்குப் பிடிபடவில்லை.

''ஹாய் அண்ணா...'' கையில் கார் சாவியைச் சுழற் றியபடி இரண்டிரண்டு படிகளாய் ஏறி வீட்டுக்குள் வந்தான் ராமநாதன். ஜெகந்நாதனின் தம்பி..



''காலேஜ் இப்போதுதான் முடிந்ததா..?''

''இப்போ மணி என்ன தெரியுமா..? ஆறு... காலேஜ் இப்போதுதான் முடியுமா? அது நான்கு மணிக்கே முடிந்து விட்டது...''

''நீ இப்போதுதான் வருகிறாய் போல...?''

''ஆமாம். இவ்வளவு நேரமும் என் பிரண்ட்ஸுடன் டைம் ஸ்பென்ட் பண்ணிக் கொண்டிருந்தேன்.''

படு உற்சாகமாக ஹால் சோபாவில் அமர்ந்து கொண்ட வனைப் பார்க்கும்போது ஜெகந்நாதனின் மனதிற்குள் பொறாமை வந்தது.

'இவனால் மட்டும் எப்படி இப்படி ப்ரீயாக இருக்க முடிகின்றது..?'

பொறுப்புகள் இல்லாத கல்லூரிப் பருவத்திலேயே பொறுப்புகளை ஏற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்ட ஜெகந்நாதன் பெருமூச்சு விட்டான்...

'அப்பா மட்டும் உயிரோடு இருந்திருந்தால்..?' மனதிற் குள் கேள்வி எழுந்தது.

ஜெகந்நாதன் கல்லூரிப் படிப்பில் இருந்த போதே அவர்களின் தகப்பனாரான ரகுநாதன் இதய நோயால்.. மாரடைப்பு வந்து இறந்து விட்டார்...

எதுவும் தெரியாமல் தவித்த தாய் சிவகாமி.. விவரம் புரியாத வயதில் இருந்த தம்பி ராமநாதன்.. அறியாச் சிறுமியாய் இருந்த தங்கை ப்ரீதா.. இவர்கள் நிம்மதியாக வாழ்க்கையைத் தொடர்ந்து வாழ வேண்டுமானால்.. ஜெகந் நாதன் அந்தக் குடும்பத்தின் பாரத்தையும்.. தொழிலின் பாரத்தையும் சுமந்தாக வேண்டும்..

அவன் சுமை தாங்கியானான்.. அவனது குடும்பம் அவன் மீது சுமையை இறக்கி வைத்துவிட்டு இளைப் பாறிக் கொண்டிருந்தது... கால் கடுக்க வாழ்க்கைப் பாதை யின் ஓடிக் கொண்டிருந்தவன் இளைப்பாற நிழல் தேடித் தவித்தான்.

''ராம்.. இது காலேஜ் பைனல் இயர்.. ஞாபகம் இருக்கா?''

''அதற்கென்ன அண்ணா..?''

''நீ இன்ஜினியரிங் ஸ்டூடன்ட்..''

''இருக்கட்டுமே...''

''கொஞ்சம் பொறுப்பாகப் படியேன்.''

''ம்ஹா.. படிப்பிற்கு என்ன அண்ணா இப்போது அவ சரம்? செமஸ்டர் வரை இன்னும் நிறைய நாள் இருக்கே.''

''அப்படி நினைத்து அலட்சியமாக இருந்து விடக் கூடாது.''

''அண்ணா.. எனக்கு இந்த டென்சனே ஆகாது.. எக்ஸாம் வந்தால் என்ன..? அது பாட்டுக்கு அது.. ஜாலி பாட் டுக்கு ஜாலி.''

'இவனை எதைக் கொண்டு பயமுறுத்துவது...?' யோசித்தான் ஜெகந்நாதன்.

ராமநாதனோ 'கடப்பாறையைக் கூடக் கொடு.. நான் அதைக் கடித்து ஜீரணமாக்குகிறேன்!' என்ற ரீதியில்.. செல்போனை நோண்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

'அசைய மாட்டேன்.. என்கிறானே...' என்று அதற்கும் பல்லைக் கடித்தான் ஜெகந்நாதன்...



''அம்மா.. எனக்கு ஒரு கப் காபி...'' என்று கூவிய வண்ணம் ப்ரீதா வீட்டிற்குள் நுழைந்தாள்.

ஒரு கையில் வெள்ளைக் கோட்டும்.. மறுகையில் ஸ்டெதஸ்கோப்புமாக உள்ளே வந்தவளைப் பார்க்கும் போதே அவள் மருத்துவக் கல்லூரி மாணவி என்பது தெரிந்தது.

''ஏய்.. அலட்டி.. நீ ஸ்டெதஸ்கோப்பை இப்படிச் சுற்றிக் காண்பித்து நீ மெடிகல் ஸ்டூடன்டுன்னு பீற்றிக்கணுமா?'' என்று ராமநாதன் அவளை வம்புக்கு இழுத்தான்.

''யார் அலட்டிக் கொள்வது? நானா..? நேற்றைக்கு என் பிரண்ட் வந்திருந்தப்போ.. அவள் முன்னால் கால் மேல்.. கால் போட்டு செல்போனில் பீட்டர் இங்கிலீஷைப் பீராய்ந்து விட்டு.. கலக்கியது யாருடா அண்ணா.. நீயா.. இல்லை.. நானா?''

''சும்மா நிறுத்துடி.. முதல் வருஷம் கூட இன்னும் முடியவில்லை. நீ மெடிக்கல் காலேஜிற்குள் நுழைந்து ஆறு மாதமாகி இருக்குமா? அதற்குள் கர்ணன் கவச குண்டலத்துடன் பிறந்தது போல.. நீ ஸ்டெதஸ்கோப் புடன் பிறந்ததாக நினைத்துக் கொண்டு இருபத்து நான்கு மணி நேரமும் அதைக் கட்டிக் கொண்டு திரிகிறாயே.. அது கலக்கலா..? இல்லை, நான் செய்வது கலக்கலா? உனக்கு முதலில் ஸ்டெதஸ்கோப்பை யூஸ் பண்ணத் தெரியுமா..?''

''உன்னைப் போல் என்னையும் நினைத்தாயா? அண்ணனுக்கு உதவப் போகிறேன்னு.. கம்ப்யூட்டர் சாப்ட்வேர் படிக்கிறாயே... அதுவும் பைனல் இயர்.. இன்னும் கம்ப்யூட்டரின் மவுசை ஒழுங்காய் ஹேண்டில்

பண்ணத் தெரியவில்லை. நீயெல்லாம் என்னைப் பார்த்துக் கலாய்க்கிறாய்...''

கொஞ்ச நேரம் அவர்கள் இருவரும் மோதுவதை ரசித்துக் கொண்டிருந்தவனுக்கு அவர்கள் போட்ட சண்டையில் தலைவலி வந்துவிட்டது.

அவன் தலையைப் பிடித்துக் கொண்டபோது, அவன் முன்னால் காபிக் கோப்பையை நீட்டினாள் சிவகாமி.

''குடிப்பா.. தலைவலி போய்விடும்.''

''எனக்குத் தலை வலிப்பது உங்களுக்கு எப்படிம்மா தெரியும்..?''

''இதுக இரண்டும் சண்டை போட்டால்.. தவம் செய்யும் முனிவருக்கே தலைவலி வந்துவிடும்.. உனக்கு வராதா...?''

''அம்மா..'' என்று ராமநாதனும்.. ப்ரீதாவும் கோரஸாகத் தாயை நோக்கிக் கத்திக் கொண்டிருக்கையில்.. ஜெகந்நாதனின் செல்போன் அலற ஆரம்பித்தது. அவன் காபி கப்பை ஒரு கையால் பிடித்துப் பருகியவாறு மறுகையால் செல்போனை எடுத்துக் காதுக்குக் கொடுத்தான்.

''சார்.. பெங்களூர் பிராஞ்சிலிருந்து நாம் கேட்ட ரிப்போர்ட் இதுவரை வரவில்லை...'' ஜெகந்நாதனின் செயலாளர் வன துர்க்கா பேசினாள்.

''நீங்க எங்கே இருக்கீங்க..?''

''ஆபிஸில்...''

''இன்னும் வீட்டுக்குப் போகவில்லையா?''

''இல்லை சார்.''



''இந்தப் பிரச்னையை நான் சால்வ் பண்ணிக் கொள்கிறேன்.. நீங்க உடனே வீட்டுக்குப் போங்க.''

''தேங்க் யூ சார்.''

ஜெகந்நாதன் பாதி பருகிய காபிக் கோப்பையை டேபிளில் வைத்து விட்டு அவசரமாய் மாடியேறினான். காபி சாப்பிடக் கூட நேரமில்லாமல் உழைக்கும் மூத்த மகனைக் கவலையோடு பார்த்தாள் சிவகாமி.

ஜெகந்நாதன் அவனுடைய அறையைத் திறந்து கொண்டு உள்ளே சென்றான். முன் பக்கம் பெரிய அலுவலக அறையும்.. அதையடுத்துப் படுக்கையறையும்.. பக்கவாட்டில் பாத்ரூமை உள்ளடக்கிய உடை மாற்றும் அறையும் கொண்டதாகப் பரந்து விரிந்திருந்தது அது... அவசரமாய் அறைக் கதவை அடைத்து விட்டு கம்ப்யூட்டரை உயிர்ப்பித்தபடி... செல்போனில் நம்பர்களை அழுத்தினான் ஜெகந்நாதன்... மறுமுனையில் மணியோசை நின்றதும்...

''ஹலோ... இப்ராஹிம்...'' என்றான் ஜெகந்நாதன்.

''உங்களுக்கு யார் வேண்டும்?'' என்று கேட்டது இனிமையான அந்தப் பெண் குரல்...

## 2

கம்ப்யூட்டரின் கீ போர்டில் தட்டிக் கொண்டிருந்த ஜெகந்நாதனின் விரல்கள் நின்றன... அவனது சோர்வு

உடனே பறந்து விட்டது.. இத்தனை இனிமையான பெண் குரலை இதற்கு முன்னால் கேட்டதில்லை என்று அவனுக்குத் தோன்றி விட்டது.

'இப்ராஹிமிற்கு போன் போட்டால் யாரோ ஒரு பெண் குரல் கேட்கிறதே..' திகைப்புடன் மீண்டும் பேசினான் ஜெகந்நாதன்.

''இப்ராஹிம்.. இப்ராஹிம் இல்லையா?''

''உங்களுக்கு யார் வேண்டும் என்று கேட்டேனே...''

''இப்ராஹிம்தான் வேண்டும்.''

இப்ராஹிமின் குரல்... தடித்துக் கனமாக இருக்கும்.. கரடியின் குரலுக்குப் பதில் கிளி பேசுகிறதே என்று ஆச்சரியப்பட்டுப் போனான் ஜெகன்.

''ஹலோ.. யார் சார் நீங்க?'' அந்தப் பெண் கோபமாக வினவினாள்.

''ம்ம்.. நான் யாரா..? நான் தருண்!'' பெயர் மாற்றிச் சொன்னான் ஜெகந்நாதன்.

''தருண்? தருண் என்றால்... நீங்கள் எந்த நாட்டுக்கு அதிபர்..?'' அந்தப் பெண் கேலியாக வினவினாள்.

''ஏன்... அதிபர்களிடம் மட்டும்தான் நீங்கள் பேசுவீங்களா..?'' ஜெகந்நாதன் தன் வேலையை மறந்து விட்டான்.

''ஆமாம் சார்.. அப்படியொரு வேண்டுதல் எனக்கு...'' பதில் சொன்னவளின் இடக்கு அவனுக்குப் பிடித்து விட்டது.

'விட்டுக் கொடுக்காமல் எப்படி வார்த்தையாடுகிறாள்..?' என்ற நினைவில் புன்னகைத்துக் கொண்டான் அவன்.



''இப்படியொரு வேண்டுதலைப் பற்றி இதற்கு முன் நான் கேள்விப்பட்டதே இல்லையே...'' அவன் பேச்சை வளர்த்தான்.

''எப்படிக் கேள்விப்பட்டிருப்பீர்கள்.. முன்னே.. பின்னே தெரியாத பெண்ணிடம் மணிக் கணக்கில் பேச வேண்டும் என்று நீங்கள் வேண்டுதல் வைத்திருக்கும் போது.. நானும் இப்படியொரு வேண்டுதலை வைத்திருக்கக் கூடாதா?''

''ஏன் கூடாது..? தாராளமாய் வைத்துக் கொள்ளலாம்.. ஆனால் எனக்கு ஒன்றுதான் விளங்க மாட்டேன் என்கிறது.''

''ஒன்று விளங்கவில்லையா..? எனக்கு ஓராயிரம் விளங்காதது போல் தெரிகிறதே.''

''நீங்கள் அறிவாளி. உங்களுக்குத் தெரியாதது எதுவும் இருக்க முடியாது. நான் என்னவோ சாதாரணப் பாமரன். எனக்குத் தெரிந்தது இவ்வளவுதான்.''

''ஓஹோ.. அடக்கமெல்லாம் அற்புதம். ஏதோ விளங்காத ஒன்றைப் பற்றிச் சொன்னீர்களே...''

''நீங்கள் சொல்ல விடவில்லையே...''

''ஏன்.. நான் வந்து உங்கள் வாயைப் பொத்தினேனா..?''

ஜெகந்நாதனின் விழிகள் மின்னின. இதைப் போன்ற ஓர் உணர்வை அவன் இதற்கு முன்னால் அனுபவித்தது இல்லை.

அவளது தளிர்க் கரம் உண்மையிலேயே அவனது வாயைப் பொத்தி விட்டது போல் அவன் கிறங்கிப் போனான். கம்ப்யூட்டரின் முன்னால் இருந்து எழுந்து

கொண்டவன்.. சோபாவில் சாய்ந்து அமர்ந்து கொண்டான்.

''வாயைப் பொத்தியது போல்தான் நான் உணர்கிறேன்.''

''உணர்வீங்க.. உணர்வீங்க... எதற்காக எனக்குப் போன் போட்டு இவ்வளவு நேரமும் வெட்டியாகப் பேசிக் கொண்டிருக்கிறீங்க...''

''வெட்டியாகவா?''

''பின்னே வேலையாகவா... பேசிக் கொண்டிருக்கீங்க?''

''நீங்க சொன்னாலும்.. சொல்லாவிட்டாலும்.. அதுதான் உண்மை.''

''எது...?''

''நான் வேலையாய்ப் பேசிக் கொண்டிருப்பது..''

''என்னிடம் என்ன சார்.. உங்களுக்கு வேலை இருக்கப் போகிறது... கடலை போடும் வேலையா...?''

அந்தப் பக்கம் அவள் குறும்பாக நகைப்பது தெரிந்தது. இவன் காது மடல்கள் சூடேறுவதை உணர்ந்தான்.

''கடலையா..? அப்படின்னா?''

''இது கூடத் தெரியாதா..?''

''தெரியாதே...''

''அதற்குள் ஒன்று மட்டும் விளங்கவில்லைன்னு பொய் சொன்னீங்களே..''

''அந்த ஒன்றை இன்னும் நீங்கள் சொல்ல விடவில்லையே...''



''சொல்லுங்களேன். அந்தக் குறை உங்களுக்கு எதுக்கு... அதையும் கேட்டுத்தான் பார்க்கிறேனே...''

''அடேங்கப்பா. உங்களுக்கு ரொம்பவும் கருணை தான்.''

''கிண்டல்..? ம்ம்.. எல்லாம் என் நேரம்.. நீங்கள் ஒன்று சொல்ல வந்ததை இன்று சொல்கிறீங்களா.. இல்லையா..?''

''இருங்க.. நான் யோசிக்க வேண்டாமா..?''

''ஏன் சார்.. ஒன்று.. இரண்டு மறந்து விட்டதா..?''

ஜெகந்நாதன் இப்போது வாய் விட்டு அவள் பேச்சை ரசித்துச் சிரித்தான்... மறுமுனையில் மௌனம் நிலவியது...

''ஆமாம்.. இப்ராஹிம் உங்களுக்கு என்னவாக ஆக வேண்டும்?''

''எதுவாகவும் ஆக வேண்டாம்.''

''ஏன்.. இப்படிச் சொல்கிறீங்க?''

''வேறு எப்படிங்க சொல்வது..?''

''ஏங்க.. அவர் வீட்டில் இருந்து கொண்டு.. அவர் போனில் பேசிக் கொண்டிருக்கீங்க.. அவர் உங்களுக்கு என்ன உறவுன்னு கேட்டால் மட்டும் சொல்ல மாட்டேன்கறீங்க.''

''சரியாப் போச்சு போங்க. நான் என்னுடைய வீட்டில் இருந்து கொண்டு.. என் போனில் பேசிக் கொண்டிருக்கிறேன் சார்.. நீங்களானால் இப்ராஹிம்.. அது.. இதுங்கறீங்களே.''

''அது பெங்களூர் இல்லையா.''

''இல்லை... இது எங்களூர்...''

''அப்போ... நீங்கள் யார்..?''

''நான்.. நான்தான்.. இதைப் போய் ஒரு கேள்வின்னு கேட்க வந்துட்டிங்களே...''

''உங்க பெயர் என்ன?''

''ம்ம்.. அனாமிகா...''

'அனாமிகா..!' பெயரில்லாதவள் என்று தன் பெயரைச் சொல்லிக் கொள்ளும் இவள் யார்?

அதை அறியும் ஆவல் அவனுக்குள் முகிழ்த்தது. அவளது குரல் அவன் மனதை இதமாகத் தொட்டுத் தடவிச் சென்றது. அது வரை அவன் மனதிலிருந்த சோர்வு அகல்வதை வியப்புடன் உணர்ந்தான் ஜெகந்நாதன்.

''அனாமிகா.. அருமையான பெயர்.''

''இப்படிச் சொல்லும் முதல் ஆள் நீங்கள்தான். இது வரை யாரும்.. பெயரில்லாதவள் என்ற பெயரை இவ்வளவு ரசித்ததில்லை.''

''ஈஸிட்..? அவர்களுக்கு ரசனை இல்லை.''

''உங்களுடைய ரசனை அபாரம்.''

''தேங்க்யூ...''

''ம்ம்.. ஒவ்வொரு நன்றியின் பின்னாலும் ஒரு நெகிழ்ச்சி ஒளிந்திருக்கும். இது உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியாதே.. அப்படியென்றால் ஒவ்வொரு சொல்லிற்குப் பின்னாலும் ஒரு உணர்வு ஒளிந்திருக்குமா?''

''நிச்சயமாய்.''



''எனக்கு அதைச் சொல்லேன்.''

''ம்ம்.. இப்போது யாரோ ஒருவர் செய்யும் செயல் உங்களைப் பாதித்து விடுகிறது. அவர் வருத்தம் தெரிவிக்கிறார். அப்போது நீங்கள் அவரிடம் என்ன சொல்வீர்கள்?''

''இட்ஸ் ஓகே..ன்னு சொல்வேன்.''

''அதாவது பரவாயில்லைன்னு சொல்வீங்க.. அப்படித் தானே...''

''ஆமாம்...''

''அதை மனதில் ஓர் வலியோடுதானே சொல்வீங்க..''

''ஷ்யூர்...''

''ஸோ.. ஒவ்வொரு 'பரவாயில்லை...' என்ற வார்த்தைக்கும் பின்னால் ஓர் மனவலி ஒளிந்திருக்கும்...''

''பென்டாஸ்டிக்.''

''எது பென்டாஸ்டிக்.. மனதில் வலி ஒளிந்திருப்பதா...?''

''நான் நீ சொன்ன விளக்கத்திற்கு 'பென்டாஸ்டிக்..' சொன்னேன். இது மட்டும்தானா.. இன்னும் இருக்கிறதா?''

''இருக்கிறது... இப்போது 'சும்மாதான் சொன்னேன்' என்று உங்களிடம் யாராவது சொன்னாங்கன்னு வைங்க.. நீங்க என்ன நினைப்பீங்க..?''

''என்ன நினைப்பேன்?''

''உங்கள் நினைவைப் பற்றி உங்களுக்குத்தானே தெரியும். எனக்கா தெரியும்?''

''நான் எதுவும் நினைக்க மாட்டேன், அனாமிகா...''

''அப்போ.. உங்கள் மண்டையில் மசாலா இல்லைன்னு அர்த்தம்.''

''தலையில் மூளைதான் இருக்கும் என்று கேள்விப் பட்டிருக்கிறேன்.. இது என்ன புதிதாய் மசாலா..?''

''இது இப்படித்தான். 'சும்மா சொன்னேன்' என்ற வார்த்தைக்குப் பின்னால் ஒரு சிறு உண்மை ஒளிந் திருக்கும்.''

''வாவ்.''

''இதற்கே 'வாவ்' என்றால் எப்படி...? இப்போ 'ஐ டோன்ட் நோ...'ன்னு யாராவது உங்களிடம் பீலா விட் டால் நீங்க அதைப்பற்றி என்ன நினைப்பீங்க.''

''சொன்ன ஆள் முழு முட்டாள் என்று நினைப்பேன்.''

''ஆமாம் சார்.. நீங்கள் பெரிய அறிவாளி.''

''அது நிஜம்தானே...''

''அதை நான் சொல்ல வேண்டும்.. நீங்களாகச் சொல் லிக் கொள்ளக் கூடாது...''

ஜெகந்நாதன் சுவாரஸ்யத்துடன் அடி உதட்டை மடித்துக் கடித்துக் கொண்டான்.. 'யார் இவள்..?'

ஒரு மணி நேரத்தில் லட்சக் கணக்கில் சம்பாதித்துத் தள்ளும் கோடீஸ்வரனை எளிதாக நினைத்துப் பேசிக் கொண்டிருந்தாள் ஒருத்தி.. 'பெயரில்லாதவள்' என்று சொல்லிக் கொண்ட அவளிடம் தன் அடையாளத்தை மறைத்துச் சாமான்யனாக உரையாடிக் கொண்டிருப்பதில் சுகம் கண்டான் அவன்.

''ஐ டோன்ட் நோன்னு சொன்னால் வேறு என்ன நினைப்பது?''

''எத்தனையோ நினைக்கலாம். ஏனென்றால் ஒவ் வொரு 'தெரியாது' என்ற வார்த்தைக்குப் பின்னாலும் ஒரு தன்னடக்கமான அறிவு ஒளிந்திருக்கும்...''



''என்ன அழகானதொரு விளக்கம்.''

''இதுக்கே அசந்து விட்டால் எப்படி?''

''இன்னும் சொல்வாயா..?''

''ம்ம்.. இப்போது.. தோற்றுப் போன மனநிலையில் இருக்கும் ஓர் மனிதன் 'ஐ டோன்ட் கேர்..'ன்னு சொன் னால்.. அவன் சொல்லும் அந்த வார்த்தையின் பின் னால் என்ன ஒளிந்திருக்கும்?''

அவள் கேள்வி கேட்கும் ஆசிரியை போல் கேட்டாள். ஜெகந்நாதனுக்கு.. அவனுடைய அம்மா ரசித்துப் பார்த் துக் கொண்டிருந்த பழைய பாடல் ஒன்று நினைவிற்கு வந்தது... அந்தப் பாடலில் வரும் கதாநாயகி.. பாடலி லேயே கேள்வி கேட்பாள். அதற்குக் கடைசியில் கதா நாயகன் வந்து பதில் கூறுவான்.

'என்ன பாடல் அது..' என்று யோசித்தவனுக்கு.. அந்தப் பாடல் நினைவுக்கு வந்து விட்டது.

'பூப்பூவாய்ப் பூத்திருக்கும்..

பூமியிலே ஆயிரம் பூ...

பூவிலே சிறந்த பூ... எந்தப் பூ..?

'அன்பு...!'

என்று மனதிற்குள் கூறிக் கொண்டவன், போனில் உரையாடிக் கொண்டிருந்த அந்த முகம் தெரியாத நிலவுப் பெண்ணிற்குப் பதிலைச் சொன்னான்.

'''ஐ டோன்ட் கேர்' என்ற வார்த்தையின் பின்னால் உணர்ச்சிப் பிழம்பு ஒளிந்திருக்கும் என்று நினைக் கிறேன்... சரிதானே...''

''வெரிகுட்.. கரெக்டா சொல்லிவிட்டிங்களே...''

அவள் கலகலவென்று சிரிக்கும்போது அவனும் உடன் சேர்ந்து சிரித்தான். அவன் மனதிலிருந்த சுமை விலகிச் சென்றது...



# 3

சற்று முன் வரை அவன் மனதில் பாறை ஒன்றை ஏற்றி வைத்தது போல் கனத்த மன உணர்வு அகன்று... அவன் மனம் லேசாக மாறியிருந்தது... இயந்திரமாக இயங்கிக் கொண்டிருந்தவனின் மனதில் உல்லாசம் குடி கொண்டிருந்தது.

'இது எப்படி...' என்று தனக்குள் தன்னை எண்ணி வியந்து கொண்டான் அவன்.

மிகப் பெரும் கம்ப்யூட்டர் நிறுவனத்தின் முதலாளி யான அவன் கோடிகளைக் குவித்த வெற்றிகளுக்காக மற்றவர்கள் பாராட்டிய போது கூட இவ்வளவு மகிழ்ந் திருக்க மாட்டான்.

அவள் 'வெரிகுட்..' என்றதும் மகிழ்ந்து விட்டான்.

''வெறும் 'வெரிகுட்' மட்டும்தானா?''

''வேறு என்ன செய்வாங்கன்னு நினைத்தீங்க. உங் களுக்குப் பாராட்டு விழா நடத்தி.. பண முடிப்புக் கொடுப்பாங்கன்னு நினைத்தீங்களா..?''



''அப்படி பண முடிப்பு கொடுத்திருந்தால்.. என் பணப் பற்றாக்குறை போய் விடுமே...''

''ஹை... ஆசை.. தோசை.. அப்பள்.. வடை..''

''இதென்ன.. சாப்பிடும் அயிட்டங்களாக அடுக்கு கிறாய்..?''

''உங்களுக்கு ஆனாலும் இவ்வளவு ஆசை கூடாது..''

''சரி.. தப்புத்தான்.. விட்டுவிடு.. அப்புறம்..?''

''ஒவ்வொரு 'வெறுக்கிறேன்' என்ற வார்த்தைக்குப் பின்னாலும் ஒரு காதல் ஒளிந்திருக்கும்...''

''ஊஹூம்..? அழகாகச் சொல்லிவிட்டாய்.. அனாமிகா... உன்னை ஒன்று கேட்கலாமா..?''

''உங்களுக்கு ஒன்றைத் தவிர வேறு தெரியாதா...?''

''நான் கேட்க வந்ததைக் கேட்கவா..? வேண்டாமா?''

''ம்ம்.. கேளுங்கள்.''

''நீ என்னை வெறுக்கிறாயா?''

மறுமுனையில் பதிலில்லை.

''அனாமிகா... லைனில் இருக்கிறாயா..?''

''ம்ம்..''

''என் கேள்விக்குப் பதில் சொல்ல மாட்டாயா?''

மீண்டும் மௌனம்தான் பதிலாகக் கிடைத்தது...

''போகிறது போ.. எனக்குப் பதில் சொல்ல உனக்கு விருப்பமில்லை யென்றால் விட்டுவிடு...''

''ஆஹா... என்ன தாராள மனது.''

''இப்போதுதான் நீ பழைய அனாமிகா...''

''அப்படி எத்தனை நாளாக என்னை உங்களுக்குத் தெரியும்?''

''சிலரிடம் சில நிமிடங்கள் பேசினாலும்.. பல யுகங்கள் பழகியது போல் உணர்வோம்.. உன்னோடு பேசிக் கொண்டிருக்கும் இந்தச் சில நிமிடங்களில் நான் அப்படித்தான் உணர்கிறேன்.''

''அட.. அட.. என்னமாய் சென்டிமென்டாய்ப் பேசி.. டச் பண்ணுகிறீர்கள்.''

''ஆமாம்.. ஒவ்வொரு சொல்லிற்குப் பின்னாலும் ஒளிந்து கொண்டிருக்கும் உணர்வுகளைச் சொல்லி விட்டாய்.. 'அனாமிகா' என்ற பெயரின் பின்னால் ஒளிந்து கொண்டிருக்கும் நீ யார்..?''

''ம்ம்.. நான் 'அனாமிகா...'''

அவள் கலகலவென்று சிரித்த வண்ணம் போனைத் துண்டித்து விட்டாள்.. ஜெகந்நாதன் ஏமாற்றத்தோடு தன் கை பேசியைப் பார்த்தான்.

'அதற்குள் போனை வைத்து விட்டாளே...'

அலைபேசியை எடுத்து அவன் அழைத்த எண்ணைப் பார்த்தான். அது இப்ராஹிமின் அலைபேசி எண் அல்ல.. சில எண்கள் அவசரத்தில் மாறியிருந்தன...

''ம்ம்.. ராங் நம்பர்..!' அவனுக்குச் சிரிப்பு வந்தது.

''ஹலோ.. மைடியர் ராங் நம்பர்'' என்று வாய்விட்டுப் பாடியபடி அந்த எண்ணை.. அனாமிகா என்ற பெயரில்.. தன் செல்போனில் பதிவு செய்து கொண்டான்.

''ஹலோ...'' அவளது இனிய குரல் அவனது காதினில் ஒலித்தது.



சோபாவில் சாய்ந்து படுத்துக் கண்களை மூடிக் கொண்டு மீண்டும் பாட ஆரம்பித்தான் அவன்.

''ஹலோ.. மைடியர்.. ராங் நம்பர்..

கேட்டது... உந்தன் குரல் சொர்க்கம்...

நேரினில் வந்தால்.. என்ன வெட்கம்..?

கற்பனை ஓராயிரம்...

ஒருமுறை.. பார்த்தால் என்ன..?''

அவளைப் பார்க்க முடியுமா என்ற கேள்வி அவன் நெஞ்சினில் எழுந்தது.. பார்க்க வேண்டும் போன்ற தாப அனல் நெஞ்சினில் மூண்டது.. அவனது தலை மாட்டில் கிடந்த செல்போன் அலறியது. எரிச்சலுடன் எடுத்துப் பேசினான்.

''ஹலோ.''

''சார்.. நான் இப்ராஹிம்.''

''ரிப்போர்ட் என்ன ஆச்சு.''

''அதை பேக்ஸில் அனுப்பி விட்டேன் சார்.''

''ஏன் டிலே..?''

''ஸாரி ஸார்.''

''இட்ஸ் ஆல் ரைட்.. பட்.. இனிமேல் இதுபோல் செய்யாதீங்க.. ஓ..கே..?''

''ஓகே சார்.''

மறுமுனையில் போனை வைத்த இப்ராஹிம் அருகிலிருந்த சக அலுவலரிடம் ஆச்சரியப்பட்டான்.

''இன்றைக்கு ரிப்போர்ட் அனுப்ப லேட்டானதற்கு எம்டி என்னைக் கிழி.. கிழின்னு கிழித்து விடுவார்ன்னு பயந்தே போனேன். அவர் என்னடான்னா.. கூலாகப் பேசுகிறார். எப்படி இப்படி ஓர் மேஜிக் நடந்தது..?''

முகம் தெரியாத ஒரு பெண் செய்த 'மேஜிக்' அது என்று புரிந்த ஜெகந்நாதன் மட்டும்... மனமாரச் சிரித்த வண்ணம் சாப்பிடச் சென்றான்.

டைனிங் டேபிளில் அவர்களுக்குள் அடித்துக் கொண்டிருந்த ராமநாதனும் ப்ரீதாவும் அவன் சிரித்த முகமாய் வருவதைக் கண்டதும் தங்கள் சண்டையை நிறுத்திக் கொண்டு.. அவனை 'ஆ'வென்று வாய் பிளந்து ஆச்சரியத்துடன் பார்த்தார்கள்.

''ஹாய்... ராம்.. என்னடா.. ப்ரீதாவுடன் வம்பிழுத்துக் கொண்டிருக்கிறாயா?''

''நான் இவளிடம் வம்பிழுக்கிறேனா.. அண்ணா.. இது அநியாயம்.. இவள்தான் என்னிடம் வம்பிழுக்கிறாள்.''

''டேய்.. அநியாயமாய்ப் பொய் பேசாதே.. அண்ணா.. நான் ஒன்றும் இவன் வம்புக்குப் போவதில்லை.. செய்யும் அட்டூழியங்களை.. இவன்தான் செய்கிறான்.''

''அடிப்பாவி.. அண்ணனிடமே பொய் சொல்கிறாயா..?''

''நீதான்டா.. பொய் சொல்வதில் மன்னன்.''

''நீ எனக்குத் தங்கைதானே..?''

''அந்தத் தலைவிதியை என் வாயால் சொல்லச் சொல்கிறாயா?''

''எனக்கும் உன் போலத்தான்.. நான் பொய் சொல்வதில் மன்னன் என்றால்.. என்னுடன் பிறந்த நீ எப்படியிருப்பாய்..? நீயும் பொய் சொல்லிதானே.''



''அம்மா.. பாருங்கம்மா இவனை...''

''டேய்.. ராம்.. தங்கைகூட ஏன் வம்புக்குப் போகிறாய்..?''

அதட்டிய வண்ணம் அவர்களுக்குப் பரிமாற வந்த சிவகாமி... கன்னத்தில் கையை வைத்து... புன்னகையுடன் தம்பி.. தங்கையின் சண்டையை ரசித்துக் கொண்டிருந்த ஜெகந்நாதனைக் கண்டதும் அதிசயப்பட்டுப் போனாள்.

''ஜெகன்.. நீ எப்போது வந்தாய்..?''

''இப்போதுதான்ம்மா...''

''ராம்.. ப்ரீதா.. அண்ணனை டிஸ்டர்ப் பண்ணக் கூடாதுன்னு சாயங்காலம்தானே.. உங்கள் இரண்டு பேரிடமும் சொல்லி வைத்தேன். பாவம்.. உங்களால் அவனுக்கு ஏற்கெனவே தலைவலி வந்தது... இப்போ.. திரும்பவும் ஆரம்பித்து விட்டிங்களா...?''

''அதெல்லாம் இல்லைம்மா... இவங்க ஜாலியா என்ஜாய் பண்ணட்டும். விடுங்க.. சீரியஸா உழைப்பதற்கு இன்னும் நாள் இருக்கு.. இந்த வயதில் என்ஜாய் பண்ணாமல் பின் எந்த வயதில் என்ஜாய் பண்ணப் போகிறாங்க..?''

பேசுவது தன் அண்ணன்தானா.. என்ற சந்தேகத்துடன் தன் கண்ணை அகல விரித்து.. 'ஆ'வென்று வாய் பிளந்து அமர்ந்து விட்ட ராமநாதன் தன் கண்களை நம்ப முடியாதவனாகப் பிரமிப்புடன் மூடித் திறந்தான்.

''என்னடா அப்படிப் பார்க்கிற...?''

''நத்திங்...''

''ஒவ்வொரு 'நத்திங்...' என்ற வார்த்தைக்குப் பின்னாலும் 'மெனிதிங்' என்ற அர்த்தம் ஒளிந்து கொண்டிருக்கும்.''

ஜெகன் குனிந்து சாப்பிட்டவாறே இதைக் கூற.. ப்ரீதா,

''வாவ்.. எப்படி அண்ணா.. இப்படி யோசிக்கறீங்க..?'' என்று கேட்டாள்.

''அதுக்குன்னு ரூம் போட்டா யோசிப்பாங்க.. எல்லாம் தானாக வருவதுதான். அண்ணனை என்ன.. உன்னைப் போல் மக்கு பிளாஸ்திரின்னு நினைத்து விட்டாயா..'' என்று வாரினான் ராமநாதன்.

''டேய்.. வேண்டாம்.. அண்ணன் இருக்கிறாரேன்னு பார்க்கிறேன். இல்லைன்னா.. நடப்பதே வேற...'' கையிலிருந்த ஸ்பூனைத் தூக்கிக் காட்டி அவனை மிரட்டினாள் ப்ரீதா...

''விடும்மா.. அவன் என்னவோ கிண்டலாகப் பேசுகிறான். நீ நான் கேட்பதற்குப் பதில் சொல்லு.''

''என்ன அண்ணா..?''

''அனாமிகா.. என்றால் என்ன அர்த்தம்..?''

''பெயரில்லாதவள் என்று அர்த்தம்.''

தங்கையின் புத்திசாலித்தனத்தை மனதிற்குள் மெச்சிக் கொண்டான் ஜெகந்நாதன்.

''குட்.. இப்போ.. யாரிடமாவது நாம்.. அவங்களுடைய பெயரைக் கேட்கிறோமென்று வை.. அவங்க 'அனாமிகா'ன்னு அவங்க பெயரைச் சொன்னால் என்ன அர்த்தம்?''



''என்ன அண்ணா.. இது கூடத் தெரியவில்லையா? அவங்களுக்கு.. நம்மிடம் அவங்க பெயரைச் சொல்ல விருப்பமில்லை என்று அர்த்தம்.''

'அப்படியா.. அவளுக்கு என்னிடம் அவளுடைய பெயரைச் சொல்வதில் விருப்பம் இல்லையா..?' என்று யோசித்தவனுக்குத் தானும் அவளிடம் தன் பெயரைத் 'தருண்...' என்று சொன்னது நினைவிற்கு வந்தது.

தன் பெயரையும்.. தொழிலையும் சொன்னால்.. அவள் இயல்பாகத் தன்னுடன் பேச மாட்டாள்.. என்ற பயம் ஜெகந்நாதனுக்கு.. அதனால் அவன்.. தன் பெயரையும்.. தொழிலையும் மறைத்து விட்டான்.

அதுபோல.. அவளும்.. 'அனாமிகா..' என்ற பெயருக்குப் பின்னால் ஒளிந்து கொள்வதற்கு ஒரு காரணம் இருக்கும் என்று எண்ணிக் கொண்டவனாய்க் கைகழுவ எழுந்து சென்றான் அவன்.

'யார்... அந்த நிலவு...?

ஏன்.. இந்தக் கனவு...?'

மனதிற்குள் பாடல் ஒலிக்க.. பல வருடங்களுக்குப் பின்னால் அன்று அயர்ந்து தூங்கினான் அந்த இளம் தொழிலதிபன்



# 4

ஜெகந்நாதன் நுழைவதற்காக அந்தப் பெரிய கான்பரன்ஸ் ஹாலின் கதவைத் திறந்து விட்டான்

முகேஷ்.. அந்தக் கம்ப்யூட்டர் நிறுவனத்தின் ஜெனரல் மேனேஜர் என்ற பெரிய பதவியிலிருப்பவன் அவன்.

ஜெகந்நாதன் அவனுடைய இருக்கையில் அமர்ந்ததும் அந்த நீண்ட மேஜையின் இரு பக்கமும் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் மற்றவர்கள் அமர்ந்து கொண்டனர். மீட்டிங் ஆரம்பமானது...

''நம்முடைய புராஜெக்ட் வொர்க்.. முன்பைவிடத் தாமதமாக முடிவடைவதற்குக் காரணம் என்ன..?'' என்று தன் முதல் கேள்வியுடன் மீட்டிங்கை ஆரம்பித்து வைத்தான் ஜெகன்.

அடுத்து ஒரு மணி நேரம் அங்கு பல பிரச்னைகள் அலசி ஆராயப்பட்டன. சிலவற்றிற்குத் தீர்வு கிடைத்தது. சிலவற்றிற்குக் கிடைக்கவில்லை.

மீட்டிங் முடிந்து வெளி வந்தபோது ஜெகனுக்குத் தலை வலிக்க ஆரம்பித்தது. அவனுடன் நடந்து வந்த முகேஷ்.. அருகில் ஆள் இல்லாததை உறுதி செய்து கொண்டு...

''சார்.. நீங்கள் ரொம்ப டென்சனாக இருக்கறீங்க... கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொள்வது நல்லது...'' என்று சொன்னான்.

''இட்ஸ் ஆல்ரைட்.. முகேஷ்..'' என்று இயல்பாகக் கூறிக் கொண்டிருக்கும்போதே...

'ஒவ்வொரு 'இட்ஸ் ஆல்ரைட்..' என்ற வார்த்தைக்குப் பின்னாலும் ஓர் மன வலி ஒளிந்திருக்கும்..' என்ற அவளின் வார்த்தைகள் மனதில் ஒலித்தன.

'இப்போது நான் சொல்லும் இந்த 'இட்ஸ் ஆல்ரைட்.' என்ற வார்த்தைக்குப் பின்னால் ஒளிந்திருப்பது எந்த வகையான உணர்வு?'



''சார்.. ஆர் யூ ஆல்ரைட்..?'' முகேஷ் கவலையாக வினவினான்.

''யெஸ்.. யெஸ்.. ஐ ஆம் ஆல்ரைட்..'' ஜெகந்நாதன் அவசரமாய்ப் புன்னகைத்தான்.

முகேஷ் நிம்மதியுடன் விலகிச் செல்வதைப் பார்த்தவனுக்கு அவனது பதட்டம் புரிந்தது.

ஒரு கப்பலின் கேப்டன் நிலை தடுமாறாமல் கவனத்துடன் இருந்தால்தான்.. அந்தக் கப்பல் ஒழுங்காகச் செல்லும்.

அந்தக் கம்ப்யூட்டர் நிறுவனமும் ஒரு கப்பலைப் போலத்தான். ஜெகன் நிலை தடுமாறாமல்.. நிமிர்ந்து நின்றால்தான்.. அந்த நிறுவனமும் சீராக ஓடும்.

தன் தலை மேல் இருக்கும் பாரத்தை நினைத்துப் பெருமூச்சு விட்டபடி.. தன் அறைக்குள் நுழைந்தான் ஜெகன். சுழல் நாற்காலியில் அமர்ந்தபடி.. தலையைப் பிடித்துக் கொண்டு சுழன்றான்.

சற்று முன்னால் மீட்டிங்கில் அலசப்பட்ட பிரச்னைகள் அவன் மனதில் ஓடின. தலை வலிப்பது போல் இருந்தது... மனச் சோர்வை உணர்ந்தவன்.. அதை எப்படிச் சரி செய்வது என்ற யோசனையுடன் கண்களை மூடிக் கொண்டான்.. மனதில் மின்னல் வெட்டியது.

'அனாமிகா...' நிமிர்ந்து அமர்ந்தான்.

'அவளுடன் பேசிப் பார்த்தால் என்ன...' என்று தோன்றிவிட செல்போனை எடுத்து அவளை அழைத்தான்.

மறுமுனையில் மணியோசை போய்க் கொண்டிருக்க, அவன் படபடப்பாக உணர்ந்தான்.

'அவள் எடுப்பாளா.. இல்லை.. வேறு யாராவது எடுத்து விடுவார்களா..' என்ற பதட்டம் அவனுக்குள் பரவியது.

மறுமுனையில்.. ''ஹலோ..'' என்று கிளி கொஞ்சியது.

''அனாமிகா..'' என்றான் அவன் ஆனந்தத்துடன். மறுமுனையில் ஓர் கணம் மௌனம் நிலவியது...

''என்ன அனாமிகா.. பேச மாட்டாயா?''

''ம்ம்.. பேசலாம்.. ஆனால் இன்றைக்கு யாரைக் கேட் கப் போகிறீங்க..? அன்றைக்குப் போல் இப்ராஹிம்மையா.. இல்லை.. இந்திர ஜித்தையா?''

''ஐ ஆம் ஸாரி.. அன்றைக்குத் தவறுதலாக இப்ரா ஹிம்மின் நம்பரை அழுத்துவதற்குப் பதில் உன் நம்பரை அழுத்தி விட்டேன்.''

''அதாவது.. என்னை ராங் நம்பர்ன்னு சொல்கிறீங்க.''

'ஹலோ.. மைடியர்.. ராங் நம்பர்..' நேரம் காலம் தெரியாமல் ஜெகனின் மனதிற்குள் பாடல் ஒலித்தது...

மனதை ஓர் அதட்டல் போட்டு அடக்கி விட்டு...

''சேச்சே.. உன்னைப் போய் அப்படிச் சொல்வேனா.. நீ ரைட் நம்பராச்சே!'' என்றான் ஜெகந்நாதன்.

''பலே கில்லாடிதான் சார் நீங்கள். பிழைத்துக் கொள் வீர்கள்.''

''எப்படியோ.. உன் ஆசிர்வாதத்தால் என் பிழைப்பு நன்றாக நடந்தால் சரி..''

''உங்களுடைய கெட்டிக்காரத்தனத்திற்கு உங்கள் பிழைப்பு நன்றாகத்தான் நடக்கும்...''

''நான் என்ன அவ்வளவு கெட்டிக்காரனா..?''



''பின்னே இல்லையா.. வாங்க.. போங்க.. என்று பேச்சை ஆரம்பித்தவர்.. நைஸாக.. வா போன்னு பேச ஆரம்பித்து விட்டிங்களே...''

''என்னதான் இருந்தாலும் நான் வயதில் பெரியவன்.''

''எவ்வளவு பெரியவர்? தடியை ஊன்றி நடக்கும் தொண்டுக் கிழவரா..? இல்லை, நான்தான் பீடிங் பாட்டி லோடு உட்கார்ந்திருக்கும் குழந்தையா?''

''ஹா.. ஹா...''

''இப்படியொரு இடிச் சிரிப்பை இப்போதுதான் கேட் கிறேன். உங்களுக்குத் 'தருண்...' என்ற பெயரை வைத்த தற்குப் பதிலாக 'இடி அமீன்' என்ற பெயரை வைத் திருக்கலாம். அதுதான் பொருத்தமாக இருந்திருக்கும்...''

''ஊஹூம்.. இன்னும் என்னைப் பற்றி என்னவெல் லாம் நினைத்திருக்கிறாய்...?''

''நினைப்பதை யெல்லாம் சொல்லிவிட்டால்...

நினைவிற்கு மதிப்பில்லை...''

ஜெகந்நாதன் ஆச்சரியப்பட்டுப் போனான். இவ ளுக்குக் கவிதை சொல்லக்கூடத் தெரியுமா..? நினைத் ததை வாய் விட்டுக் கேட்டான்.

''ஏன்.. நான் கவிதை சொல்லக் கூடாதா..?'' என்று அவள் பதிலுக்குக் கேட்டாள்.

''அப்படியில்லை அனாமிகா.. நான் உன்னை விளை யாட்டுப் பெண் என்று நினைத்தேன்.''

''வேறு என்ன நினைத்தீர்கள்.''

**''நினைவு என்ன...**

**உனக்கு மட்டும்.. சொந்தமான ஒன்றா...?**

என் நினைவுகளும்...

பூட்டி வைக்கப்பட்ட பொக்கிஷம்தான்...''

ஜெகந்நாதன் பதிலுக்குக் கவிதை சொன்னான். மறு முனையில் அவள் பரவசமாய்ப் பதில் பேசினாள்.

''உங்களுக்கும் கவிதை தெரியுமா?''

''ஏன்.. உனக்கு மட்டும்தான் கவிதை சொந்தமா?''

''ஸாரி.. ஸாரி.. கவிதை பேசும் மனிதர்களைத் தேடி ஓய்ந்து விட்டேன்; தெரியுமா?''

அவள் ஆற்றாமையுடன் கூற... அவனோ,

''தெரியாதே...'' என்று விளையாட்டாய்ப் பதில் சொன்னான்.

''நிஜமாகத்தான்.. என் பிரண்ட்ஸிற்குக் கவிதை பிடிக்காது... நான் எழுதிக் காட்டினால் சிரிப்பார்கள்.''

''ஏன்..?''

''அவர்களுடைய இன்ட்ரெஸ்டே வேறு.''

''விடேன்.. நம்மைப் போல.. எல்லோரும் இருப்பார்களா?''

அவன் இயல்பாக.. 'நம்மை' என்று அவளோடு கூட்டுச் சேர்ந்து கொண்டான். அவளும் அதை மறுக்கவில்லை.

அடுத்து வந்த நாள்களில் விடியலின்போது அவனது கைபேசியில்.. குறுஞ்செய்தியின் வடிவில் கவிதை அவளிடமிருந்து தினமும் வந்து விடும்.



'நான் தேடும் நட்பு...

வள்ளுவரின் குறள் வார்ப்பாடம்...

வாய்ப்பதெல்லாம் புருட்டஸ் இனம்..'

அவளின் கவிதை அங்கலாய்க்கும்...

'தேடினால் கிடைக்காதது என்று

இந்த உலகில் எதுவுமேயில்லை...

நட்பைத் தேடு... நான் இருக்கிறேன்...

காதலைத் தேடு.. என் கையைக் கொடுக்கிறேன்..'

அவன் பதில் கவிதை அனுப்புவான்...

'நான் நட்பைச் சொன்னால் – நீ

நேசத்தைச் சொல்கிறாய்..'

என்று அவள் வினா எழுப்புவாள்.

'இரண்டிற்கும் பொதுவாய் இருப்பது...

இதயங்களின் சங்கமம்தானே...'

என்று அவன் பதில் கொடுப்பான்...

அவளுடன் கொண்ட முகமறியாத உறவில் அவனது இயந்திர மயமான நாள்கள் இதமாய் மாறின... கணினியுடன் உரையாடிச் சோர்ந்த பொழுதில்.. கன்னியுடன் உரையாடி மனச் சோர்விலிருந்து மீண்டான்.

பாரம் சுமந்தவன்.. பாரம் இறக்கினான். ஓடிக் களைத்தவன்.. மீண்டும் ஓட உற்சாகம் பெற்றான். தனிமையாய் உணர்ந்தவன்.. ஓர் துணையினைக் கண்டான்.

தினந்தோறும் எழுந்ததும்.. கைபேசியை எடுத்துக் குறுஞ் செய்தியின் வடிவிலிருக்கும் அவளது கவிதைகளைக் காணும் போது அவனுடைய அந்த நாளின் விடியல் அழகானதாக ஆரம்பித்து விடுவது போல் அவனுக்குத் தோன்றும்...

'புலர்கின்ற பொழுதில் – உன்
கவிகேட்டு விழித்தேன்...
இரவின் மடியில் – உன்
கவியோடு துயின்றேன்.'

அவனிடமிருந்து செய்தி போன மறுநொடியில் அவள் பதில் செய்தியைத் தந்தாள்.

'இதற்காகத்தானே நான்...
இத்தனை நாள் பொறுத்தேன்...
அரங்கேறும் என் கவிதையின்...
அழகை நான் ரசித்தேன்...'

சொல்லில் வடிக்க இயலாத ஓர் சொந்தம் அவர்களுக்குள் உருவாகியது... ஜெகந்நாதன் அந்த முகம் தெரியாத நிலவை முழு மனதாக நேசிக்க ஆரம்பித்தான்.

ஒரு நாள் கூட இடைவெளி கொடுக்காமல் அவர்கள் பேசிக் கொண்டார்கள். பகிர்ந்து கொள்ள அவனுக்கு ஆயிரம் விசயங்கள் இருந்தன... ஆயிரம் விசயங்களைப் பகிர்ந்து கொண்டவர்கள் அவர்களைப் பற்றிய விசயங்களை மட்டும் பகிர்ந்து கொள்ள மறந்து விட்டார்கள்.



# 5

ஜெகன் என்ற ஜெகந்நாதன் தன் பெயரைப் பற்றி மறைக்க நினைக்கவில்லை. மிகப்பெரிய கம்ப்யூட்டர் நிறுவனத்தின் முதலாளி.. பரம்பரைக் கோடீஸ்வரன் என்ற தன் பின்புலம் தெரிந்தால் அவள் இயல்பாக உரையாடுவாளா என்பதுதான் அவனது சஞ்சலமாக இருந்தது. எல்லோரின் முன்னாலும் கம்பீரமாய்த் தலையசைத்து.. அதிகமாகப் பேசாமல் இறுக்கமான முகத்துடன் வளைய வருபவன்.. அவளுடன் பேசும்போது.. தன் அடையாளங்களை யெல்லாம் மறந்து இயல்பாகப் பேசிடும் ஆர்வம் கொண்டான். முகமூடியில்லாமல் முழுமையாகத் தன்னை அவளுக்கு உணர்த்த ஆவல் கொண்டான். அவளுடைய வழியிலேயே.. தன் இதயத்தை மட்டும் உணர்த்தி முகமறியாமல் உறவாட ஆசை கொண்டான்.

என்று அவள் 'அனாமிகா...' என்ற பொய்ப் பெயரைத் தவிர்த்துத் தன் உண்மையான பெயரைச் சொல்லுகிறாளோ.. அன்று.. தான் 'தருண்' அல்ல.. 'ஜெகன் என்ற ஜெகந்நாதன்..' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது அவனது எண்ணம்.

அவனுடைய அந்த முடிவினால்.. பின்னாளில் அவன் அந்த முகமறியாத நிலவின்.. முகமறியாமல் பிரிந்து விட நேருமென்று அவன் எண்ணிப் பார்க்காமல் போனான்.

'நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்..

தெய்வம் ஏதுமில்லை...'

கவிதை சொல்பவன் கவிஞரின் இந்த வரிகளை ஏன் நினைக்க மறந்தான்..?

'ஏழைகளின் ஆசையும்...

கோவில் மணியோசையும்..

வேறுபட்டால் என்ன செய்வது...?'

இதுவும் கண்ணதாசனின் கவி வரிகள்தான். ஒரு வேளை தான் ஏழையில்லையே. கோடீஸ்வரன் ஆயிற்றே. ஏழைகளின் ஆசைதான் கோவில் மணியோசையுடன் வேறுபடும்.. தன்னைப் போன்ற கோடீஸ்வரனின் ஆசை கோவில் மணியோசையுடன் ஒன்றுபடும் என்று அவன் நினைத்து விட்டானோ என்னவோ...

பாவம்.. மாடி வீட்டு ஏழையான.. அந்தக் கோடீஸ் வரன்.. பொருளும்.. புகழும்.. பணமும் அவனிடம் கொட்டிக் கிடக்க.. உண்மையான அன்புடன் உறவாட.. ஓர் காதலை வேண்டி நின்றது அந்த இறைவனுக்குப் பொறுக்காமல் போகும் என்று அவன் கனவா கண்டான்...?

''என்ன படித்திருக்கிறாய் அனாமிகா..?'' என்று அவன் வினவியபோது.

''படிப்பில்லாவிட்டால் என்னுடன் பேச மாட்டீர்களா..?'' என்று பதில் சொல்லி விட்டவளிடம்.. மேற்கொண்டு அவளைப் பற்றிய விவரத்தை அறிய அவனால் முடிய வில்லை.

இருந்தும் அவன் முயன்றான்தான். ஆனால் அவள் தெளிவாகப் பதில் சொல்லி விட்டாள்.



''என் முகமறிய முயற்சி பண்ணாதீர்கள்.''

''ஏன் அனாமிகா?''

''வேண்டாம்.. இது தற்காலிக சந்தோசம்.. இது நிரந் தரம் கிடையாது. நிரந்தரமாகவும் முடியாது..''

''ஏன் முடியாது..? முடியாதது என்ற ஒன்று என் அக ராதியிலேயே இல்லை. என்னால் எதுவும் முடியும்.''

''ஆனால்.. என்னால் என் வீட்டுப் படி தாண்ட முடி யாது.''

''அவ்வளவு தூரத்திற்கு ஏன் போக வேண்டும்? என்னை உன் வீட்டில் மறுக்க மாட்டார்கள்...''

''அது உங்களின் நம்பிக்கை... நீங்கள் உலகையே ஆளும் ராஜாவாக இருந்தாலும்.. என்னைப் பெற்றவர் கள் உங்களை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்...''

''ஏன்.. எனக்கென்ன குறை...? நான் யார் தெரியுமா?''

''தயவு செய்து எனக்கு அது தெரிய வேண்டாம்.''

''அதுதான் ஏன்..?''

''என் வீட்டில் இனம்.. சொந்தம்.. ஜாதகம் என்று ஆயிரம் பார்ப்பார்கள்.. இதையெல்லாம் தாண்டி.. உங்கள் வீட்டு மனிதர்களையும் எங்கள் வீட்டில் உள்ளவர்களுக் குப் பிடித்திருக்க வேண்டும்.. இவ்வளவையும் தாண்டி.. வர உங்களால் முடியாது..''

''அதை முதலிலேயே நீ முடிவு செய்து விட்டால் எப்படி.. நீ முதலில் உன்னைப் பற்றிய விவரங்களைச் சொல்லு...''

''நான் அனாமிகா...''

''ம்ச்... ஏன் இப்படி என்னை வதைக்கிறாய்?''

''இதை ஆரம்பித்து வைத்தது நீங்கள்தானே.. வதை படுவதும் நீங்கள் மட்டுமல்ல.. நானும்தானே.''

''நான் சொல்வதைக் கொஞ்சம் காது கொடுத்துக் கேட்க மாட்டாயா?''

''என் காதுகளை... செல்போனுக்குக் கொடுத்துத்தான் இருக்கிறேன்.''

அவள் பேச்சைத் திசை மாற்றிச் சிரித்துக் கொண்டே போனைத் துண்டித்து விட்டாள். இரண்டு நாட்கள் கழித்துப் பேசும்போது அவன் திரும்பவும் தன் முயற்சியை ஆரம் பித்தான்.

''நீ உன்னைப் பற்றிச் சொல்ல வேண்டாம். நான் என்னைப் பற்றிச் சொல்கிறேன். அதையாவது கேள்.''

''எதற்குக் கேட்க வேண்டும்..?''

''ஒருவேளை.. நான் உன் இனமாக இருந்தால்.''

''ஒருவேளை நீங்கள் அப்படி இல்லாமல் போனால்...? அப்போது நான் நிராகரித்துத்தானே ஆக வேண்டும்?''

''ஏன் எப்போதும் நெகடிவ்வாகவே பேசுகிறாய்?''

''பாஸிடிவ்வாய்ப் பேசிப் பிரயோஜனமில்லை...''

''உன் ஊர் எது என்று சொல்லு..?''

''எதற்காக?''

''நான் வந்து.. உன் அப்பாம்மாவிடம் பெண் கேட் கிறேன்.''

''வேறு வினையே வேண்டாம்.''

''ஏன் அப்படிச் சொல்கிறாய்?''



''நீங்கள் என் இனமாக இருக்கிறது.. சொந்தமாக இருந்தது. ஜாதகம் பொருந்தி.. உங்கள் மனிதர்களை எங்கள் வீட்டு ஆள்களுக்குப் பிடித்து.. கல்யாணமே நிச்சயம் ஆனாலும்.. நீங்கள் என்னைக் காதலிப்பதாக ஓர் வார்த்தை சொல்லி விட்டால்.. என் வீட்டில் கல்யாணத் தையே நிறுத்தி விடுவார்கள்.''

''ஏன்..?''

''ஏன்.. இந்த ஏன் என்ற கேள்விக்கு விடை சொல் லியே என் ஆயுள் முடிந்துவிடப் போகிறது. என் வீட் டாருக்குக் காதல் என்ற வார்த்தையே பிடிக்காது சார்.. பெரிய வங்க பார்த்துக் கல்யாணம் பண்ணி வைப்பதுதான் நிலைக்கும்ன்னு சொல்வாங்க.''

''அவங்க சொல்வது இருக்கட்டும்.. நீ என்ன சொல் கிறாய்?''

''நான் சொல்ல என்ன இருக்கிறது..?''

''எதுவும் இல்லையோ...?''

ஜெகன்.. ஆழ்ந்த குரலில் வினவினான்.. மறுமுனை மௌனமாகி விட்டது.. ஜெகனின் மனதில் அலையடித்தது.

'பேச மாட்டாள். நெருப்புக் கோழி மணலிற்குள் தலையைப் புதைத்துக் கொண்டு தப்பிக்க முயல்வது போல.. இவள் மௌனத்திற்குள் புகுந்து கொண்டு தப் பிக்கப் பார்க்கிறாள்..' அவன் மனம் கடுத்தது.

''ஏன் பேச மாட்டேன் என்கிறாய்..?''

''ஏன் என்ற கேள்விகளை நீங்கள் என் முன் வைப்பது ஏன்..?''

''அனாமிகா...''

''ம்ம்.. நான் அனாமிகாதான்.. பெயரில்லாதவள்.. முகம் தெரியாதவள்.''

''நம்மிடையே இருக்கும் இந்த பந்தத்திற்குப் பெயர் இல்லையா?''

''எனக்குத் தெரியவில்லை.''

''சற்று முன் காதல் என்று சொன்னாயே...''

''அதை நீங்கள்தான் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்.''

''சரி.. நான் சொல்லிக் கொண்டிருப்பதாகவே இருக்கட்டும்.. அதை நீ மறுக்கவில்லையே...''

''ஏற்கவும் இல்லை...''

''இது கெட்டிக்காரத்தனமான வாதம்.''

''நான் கெட்டிக்காரியில்லை. பிணைக்கப்பட்டவள்.. பிறந்ததில் இருந்து என் முன் கோட்டைப் போட்டு.. அதைத் தாண்டாமலிருக்கும்படி சொல்லிச் சொல்லி வளர்த்திருக்கிறார்கள். என் கால்களில் இரும்புக் குண்டு பிணைக்கப்பட்டிருக்கிறது. நான் கால்களை அசைக்கக் கூட முடியாது.''

அவளது குரலில் பொங்கி வழிந்த துயரத்தில் அவன் இப்போது பேச்சை இழந்தான். இது என்ன சோதனை..?

''அனாமிகா..''

''வேண்டாம்.. இதைப் பற்றிப் பேசாதீர்கள். சிறகு வெட்டப்பட்ட கிளியினால் பறக்க முடியாது.''

''நீ ஏன் வாசல் படியைத் தாண்ட வேண்டும்? எனக்கு அனுமதி மட்டும் கொடு. நான் வீடு புகுந்து உன்னைத் தூக்கிக் கொண்டு வந்து தாலி கட்டுகிறேன்.''



அவள் மெலிதாக நகைத்தாள்.

''பெரிய பிருத்விராஜன்தான் போங்க.. நினைப்பெல்லாம் பலமாக இருக்கிறது. ஆனால் சார்.. நான் சம்யுக்தை இல்லை.. பிருத்விராஜனின் சிலைக்கு மாலை போட அவளால் முடிந்தது. ஆனால் என் வீட்டில் யாரைக் கை காட்டுகிறார்களோ அவரின் முகத்தைக் கூடச் சரியாகப் பார்க்காமல் கழுத்தை நீட்ட வேண்டிய நிலையில் நான் இருக்கிறேன். அதனால் கனவு காண்பதை நிறுத்தி விட்டு வேலையைப் பார்க்கிறீர்களா?''

அவள் போனைத் துண்டித்து விட்டாள். மனதில் கனமேற ஜெகன்.. வேலைகளில் மூழ்கிப் போனான். அடுத்த ஒரு வாரமும் அவளுடன் பேச முயன்று தோற்றுப் போனான். அவளது போன் அணைக்கப்பட்டிருந்தது.

ஒரு வாரம் அவன் தவித்து முடித்தபோது.. ஓர்நாள் அதிகாலையில் அவனது அலைபேசியில் குறுஞ்செய்தி வந்தது.

'பூக்கள் பூக்கும் பொழுதை...

புலரும் விடியல் அறியுமா?'

அவன் மலர்ந்து போனான். உடனே மறுகவிதையைச் செய்தியாய் அனுப்பினான்.

'பூக்கள் மலர்வது யாருக்காக..?'

அவள் மறுநாள் பதில் கொடுத்தாள்.

'நீலக்கடல் ஓரத்திலே..

நிதமும் எழுந்து உலாவரும்..

கதிரவனின் வரவுக்காக...

கமலமுகம் மலர்ந்ததுவோ...?'

அவன் ரசித்துப் படித்துவிட்டு மறுகவிதையை அனுப்பினான்.

'ஏன்... இரவில் வரும் இதமான..

இதயத்தினை வருடிக் கொடுக்கும்..

வெண்நிலவில் மலர்ந்திடவே...

அல்லிமலர் விரும்பாதோ...?'

அன்று முழுவதும் அவளது பதிலைப் பார்க்கத் தவித்தான். அவள் மறுநாள் பதில் கொடுத்தாள்.

'ஏனென்ற கேள்வியின்றி...

நீங்கள் இருக்க முடியாதோ..?'

அதன்பின் காதலைச் சொல்லாமல் கவிதையை மட்டும் சொன்னான்.. அவளது பிரிவு தரும் வேதனையைத் தாங்கிக் கொள்வதை விட.. காதலில்லாமல் இருப்பதைத் தாங்கிக் கொள்ளலாம் என்று அவனுக்குத் தோன்றி விட்டது.. அந்த அளவுக்கு.. அவளின் அன்புக்காக அவன் ஏங்கிக் கிடந்தான்...

ஆனால்.. ஓர் நாள்.. அவள் அவனைப் பிரிந்தாள்... அவனது மனம் வலிக்கும் என்பதை அறிந்த பின்னும்.. பிரிவுச் செய்தியைக் கூறினாள். அது நிகழக் கூடும் என்பதை யூகித்திருந்தவனுக்கு.. அது நிகழ்வதாக நிகழும்போது தாங்க முடியாமல் போனது.





# 6

"யார் அந்த நிலவு...?

ஏன் இந்தக் கனவு...?

யாரோ சொல்ல.. யாரோ என்று...

யாரோ தந்த உறவு...

காலம் செய்த கோலம்...

இங்கு நான் வந்த வரவு..."

காரினில் பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. கண் மூடிப் பாடல் வரிகளில் தன்னைக் கரைத்துக் கொண்டிருந்தான் ஜெகன். எஜமானரின் அந்த மோனத் தவத்தைக் கலைக்க விரும்பாதவனாக அமைதியாய்க் காரைச் செலுத்திக் கொண்டிருந்தான் டேவிட்.

'ஏன்... எம்டி.. இப்போதெல்லாம் இந்தப் பாட்டை மட்டுமே கேட்டுக் கொண்டிருக்கிறார்?' அவன் மனதில் சமீப காலமாகத் தோன்றியிருந்த சந்தேகம் இது.

'ஏனென்ற கேள்வியின்றி உங்களால் இருக்க முடியாதா?' என்று அந்த முகம் தெரியாத நிலவுப் பெண் அவனைப் பார்த்து அன்று கேட்டாள்...

இன்றோ... தன்னைச் சுற்றியிருக்கும் எல்லோரையும் 'ஏன்..' என்று கேட்க வைத்து விட்டு ஜெகன்.. மௌனத்திற்குள் தன்னை மூழ்கடித்துக் கொண்டான்.

ஒரு சிடி பூராவும்.. ஒரே பாடலை மட்டும்.. பதிவு செய்து வைத்து.. அதை மட்டும் இருபத்து நான்கு மணி நேரமும் கேட்டுக் கொண்டிருந்தால்.. எல்லோரின் மனதிலும்,

'ஏன்..' என்ற சந்தேகம் முளைக்காதா என்ன..?

செல்போனில் மணியோசையும் இதே பாட்டு... காரின் ஹாரன் ஒலியும் இதே பாட்டு என்று இருந்தால்.. ஜெகனின் மேல் அக்கறையும்.. பாசமும் உள்ளவர்கள் கவலை கொள்ள மாட்டார்களா...?

சிவகாமியும் தன் மகனைக் குறித்துக் கவலை கொண்டாள். தன் சின்ன மகனிடமும்.. மகளிடமும் இது குறித்து ஆலோசனை செய்தாள்.

''ஏன்டி.. உன் அண்ணன் இப்படி ஆகிவிட்டானே.. என்னவாக இருக்கும்?''

''அது பிறவிக் கோளாறு அம்மா.. திருத்தவே முடியாது.''

''ஏய்ய்.. நான் உன் பெரிய அண்ணனைப் பற்றிச் சொன்னேன்டி.. நீ ஏன் சின்னவனை முறைத்துக்கிட்டு இப்படிப் பதில் சொல்கிற..?''

''ஏம்மா.. சொல்வதை ஒழுங்காகச் சொல்லக் கூடாதா? இந்த வாலில்லாத குரங்கை முன்னால் வைத்துக் கொண்டு சொன்னால்.. நான் என்னவென்று நினைப்பது...?''

தமையனைப் பற்றிய பேச்சு என்பதால் பொறுப்பாகச் சிந்தித்துக் கொண்டு உட்கார்ந்திருந்த ராமநாதன் சிலிர்த்துக் கொண்டு தங்கையிடம் சண்டைக்கு வந்தான்.



''உன்னோடு பிறந்து தொலைத்து விட்டால் நானும் குரங்கு ஆகிவிடுவேனா.. பார்த்துப் பேசு.. இல்லாவிட்டால்...''

''இல்லாவிட்டால்..? என்ன செய்து கிழித்து விடுவாய்?''

''உன் பல்லைத் தட்டிக் கையில் கொடுத்து விடுவேன்.''

''அடேங்கப்பா.. நீ பல்லைத் தட்டுவதற்காக நான் என் பல் வரிசையை 'ஈ...'யென்று உன்னிடம் காட்டிக் கொண்டு நிற்பேனா..? இல்லை, என் கைதான் பூப் பறிக்கப் போய் விடுமா?''

இரண்டு பேரும் சண்டைக்குத் தயாராக.. சிவகாமி இருவரையும் அதட்டினாள்.

''இரண்டு கழுதைகளுக்கும் கொஞ்சம் கூடப் பொறுப்பில்லை.''

''அம்மா.. அவனை வேணும்னா.. கழுதைன்னு சொல்லுங்க.. என்னையும் அந்தக் கணக்கில் சேர்க்காதீங்க...''

''ஏய்ய்.. அடங்குடி.. பெண் பிள்ளையா லட்சணமா.. பொறுத்துப் போகிறாயா? எப்பப் பாரு, அவன்கூடச் சரிக்குச் சரி மல்லுக்கு நின்று கொண்டு... அவன் உன்னைவிட வயதில் மூத்தவன்..''

''அதுக்காக...?''

''அதுக்காகவாவது கொஞ்சம் மரியாதை கொடுத்துப் பேசேன்டி.''

''அதெல்லாம் இவனுக்கு இப்பக் கொடுக்கிற மரியாதையே அதிகம். ஆனாலும் பெரிய அண்ணனைப்

பற்றிய பேச்சு என்பதால் நான் பொறுமையாக உட்காரு கிறேன். அதைப் போல.. இவனையும் என்னிடம் வம்பு வளர்க்காமல் உட்காரணும்னு சொல்லுங்க.''

சிவகாமி சின்ன மகனைக் கெஞ்சுவது போல் பார்த் தாள். அவனும் கறாராக் குரலில் பேசினான்.

''நானும் அண்ணனுக்காகத்தான் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். அவர் வாயை அடக்கி இருந்தாலே போதும். நான்.. ஏன் அவள் வம்புக்குப் போகப் போகி றேன்?''

''பாருங்க பிள்ளைகளா.. நீங்கள் சின்னப் பிள்ளை களாகவே இன்னும் துள்ளிக்கிட்டுத் திரிவதற்குக் காரணம் உங்கள் அண்ணன்தான்.. பொறுப்பை அவன் எடுத்துக் கிட்டு... சந்தோசத்தை உங்களுக்குக் கொடுத்து விட்டான். ராம்.. உன் வயதில் உன் அண்ணன் உன்னைப் போல விளையாட்டுத் தனமாய் இல்லைடா...''

''எனக்கு அது தெரியாதா அம்மா...''

''இன்றைக்கு என் பிள்ளை எதையோ பறி கொடுத்தது போல் அலைகிறான்.. எப்போது பார்த்தாலும்.. அந்தப் பாட்டைக் கேட்டுக்கிட்டு மறுகுகிறான்.''

''சம்டைம்ஸ்.. அண்ணா.. அந்தப் பாட்டைப் பாடிக் கிட்டும் அலைகிறார்ம்மா..''

''இது வேறா..? இது எங்கே போய் முடியுமோ தெரிய வில்லையேடா... ஏன்டா ராம்.. நீதான்.. ப்ரீதாவை விடப் பெரியவன்... ஆண் பிள்ளை.. நீ இதற்கு ஒரு வழியைச் சொல்லேன்டா...''

ராமநாதன் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டு தங் கையைப் பார்த்தான்... அவளோ அலட்சியமாக...



''டேய்... அடங்குடா... முதலில் அம்மா கேட்பதற்கு நல்ல வழியைக் கண்டு பிடித்துச் சொல்லு...'' என்றாள்.

''அம்மா.. அண்ணன் கேட்கும் பாட்டை நீங்க கேட் டிங்களா?''

''முழுதாய்க் கேட்டதில்லையேடா.. என்னவோ.. நிலா.. நிலான்னு வருமே...''

''ஆமாமாம். நிலா.. நிலா.. ஓடிவா.. நில்லாமல் ஓடி வான்னு வரும்.. ஏம்மா நீங்க வேற... ஏய் ப்ரீதா.. உனக்கு அந்தப் பாட்டுத் தெரியுமா?''

''எனக்கு அந்தப் பாட்டெல்லாம் தெரியாது... அடி அழகே... உலக அழகேன்னு பாடச் சொல்லு.. பாடு கிறேன்.''

''எல்லாம் ஞான சூன்யங்கள்.''

''யாரைடா சொல்கிறாய்...?''

''உன்னையும்.. அம்மாவையும்தான் சொல்கிறேன்.. இந்த வீட்டில் இருக்கும் இரண்டு பெண்களுக்கும் ரசனையே இல்லை...''

''பார்த்தீங்களாம்மா... இதற்குத்தான் நான் முதலிலேயே சொன்னேன்.. இவன் வாயை அடக்கி இருக்க மாட்டான் அம்மா...''

''பொறுடி. அவன் உன்னை மட்டுமா சொன்னான்? என்னையும்தான் சொன்னான். ஏன்டா ராம்...''

''சொல்லுங்க...''

''உனக்கு அந்தப் பாட்டுத் தெரியும்தானே...''

''தெரியும்.''

''நீதான் அந்தப் பாட்டைப் பற்றிக் கொஞ்சம் சொல் லேன்.''

''அம்மா.. அதில் வரும் முக்கியமான வரிகளை மட்டும் பாடுகிறேன் கேளுங்க...''

ராமநாதன் சன்னக் குரலில் பாடினான்.

''மாலையும் மஞ்சளும்

மாறியதே ஒரு சோதனை...

மஞ்சமும் நெஞ்சமும்

வாடியதே பெரும் வேதனை...

தெய்வமே... யாரிடம்...

யாரைத் தந்தாயோ...

உன் கோவிலின் தீபம் மாறியதை

நீ அறிவாயோ...''

ப்ரீதா கூட அமைதியாகி.. அந்தப் பாடலின் வரிகளை உள்வாங்கினாள். சிவகாமியம்மாளின் முகத்தில் சிந்தனை படிந்தது. ராமநாதன் தாயை ஏறிட்டான்.

''என்னம்மா... ஏதாவது புரிகிறதா?''

''ராம்.. உன் அண்ணன் யாரையோ காதலித்திருக் கிறான்.''

''யெஸ்.. இது லவ் பெயிலியர்தான்.''

''அம்மா.. ராம் சொல்வதுதான் கரெக்ட். மஞ்சமும்.. நெஞ்சமும் வாடியதே பெரும் வேதனைன்னு பாட்டு வருது...''



''ஆமாண்டி... இப்ப இதுதான் ரொம்ப முக்கியம்.. எனக்குன்னு பெண்ணாய் வந்து பிறந்தாயே...''

''ஏம்மா... பாட்டைப் பற்றிச் சொன்னால்... நீங்க ஏன் இவ்வளவு டென்சன் ஆகிறீங்க.''

''காதலைப் பற்றிப் பேசுகிற வயசாடி உனக்கு..?''

''அப்புறம் ஏன்.. என்னையும் உட்காரச் சொன்னீங்க..? நீங்களே உங்க சின்ன மகனிடம் பேசி ஒரு முடிவுக்கு வந்திருக்கலாமே...''

ராமநாதனுக்குச் சிவகாமியின் கோபத்தைக் கண்டு சிரிப்பு வந்து விட்டது.

''அம்மா.. இப்ப அவள் என்ன தப்பாகச் சொல்லி விட் டாள்ன்னு இப்படிக் கோபப்படுகிறீங்க?''

''உனக்குத் தெரியாது ராம்.''

''எனக்கும் தெரியும்.. அவளுக்கும் நல்லது.. கெட்டது தெரியும். ப்ரீதாவைப் பற்றிய கவலையை விட்டு விட்டு.. அண்ணனுடைய மேட்டருக்கு வாங்க.''

சிவகாமியம்மாள் யோசனையோடு அமர்ந்து விட் டாள். அவள் வாயைத் திறந்து பேசுகிற வழியைக் காணோம். பொறுத்துப் பொறுத்துப் பார்த்த ராமநாதன்.. கடைசியில் பொறுமை யிழந்தவனாய்,

''அம்மா..'' என்றான்.

''என்னடா..?''

''ஏதாவது வழி கண்டு பிடித்தீர்களா..''

''அதுதான்டா.. ஒரு கழுதையும் புரிய மாட்டேங்குது.''

'ம்ஹூம்.. இதுக்கா இப்படி சாக்ரடீஸ் போல பில்ட் அப் கொடுத்திங்க...' என்று மனதிற்குள் நினைத்துக்

கொண்ட ராமநாதன் ப்ரீதாவைப் பார்த்தான். அவளும் அதே நினைவுடன் அவனைப் பார்த்தாள்.

சிவகாமி மீண்டும் நெற்றியில் ஒரு விரலைக் கொண்டு தட்டியவாறு யோசனையில் ஆழ்ந்தாள். ராமநாதன் முன் பக்கமாய்ச் சரிந்து தாயைப் பார்த்தான்.

''ஏம்மா.. அதுதான்.. ஒரு யோசனையும் வர மாட்டேன் என்கிறதே. அப்புறமும் ஏன்.. தலையைப் போட்டுக் குழப்பிக்கறீங்க... இதில வேறு நெற்றியில் டொக்கு.. டொக்குன்னு தட்ட வேறு செய்கிறீங்க.. நெற்றி புண்ணாகிப் போய் விடும்.. நிறுத்துங்க.''

''ஏன்டா.. என் வேதனை... உனக்குக் கிண்டலாகப் போச்சா.''

''நான் அப்படிச் சொல்லவில்லைம்மா.. எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது.. அதைச் சொல்லட்டுமா?''

''சொல்லு... சொல்லு.''

''அண்ணன்கிட்ட நாங்க இரண்டு பேரும் பயப்படுவோம்.''

''அவன் என்ன பூச்சாண்டியா - நீங்கள் பயப்பட?''

''அட.. மரியாதையாக இருப்போம்.. போதுமா..?''

''போதும்.. விசயத்துக்கு வா.''

''அண்ணன்.. யாரு கிட்ட பயப்படுவார்..? இல்லை.. மரியாதையாய் இருப்பார்... இன்னும் சரியாய்ச் சொல்லணும்னா... யார் பேச்சைத் தட்ட மாட்டார்...?''

சிவகாமியின் கண்களில் ஒளி வந்தது... சின்ன மகனை நன்றியோடு பார்த்தாள்....



''என் தம்பியின் பேச்சைத் தட்ட மாட்டான்.''

''புரியுதா? அந்த வீச்சரிவாள் வெங்கடாசலம் கிட்ட பிரச்னையை விடுங்க.. அவர் பார்த்துக்குவார்...''

''டேய்... ராம்.. இப்பத்தான்டா... முதன் முதலா நீயும் உருப்படியாய் ஒரு யோசனை சொல்லியிருக்கே...''

''காரியம் முடிஞ்சாச்சுன்னா.. கலாய்க்க ஆரம்பித்து விடுவீங்களே.. ம்ஹூம்.. இந்தப் பெண்களே... இப்படித் தான்.''

ராமநாதன் வாயைவிட... ப்ரீதா.. அவன் மேல் பாய்ந்தாள்.



# 7

மண் வாசனை மணக்கும் உசிலம்பட்டி.. அதன் அருகில் இருக்கும் ஆண்டிபட்டி... அதை ஒட்டி இருக்கும் சுப்புலாபுரம் கிராமம்.

வீரம் விளைந்த மண் என்பது அங்கிருக்கும் ஆண்குலத்தின் மீசையைப் பார்த்தாலே தெரிந்து விடும்... ஒவ்வொருவரும் கடா மீசையை முறுக்கிக் கொண்டு.. வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு நிமிர்ந்து நடப்பார்கள்...

அந்த மீசைப் பரம்பரை ஊரில்.. வீச்சரிவாள் வெங்கடாசலத்தின் வீடுதான் முதன்மையான வீடு. பண்ணையார் வீடு என்று பெயர் பெற்ற வீடு...

வீச்சரிவாள் வெங்கடாசலம் வருகிறார் என்றால்.. அந்த எட்டுப் பட்டிக் கிராமமும் பயபக்தியுடன் நேராக நடக்கும்... அவர் பஞ்சாயத்துப் பண்ண வந்து உட்காரந் தால்.. எப்படிப்பட்ட சிக்கலான பிரச்னைகளுக்கும் ஒரு தீர்வு கிடைத்து விடும்.

''எலே.. மருது.. என்னலே விவகாரம் பண்ணிக்கிட்டு இருக்க..?''

''இல்லேங்கய்யா.. அது என் மாமன் மக.. கட்டிக்கப் போகிற முறை மாமன் நானு... அதனால...''

''அதனால...? பள்ளிக்கூடம் போகிற பிள்ளையை வழி மறிச்சுக் கையைப் பிடிச்சு இழுத்தியாக்கும்?''

''சும்மா பேசத்தாங்கய்யா போனேன்... அது பயந்து ஓடப் பார்த்துச்சு... அதான்.. கையைப் பிடிச்சு நிறுத்தி னேன்...''

''ஊர் அப்படியா சொல்லும்? கூடப் படிக்கிற பொம் பளைப் புள்ளைக மத்தியில் அப்படி நீ நடந்துக்கிட்டா... அந்தப் பிள்ளை எப்படிப் பள்ளிக்கூடத்துக்குப் போயி படிக்கும்...?''

''அது என்ன படிச்சு பெரிய கலெக்டர் ஆகப் போகு தாக்கும்? என்னைக்கு இருந்தாலும் என் வீட்டு அடுப் படியில வந்து அடுப்பெரிக்க வேண்டியவதானேய்யா...''

''அடிச்சுப் பல்லைப் பேர்த்திடுவேன் படவா... அடுப் படியில் ஆக்கிப் போடுறதுக்கு மட்டுமா பொம்பளைப் பொறப்பு பொறந்திருக்கு. இளப்பமா பேசாதே... அது படிச்சுப் பெரிய ஆளாகிடும்ன்னு நினைச்சுத்தான், கழுத்தில ஒரு தாலியைக் கட்டி... மூலையில முடக்கிப் புடலாமுன்னு கையைப் பிடிச்சு இழுத்தியோ...''



''ஐயோ... அப்படியெல்லாம் இல்லீங்க ஐயா...''

''நீ முறை மாமனா இருந்தாலும்.. பெத்தவங்க கையைப் பிடிச்சு உன் கையில் ஒப்படைக்கிற வரையில.. அது ஊரான் வீட்டுப் பொண்ணுதான். அதனால.. கல் யாணம்ன்னு ஒண்ணு நடக்கிற வரைக்கும்.. இப்படிக் கையைத் தொட்டுப் பேசுறது.. காடு.. கழனியில வழியை மறிக்கிறது.. ஒத்தையடிப் பாதையில.. ஒத்தையாய்ப் பள் ளிக்கூடம் போய்விட்டு வருகிற பிள்ளைகிட்ட மைய லாய் வழியறது... இனயெல்லாம் மூட்டை கட்டி வச் சிட்டு... ஒழுங்கு மருவாதையா நடந்துக்க... ஆமாம்.. சொல்லிப்புட்டேன்.''

''சரிங்கய்யா..''

''எலே கிருஷ்ணா.''

''ஐயா...''

''வம்பிழுத்தது யாரு...? உன் தங்கச்சி மகன்தானே.. பஞ்சாயத்து கூட்டாம நீயாய்ப் புத்தி சொல்லி அனுப்ப வேண்டியதுதானே.''

''ஐயா.. என் புள்ள படிக்கணும்னு கனவு கண்டுகிட்டு இருக்கு.. அது படிச்சு பெரிய கலெக்டரா ஆகக் கூடா துன்னு சட்டம் எதுவும் இருக்காயா? இந்தப் பயல் சொன் னால் கேட்டுக்கிற ரகமில்லங்கய்யா.. பிள்ளையைத் தொந் தரவு பண்ணாம இவன் இருக்கணுமின்னா.. பஞ்சாயத்து கூட்டுறதைத் தவிர எனக்கு வேறு வழியில்லங்கய்யா...''

''போகுது போ... பொம்பளப் புள்ள படிக்கணுமின்னு ஆசைப்படறே. அதனால பொறுத்துப் போகிறேன். இனி மேல் இப்படி வெட்டியாய் யாராவது வீண் பஞ்சாயத் தைக் கூட்டினால் பொளந்து கட்டிப் புடுவேன்.

ஜாக்கிரதை.. ஆமாம்.. உன் புள்ள எத்தனாம் கிளாஸ் படிக்குது...''

''பன்னிரண்டாம் கிளாஸ் படிக்குதுங்கய்யா.''

''பரவாயில்லை. நல்லாப் படிக்க வைக்கிற... படிக்க வை.. படிக்க வை.''

வெங்கடாசலம் தன் முறுக்கு மீசையைத் தடவியவாறு பேசி விட்டு எழுந்து கொண்டார். அவருடைய கணக்குப் பிள்ளை அருகில் வந்து கார் கதவைத் திறந்து விட்டார்.

''ஏன் ரத்தினம்.. அப்படியே ஒரு நடை டவுனுப் பக்கம் போயி.. ஜவுளிக்கடை எப்படி ஓடுதுன்னு பார்த்திட்டு வந்திரலாமா?''

''அதுக்கென்னங்கய்யா.. போய் விட்டால் போகிறது.''

ரத்தினவேல் காரின் பின்பக்கம் ஏற முயலும்போது.. வெங்கடாசலத்தின் போன் அடித்தது.. அவர் மனைவி பத்மாவதி பேசினாள்.

''என்ன பத்மா.. என்ன சமாச்சாரம்..?''

''ஊர் பஞ்சாயத்தை முடிச்சிட்டிங்களா..?''

''என்னடி.. ஒரு மார்க்கமா பேசறே.. நீ வீட்டுப் பஞ்சாயத்தை ஆரம்பிக்கிறாயா?''

''நான் ஆரம்பித்தாலும்.. நீங்க கேட்டு விட்டு வேறு வேலை பார்க்கிற ஆள்தான்.''

''அப்படி என்னடி.. நீ சொல்லி நான் கேட்காமல் போனேன். நீ சொன்னதைத் தட்டாதவன்டி உன் புருசன்.''

''அதை நீங்கதான் மெச்சிக்கணும்.''

''ஏன்.. நீ மெச்ச மாட்டாயா?''



''நம்ம பஞ்சாயத்தை விடுங்க.. இங்க வேற பஞ்சாயத்து உங்களுக்காக ஊரிலிருந்து வந்து காத்துக் கிட்டு இருக்கு...''

''என்னடி சொல்ற...?''

''வீட்டுக்கு வாங்க... சின்னக் கவுண்டரேன்னு சொல்றேன்.''

''அடேங்கப்பா... பகடி பேசி ஆளைக் கவிழ்க்கிறதில நீ பெண் புலிடி... ஆமா... ஊரிலிருந்து யார் வந்திருக்கிறது..?''

''ம்ஹூம்.. சென்னையிலிருந்து உங்க அக்கா வந்திருக்காங்க.''

''என்னது.. என் அக்கா வந்திருக்கா.. அதையேன்டி நீ முதலில் சொல்லலை...''

''அதான் இப்ப சொல்லிட்டேனே... அப்புறமென்ன..?''

''ஏன்டி.. கதையாய் இழுத்துப் பேசிட்டு.. கடைசி.. கடைசியாய் என் அக்கா வந்திருக்கிறதைச் சொல்கிற... இது எப்படி இருக்கு தெரியுமா?''

''எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும்.. நீங்க இந்த ஊர் பஞ்சாயத்து முடிஞ்சிருச்சுன்னு.. வேற ஊரு பஞ்சாயத்துக்குப் போய் விடாம வீட்டுப் பக்கம் வந்து சேருங்க.''

பத்மாவதி போனை அணைத்து விட்டாள். அருகில் நின்று கொண்டிருந்த கணக்குப் பிள்ளையைப் பார்த்தார் வெங்கடாசலம்.

''ஏன் கணக்கு..?''

''ஐயா...''

''இந்த ஊரையே அடக்கி ஆள்கிறவனாக இருந் தாலும்.. பெண்டாட்டியாய் வந்து வாய்க்கிறவ மட்டும் பயப்படவே மாட்டேன்கிறாளே.. அது எப்படி...?''

இந்தக் கேள்விக்குக் கணக்குப் பிள்ளையால் எப்படிப் பதில் சொல்ல முடியும்..? அவர் பேசாமல் நின்றார்.

''ம்ஹூம்.. நீ பேசா மடந்தையாய் ஆகிட்ட.. கொடுத்து வைச்ச பிறவி.. நான் வாயைத் திறக்காமல் இந்த ஊருக்குள் காலம் தள்ள முடியுமா..?''

''ஐயா...''

''இதைத் தவிர வேறு எதையும் நீ சொல்லப் போற தில்ல.. மோட்டார் சைக்கிள்ள போயி.. ஜவுளிக்கடை நிலவரத்தைப் பார்த்து விட்டு வா... நான் வீட்டில் போய் ஊரில இருந்து வந்திருக்கிற என் அக்காகிட்ட குசலம் விசாரிச்சுக்கிட்டு இருக்கேன்.''

''யாரு வந்திருக்கிறது? உங்க அக்காவா ஐயா?''

''ஆமாம் கணக்கு... கட்டிக் கொடுத்த நாளில் இருந்து இந்த நாள் வரைக்கும்.. என் அக்கா இந்த ஊரை வந்து பார்த்து பிறந்த மண்ணை மிதிச்சதில்ல.. நான்தான் ஒத்த உடன் பிறப்பாச்சேன்னு மனசு கேட்காம... குடும்பத் தோட வருசா வருசம் என் அக்கா வீட்டில் போய் ஒரு மாசம் இருந்திட்டு வருவேன். வராத அக்கா வந்திருக்கு. நான் காலா காலத்தில் வீடு போய்ச் சேரணும். நீ பார்க்க வேண்டிய சோலிகளைச் சரியாகப் பார்த்து விட்டு வந்து சேரு...''

கணக்குப் பிள்ளை காரில் ஏறாமல் நின்று.. விடை கொடுக்க.. கார் கிளம்பி வீடு நோக்கிச் சென்றது.



பழைய காலத்துக் கிராமத்துப் பாணியில் கோட்டை மதில் சுவருக்குள் இருந்த மாடி வீட்டின் முன்னால் அவரது கார் போய் நின்றது.

அவசரமாய்க் காரை விட்டு இறங்கி.. வீட்டுக்குள் சென்றார் வெங்கடாசலம். முன்னாலிருந்த பெரிய வர வேற்பு அறையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த சிவ காமியை...

''அக்கா.. வாக்கா.. இப்போதுதான் இங்கே வர உனக்கு மனம் வந்ததா..?'' என்று விசாரித்தபடி அருகே சென்று அமர்ந்து கொண்டார்.

''ஏன் மாமா.. உங்களுடைய அக்கா மட்டும்தான் உங்க கண்ணுக்குத் தெரிவாங்களா.. நான் தெரிய மாட் டேனா..?'' என்று கேட்ட ராமநாதனை.. உண்மையா கவே அப்போதுதான் பார்த்தார் வெங்கடாசலம்.

உள்ளேயிருந்து.. காபி தம்ளர்கள் கொண்ட தட்டை ஏந்தியபடி வந்து கொண்டிருந்த பத்மாவதி.. ராமநாத னிடம்..

''அது அப்படித்தான் மருமகனே.. அக்கா வந்து விட்டால் மத்தவங்க யாரும் உங்க மாமன் கண்ணுல படமாட்டாங்க...'' என்று நொடித்தாள்.

மனைவி விடும் கணையை உணர்ந்து கொண்ட வெங்கடாசலம் அதைக் கண்டு கொள்ளாமல் தமக்கை யின் மகனைப் பார்த்து...

''அடிக்கடி அக்காவைப் பார்த்துக்கிட்டு இருந்தால் மத்தவங்க மேல கண்ணு போகும்.. நான் எங்க அக்காவை அத்தி பூத்தாப்புலதானே பார்க்கிறேன்? எங்க அக்காவைத்

தவிர.. மத்தவங்க மேல எப்படி என் பார்வை போகும்?'' என்று கேட்டார்.

பத்மாவதி கணவனை முறைத்த வண்ணம் எல்லோருக்கும் காபியைக் கொடுத்து முடித்தாள்.

''பத்மா.. வராத அக்கா வந்திருக்கு...''

''விருந்து தயாராகிகிட்டு இருக்கு...''

''பரவாயில்லையே.. சொல்லாம செஞ்சுட்டயே..''

''என் பிறந்த வீட்டில் எனக்கு வளமை சொல்லிக் கொடுத்துத்தான் வளர்த்திருக்காங்க...''

வெங்கடாசலம் வீட்டில் தன் சக்தி எடுபடாது என்பதைப் புரிந்து கொண்டவராய்.. தன் அக்காவைப் பார்த்தார். சிவகாமியின் முகம் சோர்ந்திருந்ததை அப்போது தான் கவனித்தார்.

''என்னக்கா.. ஏன் சோர்ந்து தெரியற..?''

''ம்ம்.. சென்னையில இருந்து சுப்புலாபுரம் கூப்பிடு தூரத்தில் இருக்குது பாருங்க.. உங்க அக்கா சோர்வில்லாம ஓடி வந்து உட்காருவதற்கு.. நாள் பூரா பயணம் செய்து வருகிறவங்க முகம் களைத்துத் தெரியாமல்.. எப்படித் தெரியும்..?''

வெங்கடாசலம் இப்போது மனைவியை வெளிப்படையாகவே முறைத்தார். அவள் அதைச் சட்டை செய்யவில்லை.

''பத்மா.. நீ கொஞ்சம் பேசாமல் இருக்கிறாயா..?''

''உங்களைக் கட்டிக்கிட்ட நாள் முதலாய் அப்படித் தானே இருக்கேன்.''



'இதுதான் உலகத்திலேயே சிறந்த ஜோக்!' என்று நினைத்துக் கொண்ட ராமநாதனுக்குச் சிரிப்பு வந்து விட்டது... அவன் பலமாகச் சிரித்தான். அவன் சிரிப்பதைப் பார்த்துக் கொண்டே.. வெங்கடாசலத்தின் மகள் வைஷ்ணவி.. வீட்டுக்குள் வந்தாள்.

''வாங்க அத்தை... எப்போ வந்தீங்க..?'' என்று சிவகாமியை வரவேற்றாள்...

போன வருடம் அவர்கள் சென்னை வந்திருந்த போது கோவா சென்று விட்டிருந்த ராமநாதன் அவளை வியப்புடன் பார்த்தான்.

# 8

வைஷ்ணவி.. பெரிய கண்களுடன்.. சிவந்த நிறத்துடன்.. அதிக உயரமுமில்லாமல்.. குட்டையாகவும் இல்லாமல்... இடைப் பட்ட அளவான உயரத்துடன்... சற்றுச் சதைப் பிடிப்பான உடல் வாகுடன் செழுமையாக.. அழகாக இருந்தாள்.

'வாவ்.. முருங்கைக்காய் மாதிரி இருந்தவள் இப்படி தக்காளிப் பழம் போல் இருக்கிறாளே...'

ராமநாதன் அவளை ஆர்வமாகப் பார்க்க ஆரம்பித்து விட்டான்.. கிளம்பும்போது சிவகாமியிடம் வழக்கடித்தவன் அவன்.

''அம்மா.. நீங்க பிறந்த ஊரே பட்டிக்காடு.. அங்கே போக என்னைத் துணைக்குக் கூப்பிடுகிறீங்களா.. நான் வர மாட்டேன்.''

''வேறு யாரைத் துணைக்குக் கூப்பிட்டுக் கொண்டு போக..? நீயே சொல்லு... மூச்சு விடக்கூட நேரமில்லாமல் ஓடிஓடி உழைத்துக் கொண்டிருக்கும் உன் அண்ணனைக் கூப்பிட்டுக் கொண்டு போவதா? இல்லை.. இதோ உன் தங்கை நிற்கிறாளே.. இவளைத் துணைக்குக் கூப்பிட்டுக் கொண்டு போகவா..?''

ராமநாதன் வேறு வழியில்லாமல் 'மொண.. மொண' வென்று முணுமுணுத்த வண்ணம் கிளம்பி வந்தான்.

''ஜெகன்.. உன் மாமாவிற்கு உடம்பு சரியில்லையாம். ஒரு எட்டு கிராமத்திற்குப் போய்ப் பார்த்துவிட்டு வந்து விடவா?''

பெரிய மகனிடம் சம்மதமாய்த் தலை அசைவு மட்டும் வந்தது. அவன் போன பின்னால்.. தன் மற்ற இரு பிள்ளைகளிடமும் புலம்பித் தீர்த்தாள் சிவகாமி.

''ஏன்டா.. எவனோ ஒருத்தியை இருபத்து நாலு மணி நேரமும் 'யார் அந்த நிலவு'ன்னு கேட்டுப் பாடிக்கிட்டு இருக்கான். பெத்த அம்மா எதிரே குத்துக் கல்லாட்டா மாய் நிற்கிறேன். என்னிடம் வாயைத் திறந்து ஒரு வார்த்தை பேசுகிறானான்னு பாரேன்.. அவ இவனை அப்படி மயக்கி வச்சிருக்கா...''

எதற்காக ராமநாதனும்.. ப்ரீதாவும் தன்னை முறைக்கிறார்கள் என்பதைப் புரியாமல் சிவகாமி விழித்தாள்.

''ஏம்மா.. எரிச்சலைக் கிளப்புகிறீங்க.. இப்ப என்னவோ பெரிய அண்ணன்.. அந்தப் பெண்ணைக்



கல்யாணம் பண்ணிக் கொண்டு வந்து நம்ம வீட்டில் உங்க மருமகளாக கண் முன்னால் நடமாட விட்டிருப்பது போல் பேசுகிறீங்களே.. அண்ணனே பாவம்.. அழுது புலம்பிக்கிட்டு இருக்கார்.. இதில் நீங்க வேற... இம்சைம்மா.. உங்க நோக்கம்தான் என்ன... உங்களுக்கு மருமகள்ன்னு யாரும் இந்த வீட்டிற்குள் வரக் கூடாது என்பதா?''

''வெரிகுட் ப்ரீதா.. இப்போதுதான் நீ எங்களின் தங்கையாகப் பேசுகிறாய்.. ஏம்மா.. மருமகள் வருவதற்கு முன்னாலேயே இந்தப் பாடுன்னா.. வந்த பின்னால் என்ன பாடு படுத்தப் போகிறீங்களோ. இதுதான் மாமியார் காய்ச்சல் என்பதா?''

''ஏன்டா.. இப்ப நான் என்ன சொல்லிட்டேன்னு நீங்க இரண்டு பேரும் இப்படி என் மேல் பாய்கிறீங்க... அம்மாவின் நினைப்பு அவனுக்கு இல்லாமல் போய் விட்டதேன்னு சொன்னால் அது ஒரு தப்பாடா?''

''அது தப்பில்லை.. எப்போதுமே உங்களையே நினைத்துக் கொண்டிருக்க முடியுமா? தாய்க்குப் பின் தாரம்மா.. நாங்கள் எங்களை நம்பி வருகிறவளையும் கொஞ்சம் நினைத்துப் பார்க்க வேண்டாமா..?''

''ச்ச்.. ச்ச்.. என்னமாய்ச் சொல்கிறாய்டா ராம்.. இப்போது சொன்னாயே... இது பேச்சு.. இப்போதுதான் நீயும் எனக்கு அண்ணனாக உண்மை பேசியிருக்கிறாய்... உன்னை யெல்லாம் நம்பி ஒருத்தி வருகிறாளென்றால்.. அவளை நீ விழித்துக் கொண்டிருக்கும்போது மட்டுமில்லை... தூங்கும் போது கூட நினைக்கத்தான் வேண்டும்...''

''போடி குரங்கே...''

''போடா எருமை...''

இரண்டு பேரின் சண்டையைப் பிரித்து விட்டு.. ஒரு வழியாய்ச் சின்ன மகனுடன் சுப்புலாபுரம் மண்ணை மிதித்திருந்தாள் சிவகாமி.

அண்ணனுக்காக என்று.. கடமையாய்த் தாயுடன் வந்திருந்த ராமநாதன்.. இப்போது ஆர்வமாய்த் தன் மாமன் மகளைப் பார்த்தான். பதினாறு முடிந்து.. பதினேழு வயதில் வெகு இளம் பெண்ணாக.. அறிந்தும்.. அறியாத சிறுமியாக அவள் அவனைப் பார்த்து விழித்தாள்.

''மாமா.. யாரு இது?''

''என்ன மாப்பிள்ளை, இப்படிக் கேட்டுட்டிங்க.. மாமன் மகளைப் பார்த்து யாருன்னு கேட்ட முதல் முறை மாப்பிள்ளை எங்க ஆண்டிபட்டிச் சீமையிலேயே நீங்கள் ஒருத்தராகத்தான் இருப்பீங்க.''

''நான் சென்னைச் சீமை மாமா.''

அவன் பதில் சொல்லிய விதம் கண்டு கவரப்பட்டவளாய் வைஷ்ணவி அவன் முகம் பார்த்தாள். அவன் தாயும்.. தாய்மாமனும் அறியாத வகையில் அவளைப் பார்த்துக் கண் சிமிட்டினான். சட்டென்று விழிகளைத் தாழ்த்திக் கொண்டாள் அவள். வியர்த்துக் கொட்ட உள்ளுக்குள் பயந்து போனாள்.

'இதென்.. இந்த அத்தான் கண்ணடிக்கிறாரு.'

அவளின் அச்சம் ராமநாதனைக் கவர்ந்தது. கண்ணோடு கண் நோக்கும்.. சென்னைப் பெண்களின் மத்தியில் வளர்ந்தவனுக்கு அது உலக மகா அதிசயமாக



இருந்தது. அதுவே அவனை அவளிடம் ஈர்த்தது... அவன் சுவாரஸ்யமாய் அவளைப் பார்க்க ஆரம்பித்து விட்டான்.

அவனது பார்வையைக் கண்ட வைஷ்ணவிக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. அவள் லஜ்ஜையுடன் தலையை இன்னும் குனிந்து கொள்ள.. ராமநாதன் அதிகமாக அவளைப் பார்வையால் பருக ஆரம்பித்தான்.

மகளின் முகச் சிவப்பையும்.. தங்கை மகனின் முக ஜொலிப்பையும் கண்ட வெங்கடாசலம் லேசாகத் தொண்டையைக் கனைத்தார்.. ராமநாதனின் கவனத்தைத் திருப்பப் பேச்சுக் கொடுத்தார்.

''என்ன மாப்பிள்ளை.. படிப்பெல்லாம் எப்படிப் போய்க்கிட்டு இருக்கு..?''

''அதுக்கென்ன மாமா... அமோகமா போய்க்கிட்டு இருக்கு.''

''ம்ம்.. படிங்க.. படிங்க.. உங்களுக்கென்ன மாப்பிள்ளை... படிக்கிறது மட்டும்தான் வேலை. என்னைப் பாருங்க.. தலைக்கு மேல... ஆயிரம் ஜோலி இருக்கு...''

''அப்படியா மாமா...''

''ஆமாம் மாப்பிள்ளை... ஒத்தை மனுசனாய்.. எத்தனையை இழுத்துப் பார்க்கிறது...? ஜவுளிக் கடையைப் பார்ப்பேனா..? விவசாயத்தைப் பார்ப்பேனா..? இல்லை.. தினமும் கூட்டுகிற ஊர் பஞ்சாயத்தைப் பார்ப்பேனா...?''

உருப்படியாய் வைஷ்ணவியை 'சைட்' அடிக்க விடாமல் நொய்.. நொய்யென்று பேசிக் கஷ்டப்படுத்திக் கொண்டிருந்த தாய் மாமனை எண்ணி மனதிற்குள் பல்லை நறநறவென்று கடித்தபடி...

''கஷ்டம்தான் மாமா...'' என்றான் ராமநாதன்.

''அது உங்களுக்குத் தெரியுது.. இந்த ஊர் இளவட்டப் பசங்களுக்குத் தெரியலையே... இன்னைக்குக் கூட ஒரு பஞ்சாயத்தை முடித்துவிட்டுத்தான் வருகிறேன்.''

'ம்ஹூம்.. இந்த நாட்டாண்மையின் கதையை நான் 'ஊம்' கொட்டிக் கேட்க வேண்டுமா? என்ன செய்வது? இந்த மனிதர் தாய்மாமனாக மட்டுமில்லாமல்.. அழகான இளம் அழகிக்கு அப்பாவாகவும் இருந்து வைக்கிறாரே... அதற்காகவாவது 'ஊம்..' கொட்டித்தான் ஆக வேண்டும்..' மனதிற்குள் அலுத்துக் கொண்டான் ராமநாதன்.

''அப்படியா மாமா?''

''அப்படித்தான் மாப்பிள்ளை... என்ன பஞ்சாயத்துன்னு கேட்க மாட்டிங்களா...?''

'கேட்காவிட்டால்.. விட்டு விடுவீங்களா...'

''என்ன பஞ்சாயத்து மாமா..?''

''எங்க ஊரு இளவட்டப் பயல் ஒருத்தன்.. மாமன் மகளை வழிமறிச்சுப் பேசிப்புட்டான்... அதுக்குத்தான் பஞ்சாயத்து..''

ராமநாதனைத் துளைக்கும் பார்வை பார்த்தபடி வெங்கடாசலம் கூற.. அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது...

''இது என்ன மாமா.. அநியாயமாய் இருக்கு..? மாமன் மகளைக் கேலி செய்ய.. அத்தை மகனுக்கு உரிமையில்லையா?''

அவன் வைஷ்ணவியை விழிகளால் விழுங்கிக் கொண்டு கேட்க.. அவள்.. தகப்பனாரின் முன்னாலேயே இவன் இப்படிப் பார்த்து வைக்கிறானே என்று சங்கடமுற்றாள்.



''அது சரி மாப்பிள்ளை.. மாமன் மகள் என்ன பட்டா போட்ட சொத்தா...? அத்தை மகன் ஏகபோக உரிமை கொண்டாடுவதற்கு? எல்லாப் பெண்களும் கல்யாணம் நடக்கிற வரைக்கும்.. தாய்.. தகப்பனுக்குத்தான் சொந்தம்.. கட்டிக்கிட்ட பின்னாடிதான்.. கட்டிக்கிட்டவனுக்குச் சொந்தம்.''

''இது கொஞ்சம் கூட நல்லா இல்லை மாமா.''

''நல்லாயில்லைதான். அது அந்த இளவட்டப் பயலுக்கில்ல உறைக்கணும்.. அப்பனிடம் கேட்காம.. மகளை உரிமை கொண்டாடுகிறோமேன்னு அவன் யோசிச்சுப் பார்த்திருக்கணும். பெண்ணைப் பெற்றவன் முரடன். வேறு ஒருவனாக இருந்திருந்தால் நாலு அறை கொடுத்திருப்பான். என்ன செய்வது? தங்கச்சி மகனாய்ப் போய் விட்டான்னு.. தப்பிப் போகட்டும்னு விட்டுவிட்டான்.''

ராமநாதனுக்கு உள்ளுக்குள் குளிரெடுத்தது.. 'வெறும் பார்வைக்கே இத்தனை மிரட்டலா..? சும்மாவா.. இந்த மனிதரை ஊருக்குள் 'வீச்சரிவாள் வெங்கடாசலம்'ன்னு சொல்கிறாங்க...' பேசாமல் பார்வையைத் திருப்பி.. தாய்மாமனைப் பவ்யமாய்ப் பார்க்க ஆரம்பித்து விட்டான்.

''வைஷ்ணவி.. அம்மா கூப்பிட்டாளே.. என்னன்னு போய்க் கேளு...'' அக்கா மகனைப் பார்த்தபடி.. மகளிடம் உத்தரவிட்டார் வெங்கடாசலம்.

வைஷ்ணவி.. மான்போல உள்ளே ஓடிச் சென்று மறைந்தாள். அவள் ஓடும்போது அவளது நீண்ட பின்னல் சுழன்றாடியதைக் கண்டவன் மனம் மயங்கினான். சென்னையின் நாகரிக உடைகளைப் பார்த்துச் சலித்திருந்தவனின் மனம் பாவாடை தாவணியின் பின்னால் போய் விட்டது...

''என்ன மாப்பிள்ளை.. அப்படிப் பார்க்கறீங்க?''

''ம்ம்.. நம்ம வைஷ்ணவி.. என்னமாய் வளர்ந்து விட்டாள்...!''

''பெண்கள் சீக்கிரமாய் வளர்ந்து விடுவாங்க. பொண்ணு வளர்த்தியா... பீர்க்கங்காய் வளர்த்தியான்னு சொல்லுவாங்களே.. கேள்விப்பட்டது இல்லையா...?''

ராமநாதன்.. பாவம்.. இந்தப் பழமொழியை எல்லாம் அவன் எங்கே கேள்விப்பட்டான்? வேறு வழியின்றி.. 'ஆமாம் சாமி' என்ற பாவனையில் தலையாட்டி வைத்தான்.

தமக்கையின் மகனை அரட்டியது போதும் என்ற முடிவுக்கு வந்தவராகச் சிவகாமியின் பக்கம் திரும்பி அமர்ந்தார் வெங்கடாசலம்.

''சொல்லுக்கா.. உனக்கென்ன மனக்குறை?''

''அது எப்படி மாமா.. அவ்வளவு கரெக்டா.. அம்மாவுக்கு மனக் குறையான்னு கேட்கறீங்க..?''

''ஏன் மாப்பிள்ளை... என் கூடப் பிறந்த பிறப்பு.. பிறந்த வீட்டிற்கு வந்திருக்கிறோம்கிற சந்தோசம் துளிக் கூட இல்லாம சோகமா பார்த்துக்கிட்டு உட்கார்ந்திருந்தா... அது மனசில குறையிருக்குன்னுதானே அர்த்தம்.''

''வெல்டன் மாமா...''

'உன் புகழுரையை நான் கேட்டேனா...?' என்ற பாவனையில் அமர்த்தலாய் ராமநாதனை ஓர் பார்வை பார்த்தார் வெங்கடாசலம்.

'இந்தப் பார்வைக்கு என்ன அர்த்தம்?' புரியாதவனாய்... அதைப் பற்றித் தாய்மாமனிடம் விளக்கம் கேட்க



முடியாதவனாய்.. அடங்கிப் போய் உட்கார்ந்து விட்டான் ராமநாதன்.

அவ்வளவு பெரிய கம்ப்யூட்டர் நிறுவனத்தைச் சுண்டு விரலில் கட்டிப் போட்டு வைத்திருந்த ஜெகன்.. ஏன் தன் தாய்மாமனிடம் அவ்வளவு பய பக்தி வைத்திருக்கிறான் என்பது அவனுக்குத் தெள்ளத் தெளிவாகப் புரிந்தது...

தன் பெரிய மீசையைத் தடவிக் கொண்டு.. தமக்கையைக் கனிவுடன் பார்த்துக் கொண்டிருந்த வெங்கடாஜலத்தைப் பார்க்கும்போது.. தனக்கே.. நாவு அடங்கிப் போகும்போது ஊர் அடங்கிப் போவதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது என்று நினைத்துக் கொண்டான் அவன்.



# 9

கண்கள் கலங்க.. தன் தம்பியைப் பார்த்தாள் சிவகாமி.. வெங்கடாசலம் பதறி விட்டார்.

''ஏன்க்கா.. கண் கலங்கறே.. நீ கண்ணீர் விடுவதைப் பார்த்துக் கொண்டு இருப்பதற்கா.. உன் கூடப் பிறந்தவனா.. நான் இருக்கேன்? என்ன சமாச்சாரம்னு சொல்லுக்கா.''

''வெங்கிடு.. எனக்கு அம்மா.. அப்பா இல்லையா!''

''அதுக்கா அழுகிற.. உனக்கு மட்டும்தானா இல்லை.. எனக்கும்தான் தாய் தகப்பன் இல்லை.''

அவர்கள் பாச ரசம் பிழிந்து கொண்டிருக்கும்போது ராமநாதன் வாயை வைத்துக் கொண்டு சும்மாயிருக்காமல் ஊடே புகுந்து வாய் விட்டான்.

''ஏன் மாமா.. உங்கள் இரண்டு பேருக்கும் ஒரே அம்மா.. அப்பாதானே...''

உணர்ச்சி மயம் தடைப்பட்டு விட்ட எரிச்சலுடன் ராமநாதனை முறைத்துப் பார்த்த வெங்கடாசலத்தின் பார்வையில் வீச்சரிவாளைத் தேடும் நோக்கம் இருந்தது. அவசரமாய் வாயை மூடிக் கொண்டான் ராமநாதன்.

''ஏன்க்கா.. உனக்குத் துணையாய் வர ஜெகனுக்கு நேரமில்லையா?'' வெங்கடாசலம் கேட்ட இந்தக் கேள்வியில் -

'இவனை ஏன்.. அழைத்துக் கொண்டு வந்தாய்..?' என்ற தொனி இருந்தது.. அதை உணராதவளாகச் சிவகாமி,

''பேச்சே பெரியவனைப் பற்றித்தானே... அவனை வைத்துக் கொண்டு எப்படிப் பேச முடியும்..?'' என்று பதில் கூறினாள்.

பெரிய மருமகனின் மேல் அதிக அளவு பாசம் வைத்திருந்தார் வெங்கடாசலம்.

பெரிய கோடீஸ்வரன் என்று ரகுநாதனுக்குச் சிவகாமியைத் திருமணம் செய்து கொடுத்தார்கள். பிள்ளைகள் வளர்ந்தும்.. வளராமலும் இரண்டும் கெட்டான் பருவத்தில் இருந்தபோது ரகுநாதன் இறந்துவிட... சிவகாமி..



தன் பிள்ளைகளுடன் செய்வதறியாது திகைத்து நின்றாள்.

வெங்கடாசலம்.. தன் கிராமத்தை விட்டு.. தன் வேலைகளை விட்டுவிட்டு.. ஒரு மாத காலத்திற்கு மேல்.. தமக்கையுடனே சென்னையில் தங்கி விட்டார்.

கிராமத்து மனிதரான அவருக்கு.. கம்ப்யூட்டர் நிறுவனத்தை நடத்துவதைப் பற்றிய தொழில் அனுபவம் இல்லை... அத்துடன் அவருடைய வேர் கிராமத்தில் இருந்தது.

எனவே.. சிவகாமியையும்.. அவளுடைய பிள்ளைகளையும் தன்னுடன் வந்து விடுமாறு அழைத்தார் அவர்.

அப்போது ஜெகந்நாதன் அதை மறுத்து விட்டான். அத்தோடு நில்லாமல் அந்த இளம் வயதிலேயே கம்பெனியின் பொறுப்பை எடுத்துக் கொண்டு.. அதைக் காப்பாற்றியும் விட்டான்.

கோடீஸ்வரனின் மனைவியாக வாழ்ந்த அக்கா... எங்கே தன் வாழ்க்கைத் தரத்தை இழந்து விடுவாளோ என்று வெங்கடாசலம் தவித்துக் கொண்டிருந்தபோது.. தாயின் மரியாதையையும்.. கௌரவத்தையும் காப்பாற்றி.. அவளின் வாழ்க்கைத் தரம் குறையாமல் வாழ வைத்த ஜெகந்நாதனின் மேல்.. அவருக்கு மட்டற்ற மதிப்பு வந்து விட்டது.

அந்த மருமகனைப் பற்றித் தன் அக்கா இவ்வளவு கவலையாகப் பேசவும் வெங்கடாசலம் துணுக்குற்றார்.

''ஏன்க்கா.. ஜெகனுக்கு என்ன..?''

''என்னத்தைன்னு சொல்வேன்டா.. எதையோ பறி கொடுத்தவன் போல இருக்கான். பேசினால் பதில் பேச மாட்டேன்கிறான். எப்பப் பாரு.. எதையோ ஒரு சினிமாப் பாட்டைப் போட்டுக் கேட்டுக்கிட்டு இருக்கான். இது எங்கே போய் முடியுமோ தெரியலை, வெங்கிடு...''

''சினிமாப் பாட்டு கேட்கிறாரா..? நல்லாப் பார்த்தியா அக்கா... அது உன் பெரிய மகனா... இல்லை... சின்ன மகனா..?''

தாய் மாமனுக்குத் தன் மேலிருந்த உயர்ந்த அபிப் ராயத்தை எண்ணி நொந்து போனான் ராமநாதன்.

வைஷ்ணவியைப் பார்க்கும்வரை.. அவரது அபிப் ராயத்தைப் பற்றி அவனுக்குக் கவலையே கிடையாது. ஆனால்.. அன்றுதான் பூத்த புது மலர் போல் இருந்த வைஷ்ணவியைக் கண்டதும்.. அவன் வெங்கடா சலத்தின் அபிப்ராயத்தைப் பற்றிக் கவலைப்பட்டான்.

''மாமா.. சினிமாப் பாட்டைக் கேட்டால் என்ன தப்பு..? ரசிக்கிற மனதிருக்கிறவன் எவனாவது சினிமாப் பாட்டைக் கேட்டு ரசிக்காமல் இருப்பானா..?''

''மாட்டான்தான்.. ஆனால் அதுக்கு நேரம் இருக்கணு மில்ல மாப்பிள்ளை.. அதுக்கெல்லாம் ஜெகனுக்கு எங்கே நேரம் இருக்கப் போகிறது..? அவனுக்கு வேலை.. வெட்டி அதிகம் இருக்குமே...''

'அப்போ... நான் வேலை வெட்டி இல்லாதவனா..?'

இந்த மாமனும் வேண்டாம்.. அவருடைய பெண் ணும் வேண்டாம் என்று 'சீச்சி.. இந்தப் பழம் புளிக்கும்' என்று நரி சொன்னது போல ராமநாதன் முடிவெடுத்த தருணத்தில் வைஷ்ணவி காபித் தம்ளர்கள் கொண்ட



தட்டோடு அங்கு வந்தாள்... உடனே தன் முடிவைக் கை விட்டான் ராமநாதன்.

''அத்தான்.. காபி...''

''ஹி.. ஹி.. இது எனக்கே.. எனக்கா வைஷ்ணவி...''

''மாப்பிள்ளை.. என் மகள் காபியைக் கொடுக்கிறாள்.''

''நானும் காபியைத்தான் சொன்னேன் மாமா..''

''ஓஹோ.. அக்கா.. இந்தக் காலத்து இளவட்டப் பசங்கள் கொஞ்சம் கூடச் சரியாயில்லை.''

''அப்படி ஒட்டு மொத்தமாய்ச் சொல்லி விட்டால் எப்படி மாமா..? என்னைப் போல நல்ல பசங்களும் உலகத்தில் இருக்கிறாங்க....''

'யார்..? நீ..? நல்ல பையன்...?' வெங்கடாசலம் பார் வையால் கேட்டார்.

அவர் மீண்டும் வீச்சரிவாளைத் தேடக்கூடும் என்ற பயத்துடன் அவசரமாக நகர்ந்து உட்கார்ந்து கொண்டான் ராமநாதன்.

'அது...! அந்தப் பயம் இருக்கட்டும்..' என்ற பாவ னையில் மீசையை முறுக்கிய வண்ணம் சிவகாமியின் பக்கம் திரும்பினார் வெங்கடாசலம்.

''இப்ப உன் பிரச்னை என்னதான்க்கா.. என் பெரிய மருமகன் சினிமாப் பாட்டுக் கேட்பதுதான் உனக்குப் பிரச் சனையே...''

''அது இல்லடா தம்பி...''

''வேற எதுக்கா..?''

''அது என்னவோ.. காதல் பாட்டு மாதிரி இருக்காமே..''

''யார் சொன்னது..? உன் சின்ன மகனா..?''

'நீ அப்படித்தானே சொல்வாய்...' என்ற ரீதியில் ராமநாதனைப் பார்த்தபடி கேட்டார் வெங்கடாசலம்.

'இந்த மாமன் முன்னாடி வைஷ்ணவியை சைட் அடித்தாலும் அடித்தேன்... இந்த மாமா எதுக்கெடுத்தாலும் என்னையே குற்றவாளியைப் பார்க்கிறது போல் பார்க்கிறாரே... உலகத்திலே சொந்த மாமன் மகளை சைட் அடிப்பது ஒரு குத்தமாப்பா...' ராமநாதன் மனதிற்குள் அங்கலாய்த்துக் கொண்டான்.

''இவன் மட்டும் இல்லைடா தம்பி. நம்ம ப்ரீதா.. வீட்டு வேலைக்காரி... ஏன்... ஜெகனின் கார் டிரைவர் கூட அப்படித்தான் சொல்கிறாங்க...''

''இது என்னக்கா பெருங்கதையாயிருக்கு! ம்ம்ம்... வேலைக்காரியும்.. கார் டிரைவரும் சொன்னால்.. அது உண்மையாய்த் தானிருக்கும்...''

'அப்போ.. நான் சொல்வது மட்டும்தான் இந்த மாமனுக்குப் பொய்யாய் இருக்கிறது...'

''என்ன மாப்பிள்ளை... மனசில இருக்கிற நினைப்பை வெளியில கொட்டுங்க...''

'உங்க முன்னால் மனதில் கூட எதையும் நினைக்க முடியாது போல இருக்கே...' என்று புழுங்கிப் போன ராமநாதன்... வெளியில் அதைக் காட்டிக் கொள்ளாமல்..

''பெரியவங்க.. நீங்க இருக்கும்போது.. என் மனதில் என்ன மாமா.. பெரிதாய் நினைப்பு இருந்து விடப் போகிறது?'' என்று வழிந்தான்.

'உன்னை அப்புறம் கவனிச்சுக்கிறேன்..' என்று சொல்வது போல் ராமநாதனைப் பார்த்துவிட்டு.. யோசனையுடன் தமக்கையிடம் பேச்சைத் தொடர்ந்தார் வெங்கடாசலம்.



''அது என்ன பாட்டுக்கா..?''

''எனக்குத் தெரியலையா... இவன் பாடிக் காட்டினான். ராம்.. மாமாவுக்கு அந்தப் பாட்டு என்னன்னு பாடிக் காண்பிடா.''

அப்போது பார்த்து.. வைஷ்ணவி ராமநாதனைப் பார்த்துக் கொண்டே.. மாடிப்படியில் இறங்கி வர.. ராமநாதன் அருகிலிருந்த வெங்கடாசலத்தை மறந்து விட்டு.. அவரது மகளைப் பார்த்தவாறு பாட ஆரம்பித்து விட்டான்..

''யார் அந்த நிலவு...
ஏன்.. இந்த.. கனவு...
யாரோ சொல்ல.. யாரோ என்று
யாரோ தந்த உறவு...
காலம் செய்த கோலம்...
இங்கு நான் வந்த வரவு...''

சும்மாவே ராமநாதனுக்குக் குரல் வளம் நன்றாக இருக்கும்.. இன்று ரசித்து வேறு அவன் பாடி வைக்க.. வைஷ்ணவி அவன் பாடலால் கவரப்பட்டு விட்டாள். விழி விரிய அவனைப் பார்த்தபடி.. அவன் பாட்டை ரசித்தபடி... மாடிப்படியிலேயே நின்று விட்டாள்.

''என்ன மாப்பிள்ளை.. பாட்டுக் கச்சேரி.. பலமாய் இருக்கு.''

வெங்கடாசலம்.. மீண்டும்.. மீசையை முறுக்க ஆரம்பித்து விட்டார்.

'இவர் வேற.. எதுக்கெடுத்தாலும் மீசையை முறுக்கியே பயம் காட்டுகிறார்..' என்று சலித்துக் கொண்டான் ராமநாதன்.

''இல்ல மாமா.. அம்மாதான் பாடிக் காட்டச் சொன்னாங்க...''

''அதுக்காகப் பாட்டைப் பூராவும் பாடியே தீருவேன்னு கங்கணம் கட்டினால் எப்படி மாப்பிள்ளை...''

''அது சரி மாமா...''

''பிரச்னை என்னன்னு என் அக்கா இன்னும் முழுசா சொல்லலை. நானும் முழுசாக் கேட்கலை.''

''அது சரி மாமா...''

''அதுக்குள்ள நீங்க சும்மா ஊடுசால் வெட்டிக்கிட்டே இருந்தா எப்படி...? நான் உங்களைக் கவனிப்பேனா? இல்லை.. என் அக்காவின் பேச்சைக் கவனிப்பேனா?''

''அது சரி மாமா...''

''எது சரி..? சும்மா ஆமாம் சாமி போடாமல்.. ஆகிற வேலை ஏதாச்சும் இருந்தால் பாருங்க, மாப்பிள்ளை... நான் என் அக்காவுடன் நிம்மதியாய் உட்கார்ந்து இரண்டு வார்த்தை பேசணும்.''

''நான் வேண்டுமானால்... வைஷ்ணவியுடன் இந்த வீட்டைச் சுற்றிப் பார்க்கவா மாமா...?''

''பத்மா.. அந்த வீச்சரிவாளை எடு...''

''அது எதுக்கு இப்ப அநாவசியமாய் மாமா.. நான் உங்க கண் பார்வையிலேயே.. அடங்கி... ஒடுங்கி உட்கார மாட்டேனா என்ன..? வைஷ்ணவி... நீ போய்.. பூஜையறையில் விளக்கை ஏற்றும்மா... ம்ஹூம். எதற்கும் கொடுத்து வைத்திருக்க வேண்டும்...''



ராமநாதன் கைகட்டி.. வாய் பொத்தாத குறையாய் வெங்கடாசலத்தின் முன்னால் உட்கார.. அவர் அவனை நம்பாத பார்வை பார்த்தபடி சிவகாமியின் பக்கம் திரும்பினார்.

# 10

''ஜெகன் கிட்டப் பேசிப் பார்த்தாயாக்கா...?''

''என்னத்தைப் பேசச் சொல்கிற...?''

''யாருடா அந்த நிலவுன்னு கேட்க வேண்டியது தானே.''

''கேட்டேனே... கேட்காமல் இருப்பேனா?''

''அதுதானே... யார் நீ..?''

''என்ன மாமா.. அம்மாவைப் பார்த்துப் பேய்க் கதையின் டைட்டிலைச் சொல்கிறீங்க.''

''அக்கா.. உன் இளைய மகனை வாயை மூடிக் கொண்டு உட்காரச் சொல்லு.''

''டேய் ராம்.. கொஞ்சம் அடங்குடா.''

''நீ ஜெகன்கிட்ட கேட்டதுக்கு.. ஜெகன் என்ன பதில் சொன்னான்.''

''அப்படி யாருமே இல்லைங்கிறான்.''

''இல்லாததுக்கா இத்தனை பாடு?''

''அதுதான். எனக்கும் புரிய மாட்டேன் என்கிறது.''

''ம்ம்.. அப்படின்னா இது காதல் தோல்விதான்.''

''இப்ப என்னடா தம்பி செய்கிறது?''

''பெரிய மாப்பிள்ளையின் மனம் ஆறட்டும்ன்னு கொஞ்ச நாள் விட்டுப் பிடிப்போமா?''

''விட்டால் பிடிக்க முடியாது போல இருக்குடா.''

''அவ்வளவு தூரத்திற்கு முற்றிப் போச்சா?''

''ஆமாம்டா தம்பி... இன்னும் தாடி ஒண்ணுதான் வளர்க்கலை... அவனைப் பார்த்தாலே... என் அடிவயிறு கலங்குதுடா...''

''ம்ம்.. இப்ப என்ன செய்யலாம்?''

''நீதான்டா தம்பி வழி சொல்லணும். நான் உன்னை நம்பித்தான் வந்திருக்கிறேன். எனக்குன்னு வேறு யாரு இருக்கா..? அழுதாலும்.. சிரித்தாலும்.. அதில் பங்கெடுத்துக்கொள்ள.. உன்னை விட்டால் எனக்கு வேறு சொந்தம் இல்லையேடா..''

சிவகாமி.. குமுறி அழுதாள். வெங்கடாசலத்தின் மனம் கரைந்து விட்டது.. கண் எதிரில் தன் தமக்கை கண்ணீர் வடிப்பதைப் பார்த்து மனம் தாளாமல் அவர் பேசினார்.

''அட இதுக்கு ஏக்கா இப்ப கண்ணில தண்ணி விடுற.. மலை போல உன் தம்பி உன்கூட இருக்கிறப்போ.. நீ அழக்கூடாதுக்கா.. அதைப் பார்த்தால் என் மனசு தாங்காது. நான் இருக்கேன்க்கா உனக்கு.. உன் பிள்ளைகளுக்கு ஒரு குறைவும் வர நான் விட மாட்டேன்.. கண்ணைத் துடை.. அட.. கண்ணைத் துடைன்னு சொல்கிறேனில்ல...''



வெங்கடாசலம் சிவகாமி அறியாமல் தன் கண்ணைத் துடைத்துக் கொண்டார்.

'அட.. நம்ம மாமன்.. இவ்வளவு பாசக்காரப் பயலாய் இருக்கிறாரே...' ராமநாதன் வாய் பிளந்தான்.

''என்னவோடா தம்பி.. என் வீட்டிற்குத் தூணாய் நிற்பது ஜெகன்தான். அவன் வாழ்க்கை பட்டுப் போகாமல் நீதான் காப்பாற்றணும்.''

''என்கிட்ட சொல்லிட்ட இல்ல. இனி நான் அதைப் பார்த்துக்கிறேன். நீ எழுந்திருச்சு வா.''

''எங்கேடா..?''

''சாப்பிடத்தான்.. என் பெண்டாட்டிக்கு வாய்தான் கொஞ்சம் நீளம். மற்றப்படி ஆக்கிப் போடுவதில் அவளை மிஞ்ச இந்த எட்டுப் பட்டிக் கிராமத்திலே எவளும் இன்னும் பிறக்கவில்லை...''

''ஆஹா.. இந்த எட்டுப்பட்டி கலாச்சாரம் இங்கேயும் இருக்கிறது போல...''

''ஏன் மாப்பிள்ளை.. உங்களை வேற தனியாய்க் கூப்பிடணுமா?''

'அதை நீங்க கூப்பிட்டால் எனக்கு ரசிக்காது. வைஷ்ணவி கூப்பிடட்டும்...'

''என்ன மாப்பிள்ளை... ஆடு திருடின கள்ளன் போல ஒரு மார்க்கமா முழிக்கறீங்க...''

''அப்படி யெல்லாம் ஒன்றும் இல்லை மாமா.. ஹி.. ஹி..''

''சகிக்கலை...''

''எது மாமா?''

''உங்க சிரிப்பு... உள்ள வந்து இப்படி உங்க அத்தை முன்னால சிரிச்சு வைக்காதீங்க. அவள் வெறும் கரண்டியைக் காட்டிவிட்டு.. சட்டியைக் கழுவி.. கவிழ்த்து மூடி விடுவாள். அப்புறம் வயித்துக்கு இல்லாம அல்லாட வேண்டியிருக்கும். அதிலும் வராத அக்கா வந்திருக்கான்னு கறி பிரியாணி.. கோழி வறுவல்.. மீன் பொரியல்ன்னு ஆக்கி வைத்திருக்கிறா.. அது உங்களுக்கு வேணுமா.. இல்லை வேணாமா..?''

வேண்டாம் என்று சொல்ல ராமநாதன் முட்டாளா? அவன் முதல் ஆளாக எழுந்து.. சாப்பிடும் அறைக்குப் போய் விட்டான்.

''ம்ம்.. உன் சின்ன மகன் ரொம்ப விவரம்க்கா...''

''இன்னும் விளையாட்டுப் பிள்ளையாகவே இருக்கிறான்டா.''

''தீராத விளையாட்டுப் பிள்ளைன்னு சொல்லு.''

''அது என்னவோ.. எனக்குத் தெரியலை.''

''நீ அவனைப் பெத்தவள். உன் கண்ணுக்கு எதுவும் தெரியாது. நான் பெண்ணைப் பெத்தவன். என் கண்ணுக்கு இதுதானே மாட்டுகிறது..''

''என்னடா.. நீயும் ஜெகன் போலவே.. புரியாமல் பேச ஆரம்பித்துட்ட...''

''என்ன செய்வது.. உன் சின்ன மகனைப் பார்த்தா.. என் சிந்தனை பொங்கி வழிகிறது.''

சாப்பாட்டு அறையில் அமர்ந்திருந்த ராமநாதன்.. தண்ணீர் ஊற்றி வைத்துக் கொண்டிருந்த வைஷ்ணவியிடம் எதையோ கேட்டுக் கொண்டிருந்தான். வைஷ்



ணவி.. வெட்கப் புன்னகையுடன் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள். வெங்கடாசலத்தைக் கண்டதும் சட்டென்று ராமநாதன் பேச்சை நிறுத்திக் கொண்டான்.

'இந்தத் திருவாழத்தான் என்னிடமே இவனுடைய திருவிளையாடல்களைக் காட்டப் பார்க்கிறானா...'

''என்ன மாப்பிள்ளை... வைஷ்ணவியிடம் என்ன பேசிக் கொண்டிருந்தீங்க...''

''சும்மா... அவளைப் பற்றி விசாரித்துக் கொண்டு இருந்தேன் மாமா...''

''விசாரணை யெல்லாம் பலமாய் இருக்கு!''

''அப்படி யெல்லாம் ஒன்றுமில்லை மாமா.''

''ம்ம்.. ஒன்றுமில்லாமத்தான் இருக்கணும். விஷயம் ஏதாச்சும் இருந்தால்.. என் வீச்சரிவாளுக்கு வேலை வந்திடும்...''

''அதை எதுக்கு மாமா இப்போது போய் நினைவு படுத்தறீங்க...''

ராமநாதன் சாப்பாடு அழைப்பதையும் மறந்து எழுந்து ஓடிவிடலாமா என்று யோசித்துக் கொண்டிருந்தபோது அவனுக்குக் கை கொடுக்கவென்று.. பத்மாவதி கையில் பாத்திரங்களுடன் அங்கே வந்தாள்.

''உங்க மாமனுக்கு.. எதை எங்கே பேசணும்கிற அறிவு எப்போது இருந்துச்சு...? இப்போது வருவதற்கு.. எப்போப்பாரு.. வீச்சருவாள் புராணம்தான். அதை ஓரம் கட்டிட்டு உட்கார்ந்து சாப்பிடச் சொல்லுங்க, மருமகனே...''

'ஆஹா.. அத்தை மாமனை ஜாடை பேசுகிறார்களா..?' மனதிற்குள் மகிழ்ந்து போனான் ராமநாதன்.. அவசரமாய்

மாமன் மனைவியுடன் அவசரக் கூட்டணி ஒன்றைப் போட்டுக் கொண்டான்.

''மாமா.. நான் சொன்னால் கேட்பாரா அத்தை..?''

''யாருக்குத் தெரியும்.. நான் சொல்லியே கேட்காத ஆம்பளை... நீங்க சொல்லியா கேட்கப் போகிறாரு..?''

''அப்படியா அத்தை?''

''அது நான் வாங்கி வந்த வரம் மருமகனே.. என் கதை உங்களுக்கு எதுக்கு..? நீங்க சாப்பிடுகிற வேலையைப் பாருங்க.''

''இப்போது சாப்பாடா அத்தை முக்கியம்? உங்க சோகம் என்னன்னு என்கிட்ட சொல்லுங்க அத்தை.''

''சொன்னவுடனேயே நீங்க அதைத் தீர்த்து வைக்கப் போறீங்களா? எட்டுப்பட்டியிலயும் எல்லோருடைய பிரச்னைகளையும் தீர்த்து வைக்கிற மகராசன்.. என் பிரச்னையைக் கண்டுக்க மாட்டேன்கிறார்.. நீங்க பாவம் பச்சைப்புள்ளை.. உங்களால என்ன செய்ய முடியும்...?''

வைஷ்ணவியின் முன்னால் இந்த அத்தை.. பச்சைப் பிள்ளையென்று சொல்லி விட்டாளே.. என்று நொந்து போனான் ராமநாதன்.

வைஷ்ணவி அந்தப் பச்சைப் பிள்ளையைப் பரிகாசம் ததும்பும் விழிகளால் பார்த்தபடி சமையலறைக்குள் போய் விட்டாள்.

''என்ன மாப்பிள்ளை.. என் பெண்டாட்டியுடன் நடத்திய பேச்சு வார்த்தை முடிந்து விட்டதா.''

''அப்படி யெல்லாம் ஒன்றுமில்லை மாமா.. ஹி.. ஹி..''



''வேணாம் மாப்பிள்ளை... இப்படிச் சிரித்து வைக்கா தீங்க... சாப்பிட வரும்போதே சொல்லிவிட்டேன்... என் பெண்டாட்டி பேச்சுத்தான் வாய் நிறையப் பேசுவாள்... செய்கை வேறு மாதிரி இருக்கும்...''

ராமநாதன்... இலையைப் பார்த்த பார்வையைச் சாப்பிட்டு முடிக்கும் வரைக்கும் விலக்கிக் கொள்ளவே இல்லை...

ஒரு வழியாய் ராமநாதனின் வாய்க்குத் திண்டுக்கல் பூட்டு ஒன்றைப் போட்டு விட்டு... சிவகாமியின் பக்கம் திரும்பினார் வெங்கடாசலம்....

''அக்கா... நான் சொல்வதைக் கேள்...''

''சொல்லுடா தம்பி...''

''ஜெகனுக்கு ஒரு கால் கட்டுப் போட்டு விட்டால் எல்லாம் சரியாகி விடும்...''

''கால்கட்டா..? அவனுக்கு காலில் அடிபட்டிருக்கா..?''

''அதுதான் கல்யாணம்க்கா.. வரவர... உன் சின்ன மகன் போலவே நீ பேச ஆரம்பிச்சுட்டே...''

''தெரியாமல் கேட்டு விட்டேன்டா...''

''அதை விடு.. நான் சொன்னதை யோசித்துப் பாரு...''

''இதில் யோசிக்க என்னப்பா இருக்கு...? ஜெகனுக்கு இப்போது இருபத்தெட்டு வயது முடியப் போகுதே... இது கல்யாணம் பண்ணி வைக்கிற வயதுதானே...''

''அப்போ... நான் பொண்ணைப் பார்க்கவா...?''

''பாரு... பாரு...''

''ஜெகன்கிட்ட ஒரு வார்த்தை கேட்க வேண்டாமா?''

"அதை யாருப்பா அவன்கிட்ட கேட்கிறது...?"

"ஏன்... நான் கேட்கிறேன்..."

தான் எதிர்பார்த்து வந்ததைத் தம்பி... தன் வாயால் சொல்வதைக் கேட்ட சிவகாமியின் மனச் சோர்வு பறந்து விட்டது.



# 11

சிவகாமியும்.. பத்மாவதியும்... வாசல் பக்கமிருந்த வராண்டாவில் தொங்கிக் கொண்டிருந்த ஊஞ்சலில் அமர்ந்து ஊர்க் கதை பேசிக் கொண்டிருந்தார்கள்... மதிய உணவு முடித்த ராமநாதன் கண்கள் செருகவும் தூங்கப் போய் விட்டதால்... அவனைக் காவல் காக்க வேண்டிய கடமையில்லாத நிம்மதியுடன் வெங்கடாசலம் வெளியே போய்விட்டார்.

பிற்பகலுக்கே உரிய சோம்பலான சூழலில் தூங்க வேண்டுமென்ற நினைப்பே இல்லாமல்... அத்தையும்... அம்மாவும் சளசளத்துக் கொண்டிருந்ததை ரசித்துக் கேட்டபடி... அவர்களின் வாய் பார்த்துக் கொண்டிருந்தாள் வைஷ்ணவி.

"அப்படியா கதை...? இது எனக்குத் தெரியாதே பத்மா..."

"நீங்களே... சென்னைச் சீமையிலே கிடக்கறீங்க.. உங்களுக்கு எங்கே இந்தக் கதை தெரியப் போகுது..?"



"அதைச் சொல்லு... காலையில் காபி... டிபன்... மதியம் லன்ச்... சாயந்திரம் காபி டிபன்... நைட்டுக்கு டின்னர்... இப்படி சாப்பாட்டுக்கு மெனு சொல்லியே என் ஆயுள் கரையுது..."

"உங்களுக்காவது அதுக்கு மெனு சொல்கிற வேலை மட்டும்தான்... இங்கே நானேயில்ல... அடுப்படியில் நின்னு ஆக்கிப் போடணும்? என் நிலைமையை நினைச்சுப் பாருங்க..."

"ஏன் பத்மா... இங்கே வேலைக்கு ஆள் இருக்கே..."

"அதெல்லாம் ஒன்னுக்குப் பத்து ஆள் ஒத்தாசைக்கு இருக்குது... ஆனா மெயின் வேலையை நான்தான் செய்தாகணும்.. இல்லைன்னா உங்க தம்பிக்குச் சாப்பாடு தொண்டையில் இறங்காது.. அது எப்படித்தான் நாக்கை முழம் நீளத்துக்கு வளர்த்து வைத்திருக்கிறாரோ... பெண்டாட்டி சமைத்தால்தான் சாப்பிடுவார்.. இல்லைன்னா.. கொலைப் பட்டினிதான்..."

"உனக்கு... அவனைப் பட்டினி போட மனம் வரவில்லைன்னு சொல்லு..."

"வேற என்ன செய்வது...? கல்யாணம் பண்ணி.. இத்தனை வருசம் சேர்ந்து வாழ்ந்து இரண்டு பிள்ளைகளையும் பெற்றாச்சு... அவர் வயிறு வாடினா.. என் மனசுக்குத் தாங்காதுதான்..."

"பின்னே.. என்னவோ.. மதியம் சாப்பிடும்போது சின்னவன் கிட்ட தம்பியைப் பத்தி... குற்றப் பத்திரிகை வாசிச்சியே.."

"என்ன அண்ணி செய்றது...? பொழுது விடியறதுக்குள்ள.. பஞ்சாயத்து பண்ண வரச் சொல்லி.... கதவைத்

தட்டிடறாங்க.. இவரும் எட்டுப்பட்டிருக்கும் காரில போய்... சின்னக்கவுண்டர் போல.. தீர்ப்பைச் சொல்லி விட்டு வந்திடறாரு... பொழுதெல்லாம் பஞ்சாயத்து பண்ணிப்புட்டு... பொழப்பு தழப்ப... சாயங்காலமா பார்த்துபுட்டு.. அர்த்த ராத்திரியில வீட்டுக்கு வந்து கதவைத் தட்டறாரு... ஊர் சங்கதியையெல்லாம் கவனமா காது கொடுத்துக் கேட்கிற மனுசன்... வீட்டுச் சங்கதியைச் சொன்னால் மட்டும் தூங்கிக்கிட்டே கேட்கிறாரு...''

''என் தம்பி சுறுசுறுப்பானவன் ஆச்சே...''

''எவ்வளவுதான் சுறுசுறுப்பான ஆளா இருந்தாலும் அர்த்த ஜாமத்தில் தூக்கம் வரத்தானே செய்யும்...?''

''அப்போ.. நீ பகலில் வீட்டுச் சங்கதியைப் பேச வேண்டியதுதானே...''

''அடப் போங்கண்ணி... நீங்க வேற.. பகலில் இவரை வீட்டில் பிடித்து வைக்க முடியாமல்தானே.. நானும் அல்லாடுகிறேன்...''

''அப்போ மதியம் எங்கே சாப்பிடுவான்...?''

''அதுதான் என் கைச் சமையல் இல்லாட்டி அவர் தொண்டையில் சாப்பாடு இறங்காதுன்னு சொன்னேனே... கார் டிரைவர் வந்து சாப்பாட்டுக் கேரியரை வாங்கிக் கொண்டு போய் விடுவான்...''

''சரி... விடு.. பரம்பரை பரம்பரையாய்ப் பஞ்சாயத்துப் பண்ணிக் கொண்டிருக்கும் குடும்பத்தில் பிறந்து விட்டு... பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியுமா...?''

''ஊர் பிரச்னையையே பார்த்துக்கிட்டு இருந்தால்.. வீட்டுப் பிரச்னையை யார் பார்க்கிறது...?''



ஒரு கணம் தம்பி மனைவி... தன்னைத் தான் சொல்லுகிறாளோ என்று நினைத்து விட்டாள் சிவகாமி... ஆனால் அடுத்துப் பத்மாவதி பேசியதைக் கேட்டதும்... அவளுடைய சந்தேகம் மறைந்துவிட்டது.

''இன்றைக்குத்தான்... நம்ம வீட்டுப் பிரச்னை ஒன்றைப் பகலில் உட்கார்ந்து காது கொடுத்துக் கேட்டிருக்கிறார்....''

''நீ எதைச் சொல்கிறாய் பத்மா...?''

''நம் ஜெகனின் பிரச்னையைத்தான் சொல்கிறேன்...''

சிவகாமியின் மனம் குளிர்ந்து விட்டது.. ஒரு வினாடிக்குள் தம்பியின் மனைவியைத் தவறாக நினைத்து விட்ட... தன் மடமையை நினைத்து மனதிற்குள் தன்னையே கடிந்து கொண்டாள் சிவகாமி..

''ஆமாம்... இவ்வளவு நேரமாக வீட்டிற்கு வராமல் வைகுந்த் எங்கே போனான்...?''

''இது அரைப்பரிட்சை லீவு சமயமில்லையா அண்ணி... அவன் எங்க அம்மா வீட்டிற்கு... தேனிக்குப் போயிருக்கிறான்...''

''ஓ... வைஷ்ணவியை அனுப்பவில்லையா...?''

''வயதுக்கு வந்த பெண்ணை எப்படி அண்ணி தனியாக அனுப்புவது..?''

''வைகுந்த் போகிறானே...''

''அவன் பன்னிரண்டு வயதுப் பையன்... அவன் போகலாம். என்னதான் பிறந்த வீடாக இருந்தாலும் வைஷ்ணவியை அனுப்ப முடியுமா...? அங்கே கல்யாண வயதில் என் அண்ணன் மகன் வேறு இருக்கிறான்...''

''அப்போ சரி... அனுப்பக் கூடாதுதான்.''

இது கிராமத்துக் கலாச்சாரம்.. பெண்கள் வயதுக்கு வந்துவிட்டால்.. பாதுகாப்பைப் பலப்படுத்துவது.. சில வேளைகளில் அந்தப் பாதுகாப்பே பெண்களுக்குச் சிறையாகத் தோன்றிவிடும். ஆனாலும்... கட்டுக் காவலுக்குள்தான் அவள் இருந்தாக வேண்டும்.

வைஷ்ணவிக்கும் அப்படித்தான்... பன்னிரண்டு வயதிலேயே பருவம் எய்தி விட்டவள்... தன் குழந்தைப் பருவத்தைத் தொலைக்க நேர்ந்தது... மெல்ல... மெல்ல... அந்தக் கண்காணிப்புக்குப் பழகிவிட்ட வைஷ்ணவி.. இப்போது ஆர்வமாக ஜெகனின் விசயத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''அந்தப் பொண்ணு யாருன்னாவது தெரியுமா, அண்ணி...''

''தெரியாதே பத்மா... தெரிந்தாலாவது... அவளையே கட்டி வைத்து விடலாம்...''

''ஜெகனிடம் பேசிப் பார்க்கலாமே...''

''அப்படியெல்லாம் அவனிடம் அதட்டிப் பேசி எனக்குப் பழக்கமில்லை, பத்மா...''

''என்ன அண்ணி இப்படிச் சொல்கிறீங்க... பெத்த தாய் நீங்க... அதட்டிப் பேச உங்களால் முடியாதா?''

''நான் பெத்த தாய்தான் பத்மா.. ஆனால் ஜெகனோட அப்பா எங்களை விட்டுப் போய் விட்டப்போ... பெத்த தாயாய்.. நான் என்ன செய்தேன்... என் பிள்ளைக்கு அப்போ வயது இருபதுதான் இருக்கும். எனக்குப் பெத்த தாயாய் இருந்து... குடும்பத்தையும் தொழிலையும் தூக்கி நிறுத்தினான்... அன்றையிலிருந்து இன்றைக்கு



வரை... அவன்தான் எங்களுக்குப் பார்த்துப் பார்த்துச் செய்கிறான்... நான் அவனுக்கு ஒன்றுமே செய்ய வில்லை பத்மா... அப்படியிருக்கும்போது அவன் முகத்தைப் பார்த்து ஒரு கேள்வியை எப்படி நான் கேட்பது...?''

''சரி.. சரி... விடுங்கண்ணி... இப்படி பொசுக்கு... பொசுக்குன்னு எல்லாத்துக்கும் அழுதால் எப்படி...? அதுதான் உங்க தம்பிகிட்ட சொல்லிட்டிங்கள்ல... அவர் பார்த்துக்குவார்... கட்டிட்டு வாங்கன்னு நான் சொன்னாலே... வெட்டிட்டு வர்ற மனுசன்... அவரோட ஒத்த உடன் பிறப்பு... உயிருக்குயிரான அக்கா.. நீங்க சொன்னால்... சும்மாவா விடுவார்? வேரோடு பேர்த்துக்கிட்டு வந்து விட மாட்டாரா..?''

அப்போது... வீட்டு காம்பவுண்டிற்குள் வந்து நின்ற காரிலிருந்து இறங்கிய வெங்கடாசலம்... வேரோடு பெயர்த்துக் கொண்டு வந்தது போல்தான்... இருந்தார்.. அவசர நடையுடன் அவர்களின் அருகே வந்தவர்.

''அக்கா... இந்த போட்டோவைப் பாரு...'' என்று ஒரு பெண்ணின் போட்டோவைக் கொடுத்தார்.

அந்தப் புகைப்படத்திலிருந்த பெண்... அழகாய்... அம்சமாய்... அமெரிக்கையான தோற்றத்துடன் இருந்தாள்.

''யாருப்பா இது...?''

''உனக்கு இந்தப் பெண்ணைப் பிடித்திருக்கா...?''

''இப்படிப்பட்ட அழகான பெண்ணை யாருக்காவது பிடிக்காமல் போகுமா...?''

''இவளையே ஜெகனுக்குக் கல்யாணம் பண்ணி வைத்து விடலாமா..?''

''அப்படியா சொல்கிற..?''

சிவகாமி ஆர்வத்துடன் அந்தப் புகைப்படத்தை மீண்டும் பார்த்தாள்.

''பெண் பஞ்சவர்ணக் கிளி போல் இவ்வளவு அழகாக இருக்கிறாளே... இவள் ஜெகனுக்கு ஏற்ற பெண்தான்...''

''அப்போ... சாயங்காலம் நாம பெண் பார்க்க வருகிறோமுன்னு தகவல் அனுப்பி விடவா...?''

''ஏன்ப்பா... ஜெகனிடம் ஒரு வார்த்தை கேட்க வேண்டாமா?''

''அவன் எடுத்த எடுப்பில் மறுத்துப் பேசிவிட்டால் மறு வார்த்தை பேச... நம்மால் முடியுமா?''

''முடியாதுதான்..''

''அதனால் பெண்ணைப் பார்ப்போம்... பேசி முடிப்போம்.. கல்யாண விசயத்தை அவன்கிட்ட பேச.. நானாச்சு... கவலையை விடு...''

''பெண்ணை அவன் பார்க்க வேண்டாமா..?''

''பெண் பார்க்க வான்னா... உடனே தவ்விக்கிட்டு வந்து விடுவானா? வரமாட்டேன் என்பான்... ஆரம்பமே.. தடங்கலாகிடும்...''

''அது சரிடா தம்பி...பெண்ணை அவனுக்குப் பிடிக்க வேண்டாமா?''

''இந்தப் பெண்ணுன்னு இல்லை... நீ எந்தப் பெண்ணை அவன் கண்ணில காட்டினாலும்... இப்போதைக்கு இருக்கிற மனநிலையில் அவன் மாட்டேன்னுதான் சொல்வான்.. நான்தான் அவன்கிட்ட பேசுகிறேன்னு சொல்கிறேனே...''



சிவகாமியின் முகம் தெளிந்தது.. அவள் பத்மாவைப் பார்க்க... அவள் போட்டோவை வாங்கிப் பார்த்துவிட்டு உற்சாகமானாள்.

''அட... இது என் பெரியம்மாவோட பேத்தியாச்சே...''

''ஏன்டி... உன் தாய்மாமனின் பேத்தின்னு சொன்னால் ஆகாதா?''

''நீங்க அதிலேயே இருங்க...''

சிவகாமிக்கு விளங்கி விட்டது... பத்மாவதியின் பெரியம்மாவின் மகளான குணவதியை அவளுடைய தாய்மாமனின் மகன் பரந்தாமனுக்குத் திருமணம் செய்து கொடுத்திருந்தார்கள்.. பரந்தாமன் பத்மாவதிக்கு தாய்மாமனின் மகன் என்பதால்... வெங்கடாசலம் மனைவியை வம்புக்கு இழுத்தார்.

''அப்புறம் என்னண்ணீ... குணவதி அக்காவுக்கு... ஆண் ஒன்னு... பெண் ஒன்னுன்னு ரெண்டே பிள்ளைகள்தான்.. பெரியவன் பலராமன் மதுரை மெடிகல் காலேஜில் டாக்டருக்குப் படிக்கிறான்... இதுதான் கடைசி வருசம்...''

''அப்படியா...?''

''ஆமாங்க்கா... நான் நாலையும் யோசனை பண்ணித்தான் இந்த சம்பந்தத்தை முடிவு பண்ணினேன்.. இவள் இளைய பெண் ஹரிணி... மதுரை மீனாட்சி காலேஜில் பி.எஸ்ஸி. கடைசி வருடம் படித்துக் கொண்டிருக்கிறாள்...''

திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர் என்றால்.. பெண்ணைப் பற்றிய விவரங்களை ஆராய்வது அதன் வேர்...

# 12

வெங்கடாசலம் நான்கையும் யோசித்துச் செயல் படுபவர்... ஜெகந்நாதனுக்குத் திருமணத்தில் விருப்ப மில்லை... அவனைக் கட்டாயப்படுத்திச் சம்மதிக்க வைக் கும்போது... அவன்... பெரியவர்களுக்காகத் திருமணத் திற்கு ஒப்புக் கொண்டாலும்.. வாழ்க்கை என்று வரும் போது எப்படி வரும் மனைவியுடன் வாழ்வான் என்பதைச் சொல்ல முடியாது.

எனவே... அவனுக்கு வருகின்ற மனைவி... பொறுமை காக்கிறவளாக... கணவனின் குணமறிந்து.. அனுசரித்துப் போகிறவளாக இருக்க வேண்டும்.

ஹரிணி அப்படிப்பட்ட பெண் என்பது அவருடைய கணிப்பு.. கண்காணிப்புடன் வளர்க்கப்பட்டவள்... திருமண வாழ்க்கை முன்.. பின்னாக இருந்தாலும்... அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் வாழ்ந்து விட அவளால் முடியும்.

அத்தோடு... இன்னொன்றையும்... தொலை நோக் காக அவர் யோசித்தார். தேனியின் பெரிய செல்வந்தர் குடும்பங்களில் ஒன்றான பரந்தாமனின் மகன் பல ராமன்... ஒரு டாக்டர்... அவனுக்கு டாக்டருக்குப் படிக்க ஆரம்பித்திருக்கும் ப்ரீதாவைத் திருமணம் செய்து கொடுத்தால்.. ஒன்றுக்குள் ஒன்றாக.. இரண்டு



குடும்பங்களும் பிணைந்து விடும்.. அது சிவகாமிக்குப் பெரிய பலத்தைக் கொடுக்கும்.. ப்ரீதாவைத் திருமணம் செய்து கொள்ளும் தகுதியும்... ஜெகந்நாதனின் குடும் பத்தில் பெண் எடுக்கும் அளவிற்குச் சம அந்தஸ்தும்.. பரந்தாமனின் குடும்பத்திற்கு உண்டு.

இதைச் சிவகாமி சட்டென்று புரிந்து கொண்டுவிட் டாள். பத்மாவதிக்கோ அவளுடைய சொந்தத்தில் ஜெகந்நாதனுக்குப் பெண் அமைந்து விட்டதில் கொள்ளை மகிழ்ச்சி.

''அப்புறம் என்ன அண்ணி...நல்ல காரியத்தைத் தள்ளிப் போடுவாங்களா..? எதையும் யோசிக்காம சட்டு புட் டுன்னு காரியத்தை முடித்து விடணும் அண்ணி.... நீங்க கிளம்புங்க.. என்னங்க... பூ, பழம்.. வாங்கிக் கொண்டு போகணும்.. மசமசன்னு நிற்கறீங்களே...''

''ஏன்டி... நாம இருக்கிறது சுப்புலாபுரத்தில்... தேனிக் குத்தானே போகிறோம்... டவுனுக்குள் நுழைந்ததும்... முதலில் பூ பழத்தை வாங்கிவிட்டுப் போனால் போகிறது.. நீ தட்டுக்களை மட்டும் மறக்காமல் எடுத்துக் கொண்டு வா...''

''அதையும் ஏன்.. சின்னத்தனமா திருப்பிக் கொண்டு வரணும்... பூ, பழம் வாங்குகிறவர்... புதுத்தட்டை வாங்க மாட்டிங்களா...?''

''சொன்னாத்தானேடி எனக்கு அது தெரியும்...?''

''சொல்லாமல் என்றைக்கு உங்களுக்குத் தானாக எது வும் தெரிஞ்சுச்சு...''

''எப்படா.. மனுசன் சிக்குவான்னு காத்துக்கிட்டு இருந் தாயா...? போடி.. போய் அக்காவைக் கிளப்பி.. நீயும் கிளம்பி வா...''

''நான் கிளம்புவது சரி.. அது என்ன உங்க அக்காவையும் சேர்த்து... என்னைக் கிளப்பச் சொல்கிறீங்க... அவங்க தானாய்க் கிளம்ப மாட்டாங்களா...?''

''வாய் தவறிச் சொல்லிட்டேன்டி.. நீ மலையேறி விடாதே...''

''ஊம்... போவது என் பெரியம்மா மகளின் பெண்ணைப் பார்ப்பதற்காகங்கிறதால நான் இத்தோடு விடுறேன்...''

போர் நிறுத்தம் செய்து விட்டு.. பத்மாவதி வீட்டுக்குள் சென்றுவிட்டாள்... தூங்கிக் கொண்டிருந்த ராமநாதனைச் சிவகாமி தட்டி எழுப்பினாள்.

''டேய்.. எழுந்திருடா...''

''எதுக்கும்மா எழுந்திருக்கச் சொல்கிறீங்க... தூக்கத்திலாவது உங்க மீசைத் தம்பியிடம் இருந்து தப்பிக்கலாம்ன்னு பார்த்தால் விட மாட்டிங்களா..?''

''உளறாமல் எழுந்திரு... கிளம்பு...''

''எங்கேம்மா போகிறோம்..?''

''பெண் பார்க்க...''

''அதுக்கு... எதுக்கு வெளியில் போகணும்..?''

அறைக்குள் காபியோடு வந்த வைஷ்ணவியைப் பார்த்தபடி கேட்டான் ராமநாதன்.. அவளோ... காபியைக் கொடுத்து விட்டு ஓடி விட்டாள்.

'ஒரு நிமிடம் நின்று பேச மாட்டேன்... என்கிறாளே..' பெருமூச்சுடன் தாயைப் பார்த்தான்.

''ராம்.. கொஞ்சம் என் சக்தியைக் குறைக்காமல் எழுந்திருடா.. உன் அண்ணனுக்குப் பெண் பார்க்கப் போகணும்..''



''என்னது.. நிஜமாகவா..?''

''இதுக்கு ஏன்டா... நீ இந்த முழி... முழிக்கறே... உனக்கா பெண் பார்க்கப் போகிறோம்..? உன் அண்ணனுக்குத்தானேடா பெண் பார்க்கப் போகிறோம்...''

''எனக்குப் பெண் பார்க்கும் சிரமத்தையெல்லாம் நான் உங்களுக்குக் கொடுக்க மாட்டேன்ம்மா...''

ராமநாதன் எழுந்து புறப்பட்டான்... சற்று நேரத்தில் ராமநாதனின் காரில் பின் சீட்டில் சிவகாமி... வைஷ்ணவியும் ஏறிக் கொள்ள... வெங்கடாசலத்தின் காரின் பின் சீட்டில் வெங்கடாசலமும்... பத்மாவதியும் ஏறிக் கொண்டார்கள்.. வெங்கடாசலத்தின் கார் டிரைவர்.. காரைக் கிளப்பினான்.

''வைஷ்ணவி எங்கேடி?''

''அண்ணியுடன் வருகிறாள்...''

''ஏன்டி... உனக்குக் கொஞ்சமாவது அறிவு இருக்கா?''

''ஏன்... உங்களுக்குக் கொஞ்சம் வேண்டுமா..?''

''இந்த வக்கணைப் பேச்சுக் கொன்றும் குறைச்சலில்லை.... அவளை நம்மோடு கூப்பிட்டுக் கொண்டு வராமல்.. ஏன் அக்காவோடு ஏற விட்டாய்..?''

''ஏங்க... அந்தக் காரில் மூன்று பேர்.. இந்தக் காரில் மூன்று பேர்.. கணக்கு சரியாகத்தானே இருக்கு...''

''நீயும்... உன் கணக்கும்...''

'அந்தக் காரில் இருக்கும் என் அக்கா மகன்... கணக்குப் பண்ணுவதில் சூரப்புலிடி...' என்று மனைவியிடம் சொல்ல முடியாமல்...

''ஏன்.. இப்படி கட்டை வண்டி போலவே காரை ஓட்டுகிறாய்... வேகமாய்ப் போகிறதுக்கென்ன..?'' என்று டிரைவரிடம் எரிந்து விழுந்தார் வெங்கடாசலம்.

ராமநாதன் தன் காரின் ஆக்ஸிலேட்டரை அழுத்தினான்... கார் வேகமாய்ப் பறந்தது... வெங்கடாசலத்தின் காரைப் பின்னுக்குத் தள்ளியதும்.. காரின் முன் பக்கக் கண்ணாடியைச் சரி செய்து கொண்டு... வைஷ்ணவியைப் பார்வையிடலானான்... ஆனால் அவள் ஒரு முறை கூடக் கண்ணாடியைப் பார்க்கவேயில்லை. அவனுக்கு ஏமாற்றமாகி விட்டது.

''வைஷ்ணவி...''

''என்ன அத்தான்...?''

''என்ன படிக்கிறாய்...?''

''பிளஸ் டு...''

''என்ன குருப் எடுத்திருக்கிறாய்...?''

''பர்ஸ்ட் குருப்...''

''வெரிகுட்.. மேலே என்ன படிக்கப் போகிறாய்..?''

''எனக்கு டாக்டருக்குப் படிக்க வேண்டும்ன்னு ஆசை...''

''ஆனால் எனக்கு நீ இன்ஜினியரிங் படிக்கணும்னுதான் ஆசை..''

''எதுக்கு..?''

''எதற்கா? நான் இன்ஜினியரிங்தானே படிக்கிறேன்...''

''நீங்கள் படித்தால்.. நானும் அதையே படிக்க வேண்டுமா?''

''ஆமாம்...''



''எதுக்கு..?''

''எதற்கா..? அத்தான் எவ்வழியோ... அவ்வழியேதான் நீயும் போக வேண்டும்...''

''அதெல்லாம் முடியாது...''

''நோ.. நோ.. அப்படியெல்லாம் சொல்லக் கூடாதுடா செல்லம்... அப்புறம்.. அத்தான் அழுதுருவேன்...''

வைஷ்ணவி ரசித்துச் சிரித்தாள்... பின்னால் பார்த்து விட்டு, ''அப்பாவின் கார் வருகிறது...'' என்றாள்.

ராமநாதன் சட்டென்று வாய் மூடிக் கொண்டான்... தேனிக்குள் இரண்டு கார்களும் நுழைந்தன.. கடைத் தெருவில் நின்றன... பூ... பழம்.. தேங்காய்... வெற்றிலை பாக்கு.. புதிதாய்த் தட்டுகள் என்று எல்லாவற்றையும் வாங்கிக் கொண்ட சிவகாமியும்... பத்மாவதியும் ராமநாதனின் காருக்குள் ஏறிக் கொள்ள... வைஷ்ணவி வெங்கடாசலத்தின் காருக்குப் போய்விட்டாள்.

இந்த எதிர்பாராத மாற்றத்தைக் கண்டு ஏமாற்றம் கொண்ட ராமநாதன் -

''வைஷ்ணவி ஏன் அந்தக் காருக்குப் போய் விட்டாள்...?'' என்று சிவகாமியிடம் கேட்டான்.

''தட்டுக்களில் பழங்கள்.. தேங்காய்... பூவென்று எடுத்து வைக்க வேண்டும் மருமகனே.. அவளுக்கு என்ன தெரியும்.. அதுதான்... அவளை அவளுடைய அப்பாவுடன் அனுப்பிவிட்டேன்... நீங்க எடுத்து வைங்க அண்ணி...''

மிக அழகான பங்களாவின் முன்னால் அவர்களின் கார் போய் நின்றது.

''வாங்க.. வாங்க...''

பரந்தாமனும்... குணவதியும் வாசலுக்கு வந்து நின்று வரவேற்றனர். சிவகாமிக்கு அவர்கள் காட்டிய மரியாதையில் திருப்தி வந்தது... வைஷ்ணவியும்... பத்மாவதியும் கொண்டு போன தட்டுக்களை ஹாலில் இருந்த டீப்பாயின் மேல் வைத்தார்கள்.. எல்லோரும் ஹாலில் இருந்த சோபாக்களில் அமர்ந்தார்கள்.

''பரந்தாமன்..! இதுதான் என் அக்கா சிவகாமி... இவர் என் அக்காவின் சின்ன மகன்... இன்ஜினியரிங் காலேஜில் கடைசி வருசம் படிக்கிறார்... என் அக்காவின் பெரிய மகனுக்குத்தான் பெண் கேட்டு வந்திருக்கிறோம்...''

முதலிலேயே வந்திருப்பது மாப்பிள்ளையின் தம்பி என்று உணர்த்தி விட வேண்டும் என்று நினைத்தார் வெங்கடாசலம்... பின்னால்... இவர்தான் மாப்பிள்ளைன்னு நினைத்தோம் என்ற பேச்சு வந்து விடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தார்.

அதில் பத்மாவதிக்கு மனம் பூராவும் பெருமை வழிந்தது. கணவனின் புத்திசாலித்தனத்தை மெச்சி.. ஓர் பார்வையை அவரின் பக்கம் அனுப்பி வைத்தாள் அவள்.

குணவதி வேலையாள் கொண்டு வந்த காபி.. டிபன் தட்டுக்களைத் தான் வாங்கி எல்லோருக்கும் கொடுத்தாள். சற்று நேரத்தில் உள்ளேயிருந்து வந்து.. ஹாலில் இருந்த சிறிய ஷோபா ஒன்றில் அமர்ந்தாள் ஹரிணி.

''வணக்கம்...'' என்று பொதுவாக எல்லோருக்கும் கரம் குவித்தாள்.

போட்டோவில் இருந்ததை விட நேரில் அழகாக இருந்தவளைப் பார்க்கப் பார்க்க... சிவகாமிக்கு மனம் நிறைவடைந்து விட்டது.



குத்துவிளக்கின் சுடர் போல் அவளிடம் ஓர் அசாத்திய அழகு தெரிந்தது... ஜெகந்நாதனுக்கு இணையான பெண்.. இவள் ஒருத்திதான் என்று சிவகாமி முடிவே செய்து விட்டாள்.. வெங்கடாசலத்தை நோக்கி மெதுவாய்த் தலை அசைத்துத் தன் சம்மதத்தைத் தெரியப் படுத்தி விட்டாள்.

ராமநாதனுக்கு... தன் அண்ணனின் அதிர்ஷ்டத்தை நினைத்து ஆச்சரியமாக இருந்தது.

'இவ்வளவு அழகான பெண் அண்ணியாக வாய்த்தால்... அண்ணன் ஏன் நிலவைப் பார்த்து யார் நீன்னு கேட்கப் போகிறார்...'

அவர்கள் திருமணத்தைப் பேசி முடிவு செய்து விட்டார்கள்...

''என்ன பரந்தாமா... அக்காவுக்கு உன் பெண்ணைப் பிடிச்சிருச்சு... நீ என்ன சொல்ற...?''

பரந்தாமன் ஹரிணியை உள்ளே செல்லும்படி ஜாடை காட்டினார்... அவள் சென்று விட்டாள்.

''நான் சொல்றதுக்கு என்ன தம்பி இருக்கு... அன்னியம்... அசல்ன்னா நான் பயப்படலாம்.. பத்மாவதியின் நாத்தனார் மகனுக்குப் பெண் கொடுக்க நாங்கள் ஏன் தயங்கப் போகிறோம்? எங்களுக்கும் சம்மதம்தான்...''

''அப்புறம் என்னக்கா.. பெண்ணைப் பெற்றவர் பெண்ணைக் கொடுக்கச் சம்மதம் சொல்லிட்டார்... இனிக் கல்யாணத் தேதியைக் குறிச்சிரலாம்தானே...''

பரந்தாமனும்... குணவதியும்.. ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.. அதை வெங்கடாசலம் குறிப்பாய்க் கவனித்தார்.

''என்ன... பரந்தாமா..?''

''மாப்பிள்ளை பெண்ணைப் பார்க்க வேண்டாமா...?''

''உன் பெண்ணுக்கு மாப்பிள்ளையைப் பார்க்க வேண்டுமா...?''

''அப்படியெல்லாமில்லை தம்பி.. ஹரிணி எங்களின் முடிவுக்கு எதிர்ப் பேச்சு பேசாது...''

''மாப்பிள்ளை இப்போது வெளிநாடு போயிருக்கிறார் பரந்தாமா... வருவதற்கு ஒரு மாதம் ஆகிவிடும்... அவர் வந்தவுடனேயே பெண் பார்க்க வர முடியாது.. அவர் வேலை நெருக்கடி அப்படி.. அவர் வந்து... பெண் பார்த்து... அதுக்கப்புறம் கல்யாணம் நடத்துவதா இருந்தா.. ஒரு வருசம் ஓடியே போயிரும்.. நீ எப்படி ஹரிணியை நம்புகிறாயோ.. அப்படித்தான் நாங்களும் ஜெகனை நம்புகிறோம்... அக்காவுக்குப் பெண்ணைப் பிடிச்சுப் போயிருச்சு.. அடுத்த மாசம் வருகிற முதல் முகூர்த்தத்தில் கல்யாணத்தை வைச்சுக்க நினைக்குது.. நீ என்ன சொல்கிற... வெற்றிலை பாக்கை மாத்திக்க லாமா...?'' வெற்றிலை பாக்கை மாற்றிக் கொண்டு... திருமணத்தை உறுதி செய்து கொண்டு கிளம்பினார்கள் அவர்கள்.

## 13

ஜெகந்நாதன் வீட்டுக்குள் நுழையும் போதே... வாசலில் வெங்கடாசலத்தின் காரைப் பார்த்து விட்டான்.



''மாமா வந்திருக்கிறார் போல..'' என்றான் டேவிட் டிடம்...

''ஆமாம் சார்...'' என்றான் அவன்.

வீட்டுக்குள் நுழைந்ததும்.. வெங்கடாசலத்தைப் பார்த்து,

''வாங்க மாமா...'' என்றான்.

''அதுதான் வந்து விட்டேனில்ல... நீங்க என்ன மாப்பிள்ளை இப்படித் துரும்பாய் இளைத்திருக்கீங்க...?''

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை மாமா... அத்தை.. வைஷ்ணவி.. வைகுந்த் எல்லாம் எங்கே..?''

''உங்க அத்தைக்கு அவளுடைய பிறந்த வீட்டில் சீராடணும்னு ஆசை வந்து விட்டதாம்.. அதான் தேனி யில் அவங்களை விட்டுவிட்டு.. நான் எங்க அக்காகிட்ட சீராடலாமுன்னு வந்தேன்... அவளுக்கு அவங்க அப்பா வீடு இருந்தால்... எனக்கு என் அக்கா வீடு இல்லையா...?''

வெங்கடாசலத்தின் பேச்சைக் கேட்டுப் புன்முறுவல் செய்தான் ஜெகந்நாதன்... வெறும் வாய் வார்த்தையாக இல்லாமல்... இதயத்திலிருந்து பேசும்... தன் தாய் மாமனை அவனுக்கு எப்போதும் போல்... இப்போதும் பிடித்தது.

''அதைச் சொல்லுங்க மாமா... இது உங்கள் அக்கா வின் வீடுதான்.. உங்களுக்குப் போகத்தான் எங்களுக்கே இங்கே உரிமையிருக்கும்...''

''சரியாச் சொன்னீங்க மாப்பிள்ளை...''

தாய் மாமனிடம் அளவளாவி விட்டு...தன் அறைக்குச் சென்றான் ஜெகன்... சற்று நேரத்தில் அவனது அறையின்

அழைப்பு மணி ஒலித்தது.. கதவைத் திறந்தான்... வெங்கடாசலம் நின்றிருந்தார்.

''ம்ம்... உள்ளே வாங்க மாமா...''

''தொந்தரவு பண்ணிவிட்டேனா மாப்பிள்ளை...''

''நீங்கள் எனக்கு எப்போதுமே முதன்மையானவர் மாமா... இப்படிக் கேட்காதீர்கள்..''

வெங்கடாசலம் உள்ளே வந்து சோபாவில் அமர்ந்தார். தாய்மாமன்.. தன்னிடம் தனியாகப் பேச விரும்பி வந் திருப்பது புரிய.. கம்யூட்டரை அணைத்து விட்டு.. ஜெகந்நாதன்... அவர் அருகில் அமர்ந்தான்.

''சொல்லுங்க மாமா...''

''எதைச் சொல்லச் சொல்கிறீங்க, மாப்பிள்ளை...''

''நீங்க என்னிடம் பேச விரும்பி.. பேச வந்ததைச் சொல்லுங்கள்.''

''நீங்க புத்திசாலி மாப்பிள்ளை... இல்லாவிட்டால்.. இவ்வளவு பெரிய கம்ப்யூட்டர் நிறுவனத்தை வெற்றி கரமாய் நடந்த முடியுமா?''

ஜெகந்நாதன் பதில் சொல்லாமல் புன்னகைத்தான்.

''என்ன மாப்பிள்ளை.. இதைச் சொல்லவா.. என்னைத் தேடித் தனியாக வந்தீங்கன்னு கேட்கிறாப்புல சிரிக்க நீங்க...''

ஜெகந்நாதனின் புன்னகை மேலும் வலுத்தது... வெங்கடாசலம் அக்கா மகனின் சிரிப்பை ரசித்தவாறு.. தன் கையிலிருந்த போட்டோவை அவனிடம் நீட்டி னார்... அதை வாங்கிப் பார்த்தான் ஜெகன். அதில்



அழகாகச் சிரித்துக் கொண்டிருந்தாள் ஹரிணி... ஜெகந் நாதனின் புருவங்கள் உயர்ந்தன.

''இந்தப் பெண் யார் மாமா...?''

''இன்னும் எண்ணி முப்பதே நாள்களில்... உங்க கையால் தாலி வாங்கிக்கப் போகிறவள் மாப்பிள்ளை...''

ஜெகந்நாதன் அதிர்ச்சியுடன் கையிலிருந்த புகைப் படத்தை நழுவ விட்டான்.

''என்ன சொல்கிறீங்க மாமா...?''

''இந்தப் பெண்ணைத்தான் உங்களுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கப் பேசி நிச்சயம் பண்ணிவிட்டு வந் திருக்கிறோம் மாப்பிள்ளை... வருகிற தை மாதம் முதல் முகூர்த்தத்தில் கல்யாணம்...''

''மாமா... என்ன இது..? நீங்கள் என்னென்னவோ சொல்கிறீங்க... என் கல்யாணத்தைப் பற்றி என்னிடம் ஒரு வார்த்தை கேட்க வேண்டாமா?''

''கேட்கணும்தான்.. அக்கா உங்ககிட்ட ஒரு வார்த்தை கேட்கணுமின்னுதான் சொல்லுச்சு.. நான்தான் என் மாப்பிள்ளை என் வார்த்தையைத் தட்ட மாட்டார்ன்னு சொல்லி... பிடிவாதமாய் வெத்தலை பாக்கை மாத்த வைச்சேன்...''

''வெத்தலை பாக்கை மாற்றுவதா?''

''அது கிராமத்துச் சம்பிரதாயம் மாப்பிள்ளை... வெத் தலை பாக்கை மாற்றிவிட்டால்.. அதை மாற்ற மனுசப் பிறவியால் முடியாது... கல்லில் வடித்த கல்வெட்டு அது... பெண்ணைப் பெத்தவங்களும்... மாப்பிள்ளையைப் பெத்தவங்களும் வெத்தலை பாக்கை மாற்றிட்டா... அங்கே அந்தக் கல்யாணம் உறுதியாயிடுது.. அப்படி

அந்தக் கல்யாணம் நடக்கலைன்னா... எந்தத் தரப்பிலிருந்து அந்தக் கல்யாணம் நிறுத்தப்பட்டதோ... அந்தத் தரப்பிலிருந்து பஞ்சாயத்தில் போய் நிற்கணும்... உங்க தாய்மாமன் எட்டுப்பட்டிக்கும் பஞ்சாயத்துப் பண்ணிப் பழக்கப்பட்டவன் மாப்பிள்ளை...என் மரியாதை இப்ப உங்க கையில் இருக்கிறது... ஏன்னா வெத்தலை பாக்கை என் அக்காவின் சார்பா மாற்றிக் கொண்டது நான்... உங்க தரப்பு ஆளாய் நின்று இந்தக் கல்யாணத்தை உறுதி செய்தவன் நான்... பஞ்சாயத்தில் தீர்ப்புச் சொல்லிப் பழக்கப்பட்டவனைத் தீர்ப்பைக் கேட்க வைத்து விடாதீங்க, மாப்பிள்ளை...''

''மாமா... இது என் வாழ்க்கைப் பிரச்னை...''

''இது எனக்குக் கௌரவப் பிரச்னை மாப்பிள்ளை...''

''என் வாழ்க்கையைப் பணையம் வைக்கச் சொல்கிறீங்களா...?''

''கௌரவம் வாழ்க்கையில் மிக உயர்ந்ததுன்னு உங்களுக்குத் தெரியாதா...?''

அங்கே தாய்மாமனும்... மருமகனும் வாதாடிக் கொண்டார்கள்... எதிரே இருப்பது மதிப்பிற்குரிய தாய்மாமன்... ஜெகன் தவித்தான்.



# 14

''எதற்காக நீங்கள் படித்துக் கொண்டிருக்கும் போதே... கம்பெனியைக் காப்பாற்றப் போராடினீங்க மாப்பிள்ளை...



உங்க குடும்பத்தின் கௌரவம் குலைந்து விடக் கூடாதுன்னுதானே... அதைப் போல்தான் இதுவும்...''

''மாமா... அதுவும்... இதுவும் ஒன்றா...?''

''ஒன்றுதான் மாப்பிள்ளை...''

''இப்போது எனக்குக் கல்யாணத்திற்கு என்ன அவசரம்?''

''காலத்தில் பயிர் செய்ய வேண்டும்... அடிப்படையில் நான் விவசாயி... என் அக்கா விவசாயக் குடும்பத்தில் பிறந்தது... உங்களுக்குத் தெரியும்... இது உங்களுக்குக் கல்யாணம் பண்ண வேண்டிய வயசு... ஏற்கெனவே இது இரண்டு மூன்று வருசம் தள்ளிப் போயிருக்கு மாப்பிள்ளை...''

''எனக்கு இப்போதைக்குக் கல்யாணம் வேண்டாம் மாமா...''

''ஏன்...? பதில் சொல்லுங்க மாப்பிள்ளை... ஏன்?''

''இதுக்குப் பதில் வேறு தேவையா?''

''தேவைதான் மாப்பிள்ளை... காலாகாலத்தில் நடக்க வேண்டியதை நீங்க வேண்டாமுன்னு தள்ளிப் போட்டால் அதுக்கு கட்டாயம் காரணம் இருக்கணுமே.. யாரையாவது காதல்... கீதல்... பண்ணுகிறீங்களா..?''

''மாமா...''

''சொல்லுங்க மாப்பிள்ளை.. அப்படி ஏதாச்சும் இருந்தால் அந்தப் பொண்ணு வீட்டில் நானே பேசறேன்... குறிச்ச முகூர்த்தத்தில் அந்தப் பெண்ணுக்கும்... உங்களுக்கும் கல்யாணம் பண்ணி விடலாம்... சரியான

காரணம் இருந்தால் ஹரிணியின் வீட்டில் சமாதானமாகி விடுவாங்க...''

''ஹரிணியா... யார் அது...''

''உங்க பெண்டாட்டியின் பெயர்தான் ஹரிணி...''

''மாமா.. இது என்ன... யாரோ ஒரு பெண்ணைப் போய் என் மனைவின்னு சொல்லிக்கிட்டு... ஊஹூம்... இது நன்றாக இல்லை மாமா...''

''நல்லாத்தான் இல்லை... நான் வேறு என்ன செய்கிறது... வாழ வேண்டிய வயசில் நீங்க வாழ ஆரம்பிக்காட்டி... ஏற்கெனவே அரை உயிராய் இருக்கிற என் அக்கா கால் உயிராய் ஆகிவிடும்... கால் உயிரும் எப்போது காணாமல் போய் விடுமோன்னு நான் சோறு... தண்ணி... என் தொண்டைக்குள் இறங்காமல் கவலைப்பட்டுக்கிட்டு கிடக்கணும்...''

''மாமா...''

''உங்க அப்பா போன பின்னால் என் அக்கா யாருக்காக உயிர் வாழுது? பெத்த பிள்ளைகளுக்காக உயிர் வாழுது... பெத்த பிள்ளைகள் இப்படித் தனிமரமாய் நின்னா... அது மனசு தாங்குமா?''

''நான் எனக்குத்தானே கல்யாணம் வேண்டாம் என்று சொல்கிறேன்.. ராம்... ப்ரீதா.. இவங்களுக்குக் கல்யாணம் பண்ணி வைக்க வேண்டாமென்று சொல்லவில்லையே...''

''ஏன் மாப்பிள்ளை... உங்க தம்பிக்கும்.. தங்கைக்கும் உங்கள் மேல் எவ்வளவு பாசமின்னு உங்களுக்குத் தெரியாதா? அண்ணன் தனி மரமாய் நிற்கும்போது...



அவங்க இரண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்குவாங்களா?''

''அதற்காக... பிடிக்காத கல்யாணத்தை நான் எப்படிச் செய்து கொள்ள முடியும்...?''

''தனக்காக வாழாமல்... பிறருக்காக வாழ்கிறவர் என் பெரிய மருமகன் ஜெகன்னு எல்லோர்கிட்டயும் நான் வாய் சொல்லிக்கிட்டு அலைவேன்... அந்த வார்த்தையெல்லாம் பொய்யாய்ப் போவதா...?''

''பிறருக்காகத் தியாகம் செய்யலாம்... ஆனால்... பிடிக்காத கல்யாண வாழ்க்கையை வாழ்வது எப்படி...''

''அது எப்படிப் பிடிக்காமல் போகும்?''

இந்தக் கேள்விக்கு என்ன பதிலைச் சொல்வது என்று திகைத்துப் போனவனாய்... வெங்கடாசலத்தைப் பார்த்தான் ஜெகந்நாதன்... இப்படிப்பட்ட எக்குத்தப்பான கேள்வியை அக்காள் மகனைப் பார்த்துக் கேட்டு வைத்து.. பதில் சொல்ல முடியாமல் அவன் கைகளைப் பிசைவதை சுவாரஸ்யமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தவர் சிரித்தார்.

''ஏன் மாப்பிள்ளை... நீங்க என்ன முற்றும் துறந்த முனிவரா? அட, அந்த முனிவரே... காட்டுக்குள் வந்த மேனகையிடம் மயங்கிப் போய்க் குடும்பம் நடத்திச் சகுந்தலையைப் பெற்றுக் கொண்டாராம்.. நீங்கள் வீட்டுக்குள் வரும் உங்கள் பெண்டாட்டியுடன் குடும்பம் நடத்தி என் அக்காவுக்கு ஒரு பேரப் பிள்ளையைத் தர மாட்டிங்களா?''

இப்படிப் பேசுபவரிடம் எப்படித் தன் நிலையை விளக்குவது.. முடியைப் பிய்த்துக் கொள்ளாத குறையாய் ஜெகந்நாதன் யோசித்தான்.

''எதுக்கு மாப்பிள்ளை இம்புட்டு யோசிக்கறீங்க... எப்படியும் நீங்க தாலியை எந்தப் பெண்ணின் கழுத்தி லாவது கட்டித்தான் ஆக வேண்டும்.. அதை இந்தப் பெண்ணின் கழுத்தில் கட்டுங்களேன்...என் அக்கா ஆசைப்படுதுன்னு வீட்டில் ஆயிரம் சாமான்களை வாங்கிப் போட்டிருக்கீங்க.. அதைப் போல் இந்தப் பெண்ணையும் கொண்டு வந்திருப்பதாக நினைத்துக் கொள்ளுங்களேன்... அக்காவின் ஆசைக்காக... வீட்டுக் குள் ஒரு மருமகளைக் கொண்டு வருவதில் இவ்வளவு தயக்கம் எதற்கு மாப்பிள்ளை...''

''நீங்கள் புரியாதவர் இல்லை மாமா...''

''ஓரளவு புரிந்தவன்தான்...''

''இருந்தும் இப்படிப் பேசுகிறீர்களே...''

''ஏன்.. நான் சரியாகத்தானே பேசுகிறேன்...''

வெங்கடாச்சலம் அறியாப் பிள்ளை போல் முகத்தை வைத்துக் கொள்ள... ஜெகந்நாதன் தன் கோபத்தை விழுங்கிக் கொண்டான்.

# 15

''மாமா.. சோபாவும் மற்ற பர்சனிச்சரும் ஜடப் பொருள்கள்... அதற்கு உயிரில்லை... உணர்வில்லை... மனதில்லை... வேண்டாத பொருளாய் அது வந்து



இறங்கியிருந்தாலும்... அது வேண்டாமென்று நாம் தூக்கி மூலையில் போட்டாலும்.. அதனால் அதை உணர்ந்து கொள்ள முடியாது.. அது அந்தப் பொருள் களைப் பாதிக்கவும் செய்யாது...''

''அட... ஆமாம்... ஆனால் இதை எதுக்கு விலாவாரி யாய் இப்போது எனக்குச் சொல்கிறீங்க மாப்பிள்ளை...?''

''எனக்கு வரப் போகும் பெண்டாட்டி ஜடப் பொரு ளில்லை... ரத்தமும் . சதையும் சேர்ந்த மனுஷி.. அவ ளுக்கும் மனதிருக்கிறது.. உயிர் இருக்கிறது.. உணர் விருக்கிறது... சுயமரியாதையும் ரோசமும் இருக்கிறது.. இவை எதுவும் இல்லாதவர்கள் மனிதப் பிறவிகள் இல்லை... அவளை நான் ஒதுக்கி வைத்தால்..அதை விடக் கொடுமை... வேறு எதுவும் இருக்காது...''

''அப்போ... சேர்ந்து குடும்பம் நடத்துங்கள்...''

''அதுதான் எனக்குப் பிடிக்கவில்லையே...''

''ம்ம்... அப்போ.. இதற்கு என்னதான் வழி சொல் கிறீங்க... உங்களுக்காக ஹரிணியின் அப்பாவிடம் நான் பேச்சுக் கேட்டுத்தான் ஆக வேண்டும் போல.. சரி.. விடுங்கள்.. எட்டுப் பட்டிக்கும் பஞ்சாயத்துப் பண்ணு கிறவன் நான்.. இது வரைக்கும் என்னைப் பார்த்து விரல் நீட்டி ஒருவன் கேள்வி கேட்டதில்லை... அப்படிக் கேட்குமாறு நான் வைத்துக் கொண்டதும் இல்லை... இன்றைக்கு இப்படி ஆகிவிட்டது... என்ன செய்வது? ம்ஹூம்...''

''மாமா... என்னை வதைக்காதீங்க... நான் உங்களுக்கு அப்படி ஒரு நிலைமை வர விட மாட்டேன்...''

வெங்கடாசலம் முகத்தில் நம்பிக்கை வெளிச்சம் பரவ நிமிர்ந்து கொண்டார்.

''அப்போ... இந்தக் கல்யாணத்திற்கு நீங்கள் சம்மதிக் கறீங்களா?''

''ம்ம்... ஆனால்...''

''நீங்க கவலையே பட வேண்டாம்... ஹரிணி தங்க மான பெண்... உங்கள் மனமறிந்து நடந்து கொள்ளும்...''

ஜெகந்நாதன் வெறுமையாகச் சிரித்து வைத்தான். வெங்கடாசலம் வந்து சொன்ன செய்தியைக் கேட்டு... சிவகாமி ஆச்சரியத்தில் கண் விரித்தாள்.

''நிஜமாவாடா... இது உண்மையா..?''

''ஏன்க்கா... நிஜம்ன்னாலும்... உண்மையின்னாலும் ஒரே அர்த்தம்தானே...''

''என்னவோ... போடா... என்னால் இதை நம்பவே முடியவில்லை.. நம்ப ஜெகன் கல்யாணத்திற்குச் சம் மதித்து விட்டானா...?''

ஜெகந்நாதனின் சம்மதம் கிடைத்த பின்னால் காரி யங்கள் மிகவும் துரிதமாக நடந்தன.. ராமநாதன் ஓடி.. ஓடி... வேலை செய்தான்.. ப்ரீதா எல்லோருக்கும் தவ றாமல் திருமண அழைப்பிதழ்களைக் கொடுக்கும் வேலையை ஏற்றுக் கொண்டாள்.. திருமணத்திற்கு ஒரு வாரம் முன்னதாகவே..தன் குடும்பத்துடன் வந்து இறங்கி விட்டார் வெங்கடாசலம்... சும்மாவே சுறுசுறுப்பான ராமநாதன்.. இன்னும் சுறுசுறுப்பானான்.

திருமண நாள் வந்தது.. திருமண மண்டபத்தில் முதல் நாள் மாலையே பெண் வீட்டார் வந்து இறங்கி



விட்டார்கள். பெண் அழைக்க வெங்கடாசலமும்.. பத்மாவதியும்.. வைஷ்ணவியையும்... ப்ரீதாவையும் கூட அழைத்துக் கொண்டு போயிருந்தார்கள்.

பலராமனைப் பெண் வீட்டில் முதன் முதலாகச் சந்தித் தாள் ப்ரீதா.

உயரமாய்.. சிவந்த நிறத்துடன்... கரிய மீசையுடன்.. கவர்ச்சியாக இருந்த பலராமனின் தோற்றம் கண்டு.. முதல் பார்வையிலேயே மயங்கி விட்டாள் ப்ரீதா.

அவள் மருத்துவக் கல்லூரி மாணவி என்பதை அறிந் திருந்த பலராமன்... படிப்பு சம்பந்தமாய் அவளிடம் இயல்பாகப் பேசினான்... ப்ரீதாவும் பதில் சொன்னாள்.

நல்ல நேரத்தில் பெண்ணை அழைத்துக் கொண்டு அவர்கள் கிளம்பினார்கள்.

இங்கே மாடியில் தன் அறைக்குள் புகுந்து கொண்ட ஜெகந்நாதனைக் கிளப்ப சிவகாமி படாதபாடு பட்டுக் கொண்டிருந்தாள்.

''ஜெகன்...''

''என்னம்மா...''

''நாம் கிளம்ப வேண்டும்டா...''

''எங்கே..?''

''கல்யாண மண்டபத்திற்கு...''

''நாளைக்குத்தானே கல்யாணம்?''

''விடிந்தால் கல்யாணம்டா...''

''அப்போது போனால் போதும்...''

சிவகாமி திகிலடைந்து விட்டாள்... வெங்கடாசலம் பெண் அழைக்கப் போய் விட்டார்... ராமநாதனைத்

துணைக்கு அழைத்தால் அவன் அண்ணனிடம் பேசத் தயங்கிப் பம்மினான்.

"நான் அண்ணனிடம் பேசுவதா..? போங்கம்மா... போங்க..."

"எங்கேயடா போகச் சொல்கிறாய்..? பொண்ணு வீட்டுக்காரங்க மண்டபத்திற்கு வந்தால்... அங்கே வரவேற்க நாம் இருக்க வேண்டாமா..?"

"இருக்கணும்தான்.."

"வெறும் வெத்திலை பாக்கைத்தான் மாற்றியிருக்கிறோம்.. முறைப்படி இன்னும் நிச்சயதார்த்தம் நடக்கவில்லை... அதுவும் இன்றைக்கு நடந்தாக வேண்டும்... அதற்கு ஜெகன் இருக்க வேண்டாமா?"



# 16

சிவகாமி பாவம்.. இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவித்தாள்... சண்டித்தனம் பண்ணும் மகனையும் அவன் மனம் கோணாமல் கிளப்ப வேண்டும்.. பெண் வீட்டார் வரும்போது.. திருமண மண்டபத்தில் நின்று அவர்களை வரவேற்கவும் வேண்டும்.

'என்ன செய்வது..?'

வேறு வழியின்றி.. ஆபத்பாந்தவன்... அனாதரட்சகன் என்றெல்லாம் அவள் நினைத்துக் கொண்டிருக்கும் வெங்கடாசலத்திற்குப் போன் பண்ணினாள்.



"என்னக்கா?"

பெண் வீட்டாருடன் சென்னையை நெருங்கிக் கொண்டிருந்த வெங்கடாசலம் வினவினார்... சிவகாமி... விவரம் சொன்னாள்.

"இவ்வளவுதானே.. இதுக்குப் போய் ஏன் கவலைப்படறே... நீ ராமநாதனை அங்கே இருக்க வைத்து விட்டு மண்டபத்திற்கு வந்துவிடு.. நம்ம ஜாதி ஜனம்... வருவதற்காகப் பதினைந்து பஸ் பிடித்திருக்கிறோம்... அதில் அவங்க வந்து கொண்டிருக்கிறாங்க.. நீ மண்டபத்தில் இல்லையின்னா அது நல்லாயிருக்காது..."

"ஏன்டா... இப்படி மண்டபத்திற்கே வர மாட்டேன்னு சொல்கிறவன்... நாளைக்குத் தாலிகட்ட வராமல் கம்பி நீட்டி விட்டால் என்ன செய்வது...?"

"அதுக்குத்தான் ராமநாதனைக் காவலாய்ப் போடுன்னு சொல்கிறேன்.. அவன் ஜெகனைப் பார்த்துக்கட்டும்... நீ மண்டபத்திற்கு வந்து சேரு..."

"ராமின் பேச்சிற்கு ஜெகன் கட்டுப்பட மாட்டானேடா..."

"என் பேச்சிற்குக் கட்டுப்படுவானில்லையா..?"

"உன்னை நம்பித்தானேடா இந்தக் கல்யாணத்தில் இறங்கியிருக்கிறேன்..."

"நம்பினோர் கை விடப்படார்... நீ தைரியமாய் மண்டபத்துக்கு வா.. நாங்க சென்னைக்குள் நுழைந்து விட்டோம்... ராமநாதன் ஜெகனிடம் எதுவும் பேச வேண்டாம்... அவன் வீட்டை விட்டு வெளியே போனால்.. நமக்குத் தகவல் சொல்ல ஆள் வேண்டுமில்ல..?"

வெங்கடாசலம் கூறியதைக் கேட்டுப் பயந்து விட்டாள் சிவகாமி.

''என்னடா தம்பி இப்படிச் சொல்கிற..?''

''ஏன்க்கா..?''

''என் வயிற்றில் புளியைக் கரைக்கிறயே...''

''பயப்படாதே.. நானிருக்கிறேன்..''

''ஏன்டா.. இந்தக் கல்யாணம் ஒழுங்காய் நடந்து விடுமா?''

''ஏன் நடக்காது..? நடக்கும்...''

''இப்படிப் பயந்து.. பயந்து கல்யாணம் பண்ண வேண்டியதாப் போச்சே.. ஊரில... உலகத்தில் இப்படியும் கல்யாணம் நடக்குமாடா தம்பி...''

''இப்பல்லாம் நிறையக் கல்யாணங்கள் இப்படித்தான் நடக்குதாம்...''

''இது என்னடா கதையாய் இருக்கு...''

''இப்பக் காலமே மாறிப் போச்சுக்கா... நம்ம காலம் வேற.. இப்பக் காலம் வேற.. நம்ம காலத்தில் நம்மை நம்பி நம்ம அப்பாவும்.. அம்மாவும் தைரியமாய்க் கல்யாண ஏற்பாட்டைப் பண்ணினாங்க.. இப்பப் பாரு... கழுத்தில் தாலி ஏறுகிற வரைக்கும் எதுவும் நிச்சயமில்லைன்னு ஆகிருச்சு... மணவறைக்கு வந்து நின்னு போன கல்யாணம்தான் எத்தனை...! மாப்பிள்ளையும்... பொண்ணும் ஜோடி மாறிப் போய்த் தாலிகட்டிக் கிட்ட கதைகள் எத்தனை...!''

''இப்ப ஏன்டா... அந்தக் கதையை எல்லாம் சொல்கிற... எனக்குப் பயமாய் இருக்கே...''



''நீ பயப்படாமல் கல்யாண மண்டபத்திற்கு வாக்கா... நம்ம ஜாதி ஜனத்தை எதிர் கொண்டழைக்க நீ கல்யாண மண்டபத்து வாசலில் வந்து நிற்கலைன்னு வை... பதினைந்து பஸ்ஸூம்... வந்த வழியைப் பார்த்துத் திரும்பிரும்..''

''அடக்கடவுளே... ஏன்டா என்னை நடுங்க வைக்கிற...''

''இப்ப என்ன செய்துக்கிட்டு இருக்கே...''

''காரில் ஏறிக்கிட்டு இருக்கேன்டா... அப்பா டேவிட்டு... எங்கேப்பா போய்த் தொலைஞ்சே.. வந்து காரைக் கிளப்பு.. டேய் ராமநாதா... உன் அண்ணன் தும்மினால் கூட உடனே எனக்குப் போன் போட்டு விடு...''

''அது.. இப்பத்தான் நீ என் அக்கா..''

வெங்கடாசலம் போனை அணைத்து விட்டு அருகிலிருந்த ப்ரீதாவைப் பார்த்துப் புன்னகைத்தார்.

தாய்மாமனின் சாகஸக் கதைகளைப் பற்றி ப்ரீதா கேள்விப்பட்டவள்தான்... இன்றுதான் அதை நேரடியாய்க் கேட்பதால் 'ஆ'வென்று பிரமிப்புடன் அவரைப் பார்த்துக் கொண்டு வந்தாள்.

''என்னம்மா அப்படிப் பார்க்கிற...?''

''எப்படி மாமா.. இப்படி இருக்கிறீங்க..?''

''இது என்னம்மா கேள்வி..?''

''யு ஆர் ஸோ கிரேட் மாமா.. நான் மட்டும் இன்னும் கொஞ்சம் பெரியவளாக இருந்தேன்னு வைங்க... இரண்டாம் தாரமாக இருந்தாலும் பரவாயில்லைன்னு உங்களையே கல்யாணம் பண்ணிக் கொள்வேன்...''

அக்கா மகளின் வார்த்தைகளைக் கேட்டு வெங்கடா சலம் மீசையை நீவிக் கொண்டே மனைவியைப் பார்க்க... அவள் அவரைக் கனல் பார்வை பார்த்தாள்.



# 17

பத்மாவதி கணவனைப் பார்த்த பார்வையில் 'ஊருக்கு வா.. உன்னைப் பேசிக் கொள்கிறேன்..' என்ற எச்சரிக்கை இருந்தது.

மனைவியின் பார்வையைக் கண்டு வெங்கடாசலம் மீசையை நீவுவதை விட்டு விட... பத்மாவதி நாத்தனார் மகளைப் பஸ்பமாக்கி விடும் உத்தேசத்துடன் பார்த்தாள்.

''என்ன அத்தை அப்படிப் பார்க்கறீங்க...''

''எனக்குப் போட்டியாய்... இன்னும் எத்தனை பேர் வருவாங்கன்னு பார்க்கிறேன்...''

''எனக்கும் முந்தி மாமாவை சைட் அடிக்க ஊரில் ஆள் இருக்கா...''

''அதுதான் இவர் தினம்.. தினம்... எட்டுப்பட்டி பஞ்சாயத்தையும் பார்த்து விட்டு வருகிறாரே...''

''ம்ம்... பஞ்சாயத்து பண்ணினால் ரசிகைகள் வரத்தான் செய்வார்கள்...''

''வருவார்கள்.. வருவார்கள்.. கேட்கிறவள் கேணைச்சி யாக இருந்தால்... சொல்கிறவள் எதை வேண்டுமானாலும் சொல்வாள்.. நான் கேணைச்சியில்லை...''



வைஷ்ணவி நடப்பதைக் கவனித்து விட்டு வாய் பொத்திச் சிரித்தாள்... ப்ரீதா குனிந்து வைஷ்ணவியின் காதுகளில் முணுமுணுத்தாள்.

''அத்தை பயங்கர சூடாக ஆகிட்டாங்க...''

''நீ இப்படிப் பேசி வைத்தால் வேறு எப்படி ஆவாங்க...''

''சும்மா... ஒரு ஜில்லுக்குத்தானே இதையெல்லாம் சொல்வது? உன் அப்பாவின் ஹீரோயிஸத்தை வேறு எப்படி மெச்சிக் கொள்வது?''

''நீ ஜில்லுன்னு ஆனால்.. என் அம்மா சுடுதண்ணி யாய் ஆகிடுவாங்க... என் அப்பா எட்டுப் பட்டிக்குத்தான் ஹீரோ.. என் அம்மாவின் முன்னால் வெறும் ஜீரோ... போடு தோப்புக் கரணம்ன்னு எங்க அம்மா சொன்னால்.. இதோ பத்மா.. நீயே எண்ணிக்கோன்னு போட ஆரம் பித்து விடுவார்...''

''நிஜமாகவா சொல்கிறாய் வைஷ்ணவி?''

''பின்னே.. பொய்யா சொல்கிறேன்..?''

''என்னப்பா இது? வீச்சரிவாள் வெங்கடாசலத்தின் அக்கா மகள்ன்னு நான் எவ்வளவு பெருமையா இருந் தேன்... கடைசியில் மாமாவும் இப்படித்தானா..?''

''உன் மாமா மட்டுமில்லை... ஊரில் இருக்கும் கல் யாணமான ஆம்பளைகள் எல்லோருமே இப்படித்தான்...''

''ஓ...''

அவர்கள் ரகசியப் பேச்சு வார்த்தை நடத்திக் கொண் டிருக்கும் போதே திருமண மண்டபம் வந்துவிட்டது... அவர்கள் காரை விட்டு இறங்கினார்கள்.

''எல்லோரும் வாங்க..'' என்று வரவேற்றார் உறவுக் காரப் பெண்மணி ஒருவர்.

''அக்கா எங்கே..''

''முதலில் பெண்ணுக்கு ஆரத்தி எடுத்து முடிங்க... பின்னாடியே வருகிறேன்னு சொல்லி அனுப்பி விட் டாங்க...''

பெண் அழைத்து வந்த காரில் இருந்து ஹரிணி திருமணப் பெண்ணின் அலங்காரத்தோடு இறங்கி வர... அவளின் இரு பக்கமும் வைஷ்ணவியும்... ப்ரீதாவும் போய் நின்று கொண்டார்கள். உறவுக்காரப் பெண் ஒருத்தி வந்து ஆரத்தி எடுத்து முடிக்கவும்.. ஹரிணியை அழைத்துக் கொண்டு பெண் வீட்டார் மண்டபத்திற்குள் நுழைந்தார்கள்.

''எல்லோரும் வரணும்..'' என்று கை குவித்து வர வேற்றபடி சிவகாமி அங்கே வந்தாள்.

பெண் வீட்டாரை முறைப்படி விசாரித்துவிட்டு.. பதினைந்து பஸ்களில் வந்து இறங்கியிருந்த சொந்த பந்தங்களை விசாரிக்கப் போனாள்.

''வாங்கண்ணா... எங்கே மதினி வரலையா... பெரி யப்பா... பெரியம்மா வாங்க... அடடே சுலோச்சனா... சௌக்கியமாம்மா... உன் வீட்டுக்காரர் சௌக்கியமா?''

விசாரணை.. விசாரணையாக இருந்தாலும்.. உள்ளுக் குள் பயம் உதைத்துக் கொண்டேயிருக்க.. சகோதரனைத் திரும்பித் திரும்பிப் பார்தது‌க் கொண்டேயிருந்தாள்.

''என்னப்பா வெங்கடாசலம்.. நீ உன் அக்கா வீட்டுக் கல்யாணத்திற்கு வந்து விட்டால்.. ஊர் பஞ்சாயத்து என்ன ஆகிறது?''



சொந்தக்காரப் பெரிசு ஒன்று கேட்க... வெங்கடாசலம் திருமண மண்டபமே அதிரும்படி ஒரு சிரிப்புச் சிரித்து விட்டு...

''ஊரே இங்கே கூடியிருக்கு மாமா.. அப்புறம் பஞ்சாயத்துக்கு அவசியம் என்ன?'' என்று சொன்னார்.

சிவகாமி அவரின் அருகே வந்து காதைக் கடித்தாள்.

''என்னடா தம்பி... இங்கே நின்னு கதை அளந்துக் கிட்டு இருக்கே..''

''பொறுக்கா.. வந், உடனேயே மாயமா மறைஞ்சா எல்லோரும்... என்ன.. ஏதுன்னு கேட்க மாட்டாங்களா... கொஞ்ச நேரம்.. கூடிக் குலாவி விட்டு அப்புறம்தான் போகணும்க்கா...''

''அப்புறமாய் நீ வந்து கூடிக் குலாவு.. முதலில் ஜெகனைக் கொண்டு வந்து மண்டபத்தில் சேர்த்துவிடு... அவன் என் கண் பார்வையில் இருந்தால்தான் எனக்கு நிம்மதி..''

விட்டால் சிவகாமி அழுதுவிடுவாள் என்று தோன்ற வெங்கடாசலம் வாசலுக்கு விரைந்தார்... வழியில் தென்பட்ட உறவினரிடம் தலையசைத்துச் சிரித்துவிட்டுக் காரில் ஏறினார்



## 18

ஜெகந்நாதன் கம்ப்யூட்டரின் முன்னால் அமர்ந்து தீவிரமாய் எதையோ டைப் பண்ணிக் கொண்டிருந்

தான்.. அந்த நேரத்தில் அறைக்குள் வந்த வெங்கடாசலம்.. மானசீகமாய்த் தலையில் அடித்துக் கொண்டார்.

''ஜெகன்...'' என்று அவர் கடுமையாக அழைக்க...

''வாங்க மாமா.. உட்காருங்க...'' என்று கம்ப்யூட்டரின் திரையிலிருந்து பார்வையை விலக்காமல் கூறினான் அவன்.

''இங்கே என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்க..''

''முக்கியமான புரொஜெக்ட் மாமா... செக் பண்ணிக் கொண்டிருக்கிறேன்...''

''அதற்கு இதுதான் நேரமா?''

''ஏன் மாமா...?''

''விளையாடாதீங்க மாப்பிள்ளை... அங்கே கல்யாண மண்டபத்தில் சொந்த பந்தம் வந்து இறங்கிருச்சு.. அறிஞ்சவங்க.. தெரிஞ்சவங்க வந்து கூடிட்டாங்க.. பொண்ணும்.. பொண்ணு வீட்டாரும் வந்து சேர்ந்தாச்சு.. நீங்க என்னடான்னா.. கம்ப்யூட்டரைக் கட்டிப் புடிச்சுக் கிட்டு உட்கார்ந்திருக்கீங்க... உங்க மனசில என்னதான் நினைச்சுக்கிட்டு இருக்கீங்க...''

''எதுக்கு மாமா இவ்வளவு டென்சன் ஆகிறீங்க... கல்யாணம் நாளைக்குத்தானே...''

''விடிஞ்சாக் கல்யாணம், மாப்பிள்ளை... இன்னும் கொஞ்ச நேரத்தில் நிச்சயதார்த்தம் நடக்கப் போகுது...''

''அது பாட்டுக்கு நடக்கட்டும்... தாலி கட்டத்தானே நான் வேணும்...''

''ச்சு.. என்ன மாப்பிள்ளை நீங்க... நிச்சயதார்த்த மோதிரத்தை நீங்க சபையில் ஹரிணியின் கையில் போட்டு விடணும் மாப்பிள்ளை...''



''ஏன் அவளாய் மோதிரத்தைப் போட்டுக்க மாட்டாளா?''

''விட்டால் தாலியை எடுத்து.. அவளா கழுத்தில் கட்டிக்க மாட்டாளான்னு கேட்டு வைப்பீங்க போல இருக்கே.. விளையாட்டுத்தனம் பண்ணாம எழுந்திருங்க மாப்பிள்ளை...''

''என்னை டிஸ்டர்ப் பண்ணாதீங்க, மாமா...''

''மாப்பிள்ளை.. நாய் வேசம் போட்டால் குரைத்துத் தான் ஆகணும்...''

''இப்ப எதுக்கு இதை என்கிட்ட சொல்கிறீங்க...''

''மாப்பிள்ளை வேசம் போட்டால்... மண்டபத்துக்கு நீங்க வந்துதான் ஆகணும்.. இப்ப இருந்து... நாளைக்குச் சாயங்காலம் கல்யாண ரிசப்சன் முடியும் வரை... நீங்கள் உங்களுக்கே சொந்தமில்லை.. எங்களுக்குத்தான் சொந்தம்.. எழுந்திருங்க.. எழுந்திருங்க.. எங்கே உங்கள் புதுக் கோட்டு.. சூட்டு எல்லாம்.. சின்ன மாப்பிள்ளை...''

வெங்கடாசலம் அறை வாசலை நோக்கிச் சத்தம் போட, காத்திருந்த ராமநாதன் -

''மாமா...'' என்றபடி அறைக்குள் பாய்ந்து வந்தான்.

''நம்ம ஜெகன் மாப்பிள்ளை.. நைட்டு நிச்சயதார்த்தத் திற்கு என்ன போட்டுக்கணும்...''

'ஒரு பாட்டில் சரக்கு போட்டுக்கணும்...' என்று சொல்ல வேண்டும் போல் இருந்தது ராமநாதனுக்கு.

ஆனால்.. அவன் அதைச் சொன்னால்... வீச்சரிவாள் வெங்கடாசலம் அவனைப் பந்தாடிவிடுவார் என்பதை அவன் அறிந்து வைத்திருந்ததால்...

''நைட்டிற்கு பார்மல் பேன்ட் சர்ட் போதும் மாமா...'' என்றான்.

''விடியற்காலம் பட்டு வேட்டி... பட்டுச் சட்டை...'' என்று வெங்கடாசலம் உறுதி செய்ய...

''மாமா.. எனக்கு வேட்டியெல்லாம் கட்டத் தெரியாது..'' என்று எதிர்ப்புக் குரல் கொடுத்தான் ஜெகந்நாதன்.

''அதை நீங்க ஏன் கட்டணும்.. நான் கட்டி விடுகிறேன்..'' என்று அபயம் அளித்தார் வெங்கடாசலம்.

''ஏன் மாமா... அண்ணனுக்குத் தாலி கட்டத் தெரியும் தானே..'' என்று சந்தேகம் கேட்டான் ராமநாதன்.

'உன் வேலையை ஆரம்பித்து விட்டாயா..' என்று ஓர் பார்வை வெங்கடாசலம் பார்க்க...

''இல்லை.. அதற்கும் உதவிக்கு ஆள் கேட்பாரோன்னு நினைத்தேன்...'' என்று விளக்கம் சொல்ல ஆரம்பித்தான் அவன்.

''வேண்டாம் மாப்பிள்ளை.. ஹரிணி எனக்கு மகள்... வில்லங்கமாய்ப் பேசி வைத்தீங்கன்னு வைங்க.. என் அக்காள் மகன்னு கூட நான் பார்க்க மாட்டேன்... வீச்சரிவாள் என் கார் டிக்கியில்தான் இருக்கிறது...'' வெங்கடாசலம் முறைத்தார்.

''ஐயோ மாமா... அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுத்து விடாதீங்க.. நான் இனி வாயைத் திறக்கவே மாட்டேன்..''

''அது.. அந்தப் பயம் இருக்கட்டும்.. எதுக்கும் கல்யாணம் முடிகிற வரைக்கும்.. நீங்க.. என் கண் பார்வையிலேயே இருங்க...''



'போச்சுடா.. மண்டபத்தில் வண்ணப் பறவைகளிடம் கடலை போடும் வாய்ப்புப் போய்விடுமே...' அரண்டு போனான் ராமநாதன்.

''மாமா.. நமக்குள் எதற்கு வீண் பொல்லாப்பு.. நாம் அண்ணனைக் கவனிப்போம்...''

புயலின் போக்கைத் திசை திருப்பி விட்டு ஆசுவாசப் பெருமூச்சு விட்டான் அவன்.

ஜெகந்நாதனைத் திரும்பிப் பார்த்தவர்...

''சின்ன மாப்பிள்ளை... ஐந்து நிமிசத்தில் நம்ம ஜெகன் மாப்பிள்ளைக்கு.. புது டிரஸ் போட்டு.. கூப்பிட்டுக்கிட்டு வாங்க.. நான் வெளியே காத்திருக்கேன்...'' என்றபடி அறை வாசலுக்குப் போனார்.

# 19

ஜெகந்நாதன் ராமநாதனை முறைக்க அவன் நெளிந்தான்.

''அண்ணா.. நம்ம மீசைக்கார மாமாவைப் பற்றி உங்களுக்கே தெரியும்.. அவர் பிடித்தால் உடும்புப் பிடி தான்... எல்லோரும் நான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள்ன்னு சாதிப்பாங்கன்னுதானே நாம் கேள்விப் பட்டிருக்கிறோம்.. இவர் என்னடான்னா.. நான் பிடித்த முயலுக்கு ஒற்றைக்கால்ன்னு சாதிப்பவர்... அவருடன் வாக்குவாதம் எதற்கு..?''

''ஏன்டா.. எல்லோரும் என்னை இந்தப் பாடு படுத்தறீங்க?''

ஜெகந்நாதன் சொன்ன எல்லோருமில் அந்த முகம் தெரியாத நிலவும் அடக்கம் என்பதைப் புரிந்து கொண்ட ராமநாதன் அமைதி காத்தான்.

அவனுக்குமே ஜெகந்நாதனைப் பார்த்தால் பாவமாகத் தான் இருந்தது... ஆனால் புதிதாய் ஒரு பெண் அவன் வாழ்க்கையில் வந்தாலாவது அவனது வாழ்வு வளம் பெறாதா... என்ற எண்ணத்துடன் அவன் தமையனை நோக்கினான்.

''எது எப்படியானாலும்.. இனி நீங்கள் பின் வாங்க முடியாது அண்ணா... அதனால் புது டிரெஸ்ஸை மாற்றிக் கொண்டு வாங்க...''

வேண்டா வெறுப்பாக ஜெகந்நாதன் கிளம்பி வந்ததும்.. ஒரு பெரிய பெட்டியில் மறுநாள் ஜெகந்நாதன் அணிய வேண்டிய புது உடைகளை அடுக்கி எடுத்துக் கொண் டான் ராமநாதன்.

''மாமா...''

''கிளம்பியாச்சா...''

''ம்ம்... வாங்க போகலாம்..''

அவர்கள் மூவரும் காரில் ஏற... கார் விரைந்தது...

மண்டபத்திற்குள் அவர்கள் போகும்போது எதிரில் பரந்தாமன் வந்தார்.. வெங்கடாசலம் அவரை அழைத் தார்.

''பரந்தாமா..!''

''என்ன வெங்கடாசலம்..?''



''இவர்தான் என் பெரிய மாப்பிள்ளை.. இனி உன் வீட்டு மாப்பிள்ளை.. ஹரிணியைக் கல்யாணம் பண் ணிக் கொள்ளப் போகிறவர்..''

பரந்தாமனுக்கு முதல் பார்வையிலேயே ஜெகந்நாத னின் கம்பீரமான தோற்றத்தைப் பிடித்து விட்டது.

''வணக்கம் மாப்பிள்ளை...'' என்று அவர் கரம் குவித் தார்.

''ஜெகன்.. இவர்தான் உங்கள் மாமனார்..'' என்று ஜெகந்நாதனுக்குப் பரந்தாமனை அறிமுகப்படுத்தி வைத் தார் வெங்கடாசலம்.

''வணக்கம்...'' மரியாதைக்காகப் பதில் வணக்கம் சொன்னான் ஜெகந்நாதன்.

''மாப்பிள்ளை ஒரு நிமிசம்... என் பெண்டாட்டியையும்.. மகனையும் பார்த்துப் பேசணும்.. அவங்க இரண்டு பேரும் ஹரிணியைக் கட்டிக்கப் போகிற மாப்பிள்ளையைப் பார்க்க ஆவலாய் இருக்காங்க...'' பரந்தாமன் கோரிக்கை போல் கேட்டார்.

ஜெகந்நாதன் மறுக்க முடியாமல் தாய் மாமனைப் பார்த்தான்.

''அதுக்கென்ன பரந்தாமா... இவர் உங்க வீட்டு மரு மகப் பிள்ளை. ஒரு எட்டு... உங்க ரூமுக்கு வரமாட்டாரா... என்ன?''

வெங்கடாசலம்... ஜெகந்நாதனின் கை பிடித்துக் கொண்டு பரந்தாமனின் பின்னால் போனார்.

பரந்தாமன் உற்சாகமாய் ஹரிணி இருந்த அறைக்குள் சென்றார்... அறையில் கட்டிலில் நான்கைந்து பெண்

களுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த.. ஹரிணியும்.. குணவதியும்... அவசரமாய் எழுந்து நின்றார்கள்.

"குணவதி..! இவர்தான் நம் மாப்பிள்ளை.." பரந்தாமன் பெருமையாய் மனைவியிடம் ஜெகந்நாதனை அறிமுகப் படுத்தி வைத்தார்.

குணவதி... அவசரமாய்ப் புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு.. மிக.. மிக.. மரியாதை யான குரலில்,

"வாங்க மாப்பிள்ளை..." என்றாள்.

ஜெகந்நாதன் பெண்களின் மத்தியில் நிற்கும் சங் கடத்துடன் மெதுவாகத் தலையசைத்தான்.

"ஹரிணி.. இவர்தான் உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகும் மாப்பிள்ளை.. நன்றாகப் பார்த்துக் கொள்..."

மணப் பெண் அலங்காரத்தில் இருந்த ஹரிணி.. அவனைத் தலை நிமிர்ந்து பார்க்கத் தயங்கினாள்.. ஜெகந்நாதன் இன்னும் அதிகமாகச் சங்கடமுற்றான்.

"அவள் வெட்கப்படுகிறாள்.." குணவதி புன்னகைத் தாள்.

பரந்தாமன் வாசலுக்கு வந்து அடுத்த அறையில் இருந்த மகன் பலராமனை அழைத்தார்.

"பலராமா..!"

"அப்பா..!"

"இவர்தான் நம் வீட்டு மாப்பிள்ளை..."

பலராமன் புன்னகையுடன் ஜெகந்நாதனுக்குக் கை கொடுத்தான். ஒரு வழியாய்ப் பரந்தாமனின் அன்புப்



பிடியிலிருந்து ஜெகந்நாதனை விடுவித்து அழைத்துச் சென்ற வெங்கடாசலம்.. தன் அக்காள் மகனிடம் இதமாகப் பேசினார்.

அவருடைய பேச்சில் உண்மையும்... அன்பும்.. பாச மும்.. வெளிப்பட்டன. ஜெகந்நாதன்.. வாய் திறக்காமல் அதைக் கேட்டுக் கொண்டான்.



# 20

"பார்த்தீங்களா மாப்பிள்ளை... பரந்தாமன் ஒன்றும் சாதாரண ஆள் இல்லை... தேனியில் பெயர் பெற்ற வியாபாரி.. வீடு... மனை... காடுகரை.. விவசாயம்.. வியாபாரம்ன்னு.. நாலு பக்கமும் காசு குமியுது அவ னுக்கு.. ஆனால்.. உங்களைப் பார்க்காமலேயே உங் களுக்குப் பெண் கொடுக்கச் சம்மதிச்சான்.. எதுக்காக..? நீங்கள் வாங்கி வைத்திருக்கும் பெயருக்காக... ஜெகந் நாதன் எப்பேர்ப்பட்ட ஆளுங்கிறது.. தேனி வரைக்கும் எட்டியிருக்கு.. உங்க பணபலம்.. படைபலத்தை விட... உங்க நாணயத்தையும்.. நேர்மையையும் அவன் பெரிசா நினைச்சான்.. பொண்ணு கொடுக்க முன்வந்தான்.. அவன் பெத்த பொண்ணு ஹரிணி.. இன்னும் கூட உங்க முகத்தை நிமிர்ந்து பார்க்கலை.. இப்படிப் பட்ட வீட் டுக்கு மருமகனாப் போகப் போகிறீங்க.. அதைக் கொஞ்சம் நினைச்சுப் பாருங்க.."

ஜெகந்நாதனுக்கும் புரிந்தது... பழகிப் பார்த்துத் திருமணம் செய்து கொள்கிற இந்த நாளில்.. விடிந்தால் திருமணம் என்ற நிலைக்கு வந்த பின்னும்.. நிமிர்ந்து முகம் பார்க்காத அந்த மென்மையான பெண்ணின் அழகிய முகம் அவனை வசீகரிக்கத்தான் செய்தது..

'ஆனாலும்..' அவன் பெருமூச்சு விட்டான்.

''எதுக்கு மாப்பிள்ளை இம்புட்டு பெரிய பெருமூச்சு...? இதைத்தான் எங்க ஊர் பக்கம் எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி விடுறதும்பாங்க... இப்படிப் பெருமூச்சு விட்டு தாலிகட்டற அளவுக்குப் பரந்தாமன் ஒன்றும் சாதாரண ஆளுமில்ல... ஹரிணி ஒன்னும் அழகில்லாத பொண்ணும் இல்ல...''

''அவங்களை நான் எதுவும் குறை சொல்ல வில்லையே..''

''சொல்லித்தான் பாருங்களேன்...''

''ஏன் மாமா.. என் மேல் குற்றம் கண்டுபிடிக்கணும்ன்னு எதுவும் வேண்டுதல் வைத்திருக்கீங்களா..?''

''என் அக்கா மகன்களின் வாழ்க்கை நல்லா இருக்கணுமின்னு வேண்டுதல் வைத்திருக்கிறேன்...''

மண்டபத்தில் பரபரப்பு நிலவியது... பெண்ணை மேடைக்கு அழைத்து வருமுன்னால்.. இருவீட்டாரும் அமர்ந்து நிச்சயதார்த்தம் பேசி முடித்துத் தட்டை மாற்றிக் கொண்டார்கள்.

மணமகன் வீட்டில் வாங்கிய சேலையையும்.. நகைகளையும் அணிந்து.. மணப்பெண் மேடைக்கு வந்தாள்.

''மாப்பிள்ளையை மோதிரம் போட்டு விடச் சொல்லுங்க...''



உறவினர் ஒருவர் உரத்த குரலில் கூற.. ஜெகந்நாதன்.. வைர மோதிரம் இருந்த பெட்டியை எடுத்துக் கொண்டு... மேடையில் ஏறினான்.

மோதிரத்தை ஹரிணியின் விரல் பற்றிப் போட்டு விடும் போது.. அவளது தளிர் விரல்களின் மென்மையை உணர்ந்தான்.. அவளது விரல்களின் நடுக்கத்தையும் உணர்ந்தான்.. அவனையும் அறியாமல்.. அவன் உடலில் மின்சாரம் பாய்ந்தது.

மேடையை விட்டு அவன் இறங்கியதும்.. பெண்கள் நலங்கு வைத்து முடித்தார்கள்... ஹரிணி எழுந்து சென்று விட்டாள். ஜெகந்நாதன் திருமண மண்டபத்தின் வாசலுக்கு வந்து யோசனையுடன் நின்றான்.

''என்ன மாப்பிள்ளை... இங்கே என்ன பண்றீங்க?''

''சும்மா காத்து வாங்க வந்தேன் மாமா...''

''நீங்க காத்து வாங்க வந்தால்... எங்க அக்கா அங்கே கவலையை வாங்கிக்கும்.. அதனால பேசாமல் உள்ளே வாங்க.. பந்தி ஆரம்பிச்சுருச்சு... சாப்பிடப் போகலாம்...''

வெங்கடாசலத்துடன் உள்ளே வந்தான் ஜெகந்நாதன்.. தூரத்தில் இவர்கள் வருவதைப் பார்த்துக் கொண்டிருந்த சிவகாமியின் கவலை தோய்ந்த முகத்தைப் பார்த்த ஜெகந்நாதனுக்கு.. தாய்மாமனின் வார்த்தைகளில் இருந்த உண்மை புலப்பட்டது... பேசாமல் சாப்பிட்டுவிட்டு.. மாப்பிள்ளைக்கு என்று ஒதுக்கப்பட்டிருந்த அறைக்குப் போய்.. ஏஸியை போட்டு விட்டு.. படுத்துத் தூங்கி விட்டான்.

அதிகாலையில் காபியோடு வந்து எழுப்பி விட்டாள் சிவகாமி.

''எழுந்து குளித்து விட்டு வா ஜெகன்.. பாத்ரூமில் ஹீட்டரைப் போட்டு விடு, ராம்...''

ஜெகந்நாதன் குளித்து விட்டு வந்ததும்.. ராமநாதன் பட்டு வேட்டியைக் கையில் எடுத்தான்... வெங்கடாசலம் அங்கே பிரசன்னமானார்.

''நீங்க விலகிக்கங்க சின்ன மாப்பிள்ளை... இனி நான் பார்த்துக்கிறேன்...''

அரைமணி நேரம் போராடி... ஒரு வழியாய்ச் சின்ன பெல்ட்டின் மூலம் இடுப்பில் வேட்டி நழுவி விடாமல் இறுக்கிக் கட்டி.. அதன் மேல் சட்டையைப் போட்டு விட்டு மறைத்து விட்ட வெங்கடாசலம் நெற்றி வியர்வையை வழித்துக் கொண்டு,

''உஸ்... அப்பாடா...'' என்று நிமிர்ந்தார்.

''இதைத்தான்.. நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைப்பது என்பது...''என்றான் ராமநாதன்.

''இதைத்தான் சின்னப் பசங்க குறும்பு என்பது...'' என்று முறைத்தார் வெங்கடாசலம்.



# 21

திருமண மண்டபத்தின் வாயிலில் வரவேற்பு மேஜையின் பின்னால் நின்று கொண்டிருந்த.. வைஷ்ணவியும்.. ப்ரீதாவும் தங்களுக்குள் ஏதோ பேசிச் சிரித்துக்



கொண்டே வருகிறவர்களுக்குப் பன்னீர் தெளித்துக் கொண்டிருந்தார்கள்.

ராமநாதன்.. அழகாக உடுத்திக் கொண்டு.. வைஷ்ணவியின் பார்வையில் படுவது போல் அங்கும்... இங்கும் போய்ப் பார்த்தான். வைஷ்ணவி அவனைக் கடைக் கண்ணால் கூடப் பார்க்கவில்லை.

'ஊம்... என் மாமனுக்குக் குறையாத தெனாவெட்டு.. என் மாமன் மகளுக்கும் இருக்கிறதே...' ராமநாதன் அவர்கள் அருகில் சென்று நின்றான்.

''ப்ரீதா.. உன்னை அம்மா கூப்பிடுகிறாங்க...''

''எதற்காம்..?''

''அதை நீயே போய்க் கேள்.. எனக்கென்ன தெரியும்..?''

''ஏன் உனக்கு ஏனென்று கேட்க வாயில்லையா..? இல்லை, அம்மா சொல்லும் விளக்கத்தைக் கேட்கக் காதில்லையா...?''

வைஷ்ணவி.. ப்ரீதா சொன்னதைக் கேட்டுக் 'களுக்' கென்று வாய் பொத்திச் சிரித்தாள்.

'ஊம்.. பிகரின் முன்னால் என்னை வாரி விடும் இவளைத் தங்கையாகப் பெற நான் தவம் செய்திருக்க வேண்டும்..'

''என்னவென்று தெரியவில்லை ப்ரீதா... அம்மாவிற்குத் தலை வலிக்கிறதாம்.. அதற்கு மாத்திரை உன்னிடம் தான் இருக்கிறதாமே...''

''அம்மாவுக்குத் தலைவலியா..?''

ப்ரீதா கவலையுடன் உள்ளே விரைந்தாள்.. ராமநாதன் வைஷ்ணவியைப் பார்த்தபடி படு ஸ்டைலாகத் தன்

ஜீன்ஸ் பேண்டினுள் கையை விட்டுக்கொண்டான்... வைஷ்ணவி ஓரக் கண்ணால் அவன் செய்கையைக் கவனித்தபடி அதற்கும் ஒரு 'களுக்' சிரிப்பை உதிர்த்தாள்.

''வைஷ்ணவி..'' ராமநாதன் கொஞ்சலாய் அழைக்க...

''ஏன் ப்ரீதாவைப் பொய் சொல்லி அனுப்பினீங்க?'' என்று கேட்டு வைத்தாள் வைஷ்ணவி.

''கண்டு பிடித்து விட்டாயா?''

''ம்ம்...''

''எப்படி..?''

''நான் யார் மகள்..?''

''உன் அப்பாவை எதற்கு இப்போது நினைவு படுத்துகிறாய்?''

''அவரின் மகள்.. உங்கள் அலம்பல் வேலையைக் கண்டு கொள்ளாமல் இருப்பேனா..?''

''மாமன் மகளை ரவுண்டு கட்டுவது அலம்பல் வேலையா?''

''என் அப்பாவிற்கு இது ஆகாத வேலை..''

''உனக்கு..?''

''அத்தான்.. உங்கள் முகத்தில் வழியும் ஜொள்ளைத் துடைத்துக் கொள்ளுங்கள்...''

''அது எதற்கு வீண் வேலை.. திரும்பவும் உன்னைக் கண்டால் ஜொள் விடத்தான் போகிறேன்..''

''இது என்னைக் கண்டு மட்டும் விடும் ஜொள்ளாகத் தெரியவில்லையே.. இந்த மண்டபத்தில் இருக்கும்



வயதுப் பெண்களையெல்லாம் ஒரு ரவுண்டு சுற்றி விட்டு இப்போதுதானே வாசல் பக்கம் வந்திருக்கிறீங்க..''

''உன்னைத் தேடினேன் வைஷ்ணவி..''

''தேடும் அளவிற்கு நான் ஒளிந்தா இருந்தேன்?''

''ஆயிரம் பெண்கள் இருந்தாலும் உனக்கு ஈடாகுமா?''

''ஐய்யே.. பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டும்...''

''அது உன் அப்பாவுக்குத்தான் தெரியும்... நான் அப்பாவி.. எனக்கெல்லாம் அது தெரியாது..''

''நீங்களா அப்பாவி..? நீங்கள் படுகில்லாடி..''

''எதை வைத்து அப்படிச் சொல்கிறாய்..?''

''உள்ளே இருந்தால்... பெண்களைத் தேடிப் போய்ப் பார்க்க வேண்டும்.. வாசலில்.. வரவேற்பில் நின்றால் உங்களைக் கடந்துதானே.. ஒவ்வொரு பெண்ணும் உள்ளே போயாக வேண்டும்..?''

''என்ன ஒரு உயர்ந்த அபிப்ராயம் என் மீது..? ம்ஹூம்.. உனக்கு உன் அப்பாவே தேவலாம்...''

எந்த நேரத்தில் அவன் அந்த வார்த்தையைச் சொன்னானோ... அவன் பின்னாலிருந்து வெங்கடாசலம் குரல் கொடுத்தார்.

''என்ன சின்ன மாப்பிள்ளை.. காத்து என்ன.. இந்தப் பக்கம் பார்த்து வீசுது..?''

''ஹி.. ஹி.. மாமா... சும்மா.. ரிசப்சனில் நிற்கலாமுன்னு...''

''இதெல்லாம் பொம்பளைப் புள்ளைகள் யாவாரம்.. இங்கே நமக்கென்ன சோலி...''

''அதில்லை மாமா.. வந்தோரை வரவேற்கும் ராம நாதன்னு என்மேல் ஓர் உயர்ந்த அபிப்ராயம் விழுகு மில்லையா? அதற்காகத்தான்...''

''இருக்கும் அபிப்ராயம் விழுந்து விடாமல் பார்த்துக் கங்க... ஆமாம் இங்கே நின்னுக்கிட்டு இருந்த என் அக்கா மகள் எங்கே போனாள்..?''

''அம்மாவுக்குத் தலைவலியாம்.. அதான்..''

''யாருக்குத் தலைவலி? என் அக்காவிற்கா..? அது இத்தனை நேரமும் என் கூடத்தானே.. சிரிச்சு.. மகிழ்ந்து பேசிக்கிட்டிருந்துச்சு..''

வெங்கடாசலம் குட்டை உடைக்க... வைஷ்ணவி வாய்விட்டுச் சிரித்தாள்.

## 22

ப்ரீதா உள்ளே விரைந்து போய் மாடிப்படியில் ஏறி... விரைவில் திரும்பும்போது... எதிரே வந்த பலராமனின் மேல் மோதி விட்டாள்...

தடுமாறி விழப் போன ப்ரீதாவின் தோளைப் பிடித்து நேராக நிற்க வைத்த பலராமன்...

''பார்த்து வரக்கூடாதா? எதற்கு இந்த வேகம்?'' என்று புன்னகைத்தான்...



ப்ரீதாவை வெட்கம் சூழ்ந்து கொண்டது.... அவன் முகம் பார்க்க முடியாமல் பார்வையை அலை பாய விட்ட வாறே,

''ஒன்றுமில்லை.... அம்மாவுக்குத் தலைவலியாம்....'' என்றாள்.

''யாருக்கு.... அத்தைக்கா...?''

''ஆமாம்...''

''என்னிடம் தலைவலிக்கான டேப்லெட் இருக்கிறது... தரட்டுமா....?''

''நோ தேங்க்ஸ்.... நானும் கொண்டு வந்திருக்கிறேன்...''

''அப்படியா....?''

பலராமன் தற்செயலாய் மாடி வளைவிலிருந்து திரும்பிக் கீழே பார்க்க.... சிவகாமி.... தம்பி மனைவி பத் மாவதி சொல்லியதைக் கேட்டு... சந்தோசமாகச் சிரித்துக் கொண்டிருந்தாள்....

பலராமன் ப்ரீதாவைப் பார்த்தான்....

'ஏன் இப்படிப் பார்க்கிறான்...?' என்று அவள் யோசித் துக் கொண்டிருந்த போது,

''இங்கே.... வாங்க...'' என்று அழைத்தான்....

'எதற்குக் கூப்பிடுகிறான்....?' அவன் அருகில் போனாள்....

''அவங்க... உங்க அம்மாதானே...'' பலராமன் கை காட்டினான்.

''ஏன்.... உங்களுக்கு அடையாளம் தெரியாதா?'' ப்ரீதா இடக்காக வினவினாள்....

அவளது இடக்கைக் கண்டு கொண்ட, பலராமனின் கண்கள் சிரித்தன...

"அடையாளமெல்லாம் தெரிகிறது... ஆனால் அவங்களிடம் தலைவலிக்கான அடையாளம்தான் தெரியவில்லை...."

"அட... ஆமாம்...."

'இந்தச் சின்ன அண்ணன்... வேண்டுமென்றே பொய் சொல்லி என்னை அங்கிருந்து கடத்தியிருக்கிறான்...' அவள் பல் கடித்தாள்.

"'அட'.... வா... யாரை 'அட' போடுகிறீங்க....? என்னையா....?"

"ஐயையோ.... உங்களைப் போய் அப்படிச் சொல்வேனா?"

"வேறு யார்... யாரை அப்படிச் சொல்வீர்கள்....?"

அவன் முகத்தில் குறும்பு வழிந்தது.... அவள் வெட்கத்துடன்.....

"என் சின்ன அண்ணனை 'வாடா ... போடா...' வென்று சொல்வேன்..." என்றாள்....

"ஓ... எனக்குத்தான்... தப்பித் தவறி மரியாதை கிடைத்திருக்கிறது போல.... ரொம்ப நன்றி..."

அவள் முகம் இன்னும் வெட்கப்பட்டுச் சிவப்பதை ரசனையுடன் பார்த்தான் பலராமன்....

"நான் எல்லோரிடமும் மரியாதையாகத்தான் பேசுவேன்..."

"எனக்கு மட்டும் ஸ்பெசல் மரியாதை கிடைக்கிறது என்று நான் நினைத்தது தப்பா....?"

"நீங்கள் என்னைக் கேலி செய்கிறீர்களா?"



"ஏன் செய்யக் கூடாதா? நான் கேலி செய்யும் முறையுள்ளவன்தானே..."

"நான் போக வேண்டும்..."

"எங்கே...."

"ரிசப்ஸனிற்கு...."

"மெதுவாகப் போகக் கூடாதா?"

"எதற்காக மெதுவாகப் போக வேண்டும்....?"

"என்னிடம் பேசிக் கொண்டிருந்து விட்டு மெதுவாகப் போக வேண்டும்..."

"என்ன பேசுவது...?"

"எவ்வளவோ பேசலாம்..."

"எவ்வளவோ என்றால்...? எனக்குப் புரியவில்லை...."

"ம்ம்... நீங்களும் மெடிகல் படிக்கிறீங்க.... நானும் மெடிகல் படிக்கிறேன்... நம் படிப்பைப் பற்றிப் பேசலாமே...."

"இந்தக் கல்யாண மண்டபத்தில்... நின்று கொண்டு... நாம்... நம்... படிப்பைப் பற்றி டிஸ்கஸ் பண்ண வேண்டும்..."

"ஆமாம்...."

"போங்க சார்.... யாராவது கேட்டால் சிரிக்கப் போகிறார்கள்....!"

"நில்லுங்க... நில்லுங்க...."

"என்ன....?"

"இப்போது என்னை என்ன சொல்லிக் கூப்பிட்டீங்க....?"

''ஏன்... சார்ன்னு சொன்னேன்...''

''சா... ரா...?''

''ஆமாம்...''

''ஹலோ மேடம்...''

''என்னது... மே.... ட... மா...?''

''நான் உங்களுக்கு சார் என்றால்..... நீங்கள் எனக்கு மேடம்தானே....''

''உங்களை வேறு எப்படித்தான் கூப்பிடுவது...?''

''ஏன்.... பலராமன்னு கூப்பிடுவது....''

''சேச்சே... அது நன்றாக இருக்காது....''

''எது நன்றாக இருக்காது? என் பெயரா...?''

''உங்களை....!''

ப்ரீதா கலகலவென்று அவன் பேச்சை ரசித்துச் சிரித்தாள்.... அவன் அதை ரசித்துப் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே... அவனுக்குக் கையாட்டிவிட்டுப் படிகளில் இறங்கி ஓடி மறைந்தாள்....

## 23

இருமனம் இணைவது திருமணம் என்பார்கள்... உதிரிப் பூக்களாய் எங்கெங்கோ சிதறிக் கிடக்கும் உறவினர்கள் ஒன்று படுவது இது போன்ற விசேசங்களில்



தான்.... அப்போது எத்தனையோ இளம் மனங்கள் சந்தித்துக் கொள்ளும்... தங்களைப் பற்றிச் சிந்தித்துக் கொள்ளும்... அப்படிச் சந்தித்துக் கொள்ளும் ஆண்.... பெண் மனங்கள் ஒன்றுபட்டு மேலும் பல திருமணங்கள் நடக்க வழிவகுக்கும்.... நமது இந்தியக் கலாச்சாரத்தின் அங்கங்களில் இதுவும் ஒன்று....

திருமணத்தின் அன்றைய கதாநாயகனும்.... கதாநாயகியுமான ஜெகந்நாதனும்... ஹரிணியும் ஒருவரையொருவர் பார்த்து.... வெட்கச் சிரிப்பு சிரித்துக் கொண்டார்களோ இல்லையோ.... ராமநாதன்.... வைஷ்ணவி ஜோடியும்... பலராமன்... ப்ரீதா ஜோடியும் அதைத் தவறாமல் செய்தனர்.

மணமேடைக்கு வந்த ஜெகந்நாதன்.... பட்டு வேட்டி... பட்டுச் சட்டையில் மிகவும் அழகாக இருந்தான்.... அய்யர் சொல்லிய மந்திரங்களைத் தானும் சொல்லிக் கொண்டிருந்தான்....

''பெண்ணை அழைச்சிட்டு வாங்கோ....''

இது போன்ற விழாக்களில் யார் வேண்டுமானாலும் ஆணையிடலாம்.... உறவுக்காரர் ஒருவர் சத்தமாகக் கூற... ஹரிணியை மணமேடைக்கு அழைத்து வந்தார்கள்....

நிமிர்ந்து பார்க்காமல் நளினமாக வந்தவளைத் தன்னையும் அறியாமல் ஓர் வினாடி ஜெகந்நாதன் பார்த்தான்....

'என்ன ஒரு மென்மையான அழகு...!' அவன் மனம் வியக்கத்தான் செய்தது.... ஆனால்... இவளுக்குப் பதில் அவள் இருந்தால்....?

மனதில் ஓடும் எண்ணங்களைத் தடை செய்ய அவனால் முடியவில்லை... அருகிலிருந்த ராமநாதன் மாலையைச் சரிசெய்வது போல் குனிந்து அவன் காதுகளில் வினவினான்...

''இந்த நேரத்தில் என்ன சிந்தனை அண்ணா... அய்யர் மந்திரம் சொல்வதை விட்டுவிட்டு உங்கள் முகத்தையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாரே....''

என்ன நினைவு... என்று எப்படிச் சொல்வது...?

'நினைப்பதையெல்லாம் சொல்லி விட்டால்

நினைவுக்கு மதிப்பில்லை...'

நேரம் காலம் பார்க்காமல் அவளுடைய கவிதை வரிகள் மனதில் ஓடின... அவள் மட்டும் இன்று மணமகளாக மேடையேறி அவன் அருகே வந்து அமர்ந்தால்....?

ஹரிணி அவன் அருகே வந்து அமர்ந்தாள்... ஜெகந்நாதன் யாரும் அறியாமல் மெலிதாகப் பெருமூச்சு விட்டான்....

''கெட்டி மேளம்... கெட்டி மேளம்....''

மீண்டும் வேறொரு உறவினரின் உரத்த குரல்... ஜெகந்நாதன் மனதில் புழுங்கியபடி தாலியை எடுத்து அவள் கழுத்தில் கட்டினான்....

'இது அவள் கழுத்தில் நான் கட்டியிருக்க வேண்டிய தாலி....' மனம் அரற்றியது... ஹரிணி குனிந்த தலை நிமிராமல் அவனுக்கு மாலை போட... அவனும் பதிலுக்கு அவள் கழுத்தில் மாலை போட்டான்... மாலை மாற்றிக் கொண்ட அந்தச் சமயத்தில் கூட அவள் விழியுயர்த்தி அவனைப் பார்க்கவில்லை... அதை அவனும் பொருட்படுத்தவில்லை....



''பொண்ணையும்.... மாப்பிள்ளையையும் அக்கினியைச் சுற்றி வரச் சொல்லுங்க....''

மீண்டும் உறவினரின் சத்தம் எழ... ஜெகந்நாதன் எழுந்து கொண்டான்.... ஹரிணி மெதுவாய் எழ... அவளது வலக்கரத்தைப் பிடிக்கக் கை நீட்டினான்....

அவனது கரம் பற்றிக் கொண்டதும் அவளுள் ஓர் அதிர்வு ஏற்படுவதை அவனால் உணர்ந்து கொள்ள முடிந்தது... அக்கினியை வலம் வந்த போது அவனுக்கு மனதை என்னவோ செய்தது....

இப்படி அவன் கைப்பிடித்து வர வேண்டியவள் அவள் அல்லவா? எத்தனையோ முறை... எத்தனையோ விதங்களில் பேசி வற்புறுத்தியும் அவள்... அவன் பேச்சுக்குக் கட்டுப்படவில்லையே.... அவன் அதிகமாக வற்புறுத்தும் போது.... நாள்கணக்கில் அவனோடு பேசமாட்டாள்....

'ஸ்விட்ச் ஆஃப்...' என்று அவளது போன் பதில் கொடுக்கும்.... அதற்குப் பயந்தே... அவன் வாய் மூடி... வாய்மூடி... கடைசியில் அவள் வாயால் பிரிவைச் சொல்வதைக் கேட்டும் விட்டான்....

''பொண்ணு... மாப்பிள்ளையைக் கோவிலுக்கு அழைச்சிட்டுப் போங்கப்பா...''

மண்டபத்திற்குள்ளேயே இருந்த சிறிய கோவிலுக்குள் சென்று வணங்கி விட்டு வந்த மணமக்கள்.... சிவகாமியின் கால்களில் பணிந்தார்கள்....

''நல்லா இருக்கணும்.... தீர்க்காயுளும்.... தீர்க்க சுமங்கலியாவும் இருக்கணும்....'' அவள் கரகரவென்று கண்ணீர் விட்டாள்...

''இப்ப எதுக்குக்கா அழுகறே.... அதான் எல்லாம் நல்லபடியா முடிஞ்சு போச்சே.... இன்னும் எதுக்கு அழுகணும்...'' வெங்கடாசலம் அன்பாகத் தமக்கையை அதட்டினார்....

பரந்தாமன் - குணவதியின் பாதம் பணிந்து எழுந்த ஜெகனைக் கட்டிக் கொண்ட பரந்தாமன்...

''மாப்பிள்ளை... அந்தக் காலத்துப் பாசமலர் படத்தில.... 'ஆனந்தா... என் கண்ணையே உன்னிடம் ஒப்படைக்கிறேன்'னு ஒரு வசனம் வரும்.... அதை இன்றைக்கு.... நான் நிஜமாகச் சொல்கிறேன்.... ஹரிணி என் உயிர்.... அந்த உயிரை உங்களிடம் ஒப்படைக்கிறேன்... இன்றையில் இருந்து அவளுக்கு நீங்கள்தான் எல்லாமும்... என்னை விடப் பத்திரமாய் அவளை நீங்கள் பார்த்துக் கொள்வீங்க என்ற என் நம்பிக்கையை நீங்கள் காப்பாற்ற வேண்டும்....''

பரந்தாமன்... தான் ஆண் என்பதை மறந்து கண் கலங்கினார்....



## 24

**மா**லையில் திருமண வரவேற்பு ஆரம்பித்து விட்டது... மற்றொரு மேடையில் மெல்லிசைக் கச்சேரி நடந்து கொண்டிருந்தது... சாம்பல் நிற கோட்... சூட்டில் ஜெகந்நாதனின் கம்பீரம் பன் மடங்கு பெருகித் தெரிந்தது....



அருகே... மெரூன் கலர் பிரிண்டெட் பட்டில்.... தங்க நிறப் பொட்டுக்கள் ஆங்காங்கே தூவப் பட்ட சேலையில்... தலைமுடியைக் கொண்டையிட்டு.... அதில் அலங்காரத் தங்க முத்துக்களைச் செருகி... ஹரிணி நின்றிருந்தாள்....

''பொண்ணுக்கேத்த மாப்பிள்ளை.... மாப்பிள்ளைக்கு ஏத்த பொண்ணு! ஜோடிப் பொருத்தம் ரொம்ப நல்லாயிருக்கில்ல...''

திருமண மண்டபத்தில் இதே பேச்சாக இருந்தது... ஆனால் பொருத்தமான ஜோடியாக மேடையில் நின்றிருந்தவர்கள்... ஒருவரை ஒருவர்... தங்களுக்குப் பொருத்தமானவர்கள்தானா... என்று பார்த்துக் கொள்ளாமல்... ஆளுக்கொரு திக்கில் பார்த்துக் கொண்டு நின்றார்கள்....

ஜெகந்நாதனின் மனம் அலைகடலாய் ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது...

அன்று அவள் கடைசியாகப் பேசிய பேச்சு அவன் காதுகளில் எதிரொலித்தது... அவளது போன் மணியொலித்ததும் ஆவலாய் அவன் எடுத்துப் பேசினான்... என்றுமே அவளாய்ப் போன் செய்யாதவள் அன்று தானாகப் போன் பண்ணினாள்.... அவளது போன் மணியொலித்த போது... மிக முக்கியமான வியாபார ஒப்பந்தம் சம்பந்தமாய் அவன் பேசிக் கொண்டிருந்தான்... ஆனால் கைபேசியில் தெரிந்த 'அனாமிகா அழைக்கிறாள்' என்ற எழுத்துக்களைக் கண்டதும்....

''எக்ஸ்க்யூஸ்மி...'' என்றபடி எழுந்து அறையை விட்டு வெளியேறித் தனியாக கெஸ்ட் ரூமில் போய்க் கதவைச் சாத்திக் கொண்டான்....

அறையினுள் அவனுடன் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருந்தவர்கள்... பல கோடி ரூபாய்ப் பெறுமானமுள்ள அந்த ஒப்பந்தத்தைக் காட்டிலும்... வந்திருக்கும் போன்.... எந்த வகையில் உயர்ந்தது என்று புரியாமல் விழித்தார்கள்....

அறையினுள் பரவசமாய் அடைபட்டுப் பேச ஆரம்பித்த ஜெகனுக்குத்தான் தெரியும்... அந்தக் குரல்... அவனுக்கு விலை மதிப்பில்லாதது என்று....

''சொல்... அனாமிகா...''

''நாம் பிரிந்து விடலாம்...''

அவன் அதிர்ந்து போனான்... இது நடக்கக் கூடும் என்று அறிந்திருந்தவனுக்கு... அது உண்மையிலேயே நடக்கும் போது... தாங்கிக் கொள்ள முடியவில்லை...

''ஏன்...?''

''ஏனென்ற கேள்விகள் உங்களுக்கு மட்டும் என்றும் சொந்தமாக இருக்கின்றன... நீங்கள் ஆண் ஆயிற்றே... நான் பெண் என்பதால்... கேள்விகளே கேட்காமல்.... என்னைச் சுற்றிப் பூவேலி போட்டுக் கொண்டு... பொன் விலங்கை மாட்டிக் கொள்ளப் போகிறேன்...''

''அனாமிகா....''

''ஆமாம்.. நான் அனாமிகாதான்... பெயரில்லாதவள்... என் பெயரை யார் தீர்மானித்தது...? நான் தீர்மானித்தேனா...? இல்லையே... என் பிறப்பைக் கடவுள் தீர்மானித்தார்.... பெயரைப் பெற்றவர்கள் தீர்மானித்தனர்... எல்லாமே அவர்களது தீர்மானப்படி நடக்கும் போது எனக்கென்று தனிப்பட்ட உணர்வுகளை நான்



வளர்த்துக் கொள்வதால் எனக்கென்ன நன்மை வந்து விடப் போகிறது...?''

''அதனால்... எனக்குத் தீமை செய்யப் போகிறாயா...?''

''வேறு என்ன செய்வது....? என்னைப் பெண் கேட்டு மாப்பிள்ளை வீட்டார் வர ஆரம்பித்து விட்டார்கள்.... இனி அதில் சல்லடை போட்டுச் சலித்து.... ஒரு மாப்பிள்ளையை எனக்காக.... என்னைப் பெற்றவர்கள் தேர்ந்தெடுப்பார்கள்... நான் அவருக்குத்தான் என் கழுத்தை நீட்ட வேண்டும்... என் நிலைமை இதுவாக இருக்கும் போது... இந்த முகம் தெரியாத உறவை இனியும் நாம் வளர்த்துக் கொள்ளக் கூடாது...''

''என்னைப் பற்றி ஒரு கணம் நீ யோசித்துப் பார்த்தாயா...?''

''ம்ம்... யோசித்தேன்... நாளைக்கு என் கணவராக நீங்கள் வர முடியாத நிலையிலிருக்கும் போது... இந்த சொந்தம் நமக்குள் வேர் விடுவது முறையல்ல... அதனால்... இதை ஆரம்பத்திலேயே நிறுத்தி விடுவது நல்லது....''

''ஆரம்பமா.... இன்னும் நீ ஆரம்ப நிலையில்தான் இருக்கிறாயா....?''

''ஆமாம்... என் வாழ்க்கை எங்கே... யாருடன் ஆரம்பிக்கப் போகிறது என்று எனக்கே தெரியாதபோது.... உங்களுக்கு நான் நம்பிக்கை கொடுப்பது முறையில்லை... அதனால்...''

''அதனால்....?''

''என் செல்போனை நானே உடைத்து எறியப் போகிறேன்... இனி என் செல்போனும் வேறாக இருக்கும்...

சிம் கார்டும் வேறாக இருக்கும்... இந்த அனாமிகாவின் போன் நம்பர்... இனி எங்கும் தென்படாது...''

''அனாமிகா... அனாமிகா...''

அவன் பதறிக் கொண்டிருக்கும் போதே.... அவள் போனை உடைக்கும் சப்தம் கேட்டது... அதன் பின் ஓர் அமானுஷ்ய ரீங்கார ஒலி கேட்டது... பின்னர்... 'ஸ்விட்ச் ஆஃப்...' என்ற பதில் கேட்டது....

கேட்டவை அவன் மனதில் மோதிப் பெரும் வலியை உண்டாக்க... அவன்... இயந்திரம் போல் தன் கேபினுக் குத் திரும்பி வந்து... தடைப்பட்டிருந்த பேச்சு வார்த் தையைத் தொடர்ந்தான்...

அன்று அந்தப் பேச்சு வார்த்தை வெற்றியடைந்தது... பல கோடி ரூபாய் லாபம் வந்தது....

ஆனால் அவன் தன் காதலில் தோற்றான்... அவனது நிம்மதி... அந்த அனாமிகாவின் பின்னால் போய் விட்டது....

## 25

அவனது அருகில் நின்றிருந்த ஹரிணி அழகான வளாக இருந்தாள்... மிகப்பெரிய செல்வந்தரின் மகளாக இருந்தாள்... பெற்றவர்களின் செல்லப் பெண்ணாக இருந்தாள்... உடன்பிறந்த அண்ணனின்.... பாசத்துக்கு



உரிய ஒரே தங்கையாக இருந்தாள்.... பார்க்காமலேயே மணவறைக்கு வந்து ஜெகனின் கையால் தாலி வாங்கிக் கொண்ட பண்புள்ளவளாக இருந்தாள்... இவை எல்லாமும் இருந்தும்... ஜெகனின் மனம் கவர்ந்த அந்த முகம் தெரியாத நிலவாக மட்டும்... இல்லாமல் போனாள்...

அதனால் திருமண வரவேற்பு மேடையில் நின்று கொண்டிருந்த அந்த நாளில்... ஜெகனின் மனம்... அனாமிகா பிரிவைச் சொல்லிய அந்த நாளில் சிக்குண்டு இருந்தது...

**'ஆடிய நாடகம் முடியவில்லை**

**ஓர் நாளிலே...**

**அங்கும்... இங்கும்... சாந்தியில்லை**

**சிலர் வாழ்விலே...**

**தெய்வமே... யாருடன்... மேடையில்**

**நீ... நின்றாயோ...**

**இங்கு யாரை... யாராய்... நேரினிலே**

**நீ... கண்டாயோ...'**

ஜெகனின் மனம்... கண்ணதாசனின் திரைப்படப் பாடலில் சுழன்றது. அவன் மனம் 'அனாமிகா' என்று தன்னைச் சொல்லிக் கொண்ட பெயர் சொல்லாத அந்த நிலவைத் தேடியது...

**'யார் அந்த நிலவு...**

**ஏன் இந்தக் கனவு...**

யாரோ சொல்ல... யாரோ என்று...

யாரோ தந்த உறவு...

காலம் செய்த கோலம்...

இங்கு நான் வந்த வரவு...'

அன்று இரவு... ஹரிணியுடன்... அவனைப் பெற்றவர்கள் ஜெகந்நாதனின் வீட்டில் தங்கி விட... மற்ற உறவினர்களுடன்... பலராமன் தேனிக்குத் திரும்பி விட்டான்...

மறு வீட்டிற்கு மணமக்கள் போகும் போது கூடச் செல்ல எண்ணிய வெங்கடாசலம்... குடும்பத்துடன்... ஜெகந்நாதனின் வீட்டில்தான் இருந்தார்...

இரவின் தனிமைக்காக ஹரிணியை... குணவதியும்... பத்மாவதியும் அலங்கரித்துக் கொண்டிருந்தனர்...

இரவுப் பந்தியைச் சீக்கிரமே முடித்து... ராமநாதன்... ப்ரீதா... வைஷ்ணவியைத் தூங்கச் செல்லுமாறு விரட்டி விட்டுவிட்டு... சிவகாமி தானும் படுக்கப் போய்விட்டாள்...

இங்கிதமாய் ஒதுங்கிக் கொண்ட பரந்தாமன்... தங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த அறையில் படுக்கப் போய் விட... வெங்கடாசலம்... தோட்டத்துப் புல்வெளியில் காலார நடக்கலாம் என்று ஜெகந்நாதனைத் தள்ளிக் கொண்டு போனார்...

''ஜெகன்...''

''என்ன மாமா...''

''ஒரு பாடலைக் கேட்டிருக்கிறீங்களா...''

''என்ன பாடல் மாமா...''



''ஆயிரம் இரவுகள் வருவதுண்டு... ஆனால் இதுதான் முதலிரவு எப்படின்னு ஒரு பழங்காலத்துப் பாட்டு...''

''இதையேன் மாமா இப்போது சொல்கிறீங்க...''

''இப்போதுதான் மாப்பிள்ளை சொல்லணும்... உங்க வாழ்க்கையில் இனிமேல் ஆயிரம் ராத்திரிகள் வரலாம்... ஆனா... இதுதான் கல்யாணமானவுடனே வரும் முதல் ராத்திரி... இதுல சொதப்பினீங்கன்னு வையுங்க... ஆயுசுக்கும் இதை வீட்டுக்காரி சொல்லிக் காண்பித்துக் கொண்டே இருப்பாள்...''

''என்ன மாமா... நீங்க... இதையெல்லாம் சொல்லிக் கிட்டு...''

''சொல்லித்தானே ஆகணும்... நீங்களானா வானத்தைப் பார்த்துக் கிட்டு நிற்கறீங்க... ஹரிணி என்னன்னா... பூமிக்குள் நீரோட்டம் பார்த்துக்கிட்டு நிற்குது... இப்படி இரண்டு பேரும் இரண்டு திக்கில் பார்த்துக்கிட்டு இருந்தால் பொழப்பு எப்படி நடக்கிறது?''

''வேறு எதையாவது பேசலாம் மாமா...''

''இப்போதைக்கு... இதைத் தவிர வேறு எதையும் பேசக் கூடாது... எனக்குத் தெரிந்த ஒருத்தன் முதல் ராத்திரியிலே... படுத்துத் தூங்கி விட்டான்... இன்னைக்கு வரைக்கும் அவன் பொண்டாட்டி அதையே சொல்லிக் காட்டுகிறாள்...''

''ஏன் மாமா... காலையில் கல்யாணமென்று... விடியற்காலம் நான்கு மணிக்கெல்லாம்... எழுப்பி விட்டு விட்டீங்க... தாலி கட்ட... மேடையில் உட்கார்ந்து... திரும்பவும் சாயந்திர ரிசப்சனுக்கு அலங்கரிக்க உட்கார்ந்து... ரிசப்சன் மேடையில் கால் கடுக்க நின்று...

இப்போதுதான் வீட்டிற்கு வந்து சாப்பிட்டுவிட்டு நிற்கிறேன்... கண் செருகுறது... விட்டால் தூக்கம் போட வேண்டும்போல் தோன்றுகிறது... ஊடே... ஊடே... ரெஸ்ட் எடுத்துக் கொண்ட எனக்கே இப்படியென்றால்... கிராமத்து மாப்பிள்ளைக்கு எப்படி அயர்வாக இருந்திருக்கும்? காலையில் தாலிகட்டியதும்... அன்றைக்கு நைட்டே பர்ஸ்ட் நைட் என்றால் அநியாயம் மாமா... மனுசனுக்கு ரெஸ்ட் வேண்டாமா...?''

வெங்கடாசலம் அயர்ந்து போய் நின்று விட்டார்... இப்படி ஓர் மனக் குமுறலை ஒரு புது மாப்பிள்ளை சொல்லி இப்போதுதான் அவர் கேட்கிறார்... எனவே மருமகனை விசித்திரமாய்ப் பார்த்தார்...

காலையில் தாலிகட்டியதும்... புது மனைவியின் மேல் ஏற்படும்... உரிமையில்... எப்போது இரவு வரும் என்று காத்திருக்கும் மாப்பிள்ளைகளைப் பார்த்தே பழக்கப் பட்டவர் அவர்... ஏன் அவரும் கூட அப்படித்தானே இருந்தார்...

## 26

'இப்படியெல்லாம் கூட ஒரு புதுமாப்பிள்ளை பேசுவானா...?' வெங்கடாசலம் தன் அக்கா மகனை மேலும்... கீழும் பார்த்தார்...

''என்ன மாமா... வேற்றுக் கிரக வாசியைப் பார்ப்பது போல இவ்வளவு விந்தையாகப் பார்க்கறீங்க...''



''வேறு எப்படிப் பார்க்கிறது மாப்பிள்ளை... முதல் ராத்திரியைத் தாலிகட்டின அன்றைக்கே வைத்துக் கொள்வது நியாயமான்னு கேட்ட முதல் ஆள் நீங்கதான்... இப்படி நியாயம் கேட்கும் நியாயவாதியை இப்போது தானே முதன் முதலாய்ப் பார்க்கிறேன்... ம்ஹூம்... எட்டுப்பட்டியில் நான் பண்ணி வைத்த பஞ்சாயத்துகளில் இப்படி ஒரு நியாயத்தைக் கேட்டு எவனும் என் பஞ்சாயத்தில் வந்து நின்னதே இல்லை...''

''போங்க மாமா. நீங்க வேறு... என் நிலைமை புரியாமல் பேசிக்கிட்டு...''

''என்னத்தை நிலைமையைக் கண்டுபுட்டிங்க... உங்க அப்பா போனதும் கம்பெனி ஆடிப் போய் நின்னப்போ... பசி... தூக்கம் பார்க்காம துணிஞ்சு நின்ன ஆளு நீங்க... இப்போ முதல் ராத்திரிக்குப் போக இவ்வளவு மலைப்பா...?''

இன்னும் சற்றும் நேரம் அங்கு நின்றால்... இது போன்ற கேள்விக் கணைகளை அவர் ஏவி விட்டுக் கொண்டே இருக்கக் கூடும்... என்பதால்... ஜெகன் அவசரமாய் அங்கிருந்து போய்விட்டான்...

ஹரிணிக்கு ஒப்பனை செய்து முடித்து அவளை அழைத்துச் சென்று ஜெகனின் அறைக்குள் அனுப்பி விட்டு வந்த பத்மாவதி கணவனைத் தேடி வந்தபோது அவர் காற்றில் கோலம் போட்டுக் கொண்டிருந்தார்...

'இந்த மனுசனுக்கு என்ன ஆச்சு... இருட்டுக்குள் நின்று கொண்டு... தனக்குத் தானே பேசிக் கொண்டிருக்கிறாரே...' பத்மாவதி திகிலடைந்து விட்டாள்...

''ஏங்க... என்ன ஆச்சு உங்களுக்கு...?''

''ஏன்டி... எதுக்கு இப்படி கோபப்படறே...''

''இருட்டுக்குள் நின்னுக்கிட்டு என்னத்தைக் கணக்குப் பண்ணிக் கொண்டிருக்கீங்க...?''

''எல்லாம் என் நேரம்டி... என் கணக்கு வழக்கைப் பார்க்க சம்பளம் கொடுத்து ஒரு கணக்குப் பிள்ளையைப் போட்டு வைத்திருக்கிறேன்... என் அக்கா மகன் பண்ணுகிற கூத்தில் நான் நின்னு கணக்குப் போட வேண்டியதாயிருக்கு...''

''ஏன் ஜெகனுக்கு என்ன...? இப்பத்தான் ஹரிணியை ரூமுக்குள் விட்டுவிட்டு வந்திருக்கிறேன்...''

''சரி விடு... தண்ணிக்குள் தள்ளித்தான் விட முடியும்... நீந்திக் கரையேறுகிறது அவங்க பாடு...''

''எதையும் விளங்கச் சொல்லக் கூடாதுன்னு இன்றைக்கு விரதம் எதுவும் இருக்கீங்களா...?''

''இதை யெல்லாம் விளங்கச் சொல்லிட்டாலும்... கழுதையை விடுடி... நாம... நம்ம சோலியைப் பார்ப்போம்...''

பத்மாவதிக்கு மர்மம் தாங்காமல் தலை வெடித்து விடும் போல இருந்தது...

''இப்ப விசயம் என்னன்னு எனக்கு நீங்க சொல்லித் தான் ஆகணும்... அது என்ன... எதைப் பேசினாலும் இன்றைக்குப் பொடி வைத்தே பேசுகிறீங்க...?''

''ஆமாம்டி... எனக்கு அப்படிப் பேசணும்னு ஆசையாய் இருக்கு. பேசறேன்... அதுக்கு என்னாங்கிற இப்ப...''

''இப்படிக் கூட ஒரு மனுசனுக்கு ஆசை வருமா...?''



''ஏன்... வராதா? தன்னால... காலையில் தாலிகட்டி விட்டு... அன்னைக்கு ராத்திரிக்கே முதலிரவை வைத்தால் மனுசனுக்குத் தூக்கம் வராதான்னு நியாயம் கேட்டுட்டுப் போற அக்காள் மகனுக்குத் தாய்மாமனா போய் விட்டேனே.... முதல் ராத்திரியில் தூங்க அவன் ஆசைப்படும் போது.... பொடி வைத்துப் பேச எனக்கு ஆசை வரக்கூடாதா...?''

''அடி.... ஆத்தி... இதென்ன கூத்தா இருக்கு....?''

''கூத்துத்தான்... இந்தக் கூத்தை யாரிடம் போய்ச் சொல்வது....? பொண்ணைப் பெத்தவன் கிட்டப் போய் சொன்னால் அவன் அருவாளைத்தூக்குவான்... அக்கா மகனுக்காக நான் ஏன் வீச்சருவாளைத் தேடணும்... என் அக்காகிட்ட சொன்னால்... அது நெஞ்சைப் பிடிச்சுக் கிட்டு விழுந்துடும்... இந்த ராப்பொழுதில் அதை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக்கிட்டு ஓடணும்... தேவையாடி.... அதான்... இருட்டில் நின்னு கணக்குப் போட்டுக்கிட்டு இருக்கேன்....''

''என்னங்க நீங்க... இப்போ போய் இப்படிச் சொல்கிறீங்க...?''

''வேற எப்போ சொல்லச் சொல்கிற...?''

''உங்க அக்கா வந்து அழுதா.... என் அக்கா மகள் தான் உங்களுக்கு ஜெகனுக்குப் பெண்டாட்டியாக்கக் கிடைத் தாளா....?''

''ஏன்டி... ஜெகனுக்கு என்ன குறை... எட்டு ஊரு ஜில்லாவுல தேடிப்பிடிச்சாலும் இப்படி ஒரு மாப்பிள்ளை கிடைப்பானா?''

''நல்லாக் கிடைச்சார்... எனக்கு நல்லா வந்திரும் வாயில்.... முதலிரவுக்குப் போக மாட்டேன்னு அடம் பிடிக்கிற மாப்பிள்ளையை என் அக்கா மகளுக்குக் கட்டி வைத்து விட்டு வியாக்கியானமா பேசுகிறீங்க...'' பத்மாவதி பொங்கினாள்...

வெங்கடாசலம் அதற்கும் ஒரு சரியான பதிலைச் சொன்னார்....

''இந்தா பாரு... அவங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் ஆகிடுச்சு... இனி ஜெகன்பாடு... ஹரிணிபாடு... இதை நாம் மேற்கொண்டு... இனிமேல் பேசவே கூடாது.... ஏன்னா... இன்னைக்கு காலைல வரைக்கும் ஜெகன் எனக்கு அக்காள் மகன்.. ஹரிணி உனக்கு அக்காள் மகள்... இப்போது அவங்க புருசன் பெண்டாட்டி.... அவங்க விசயத்தை இனி நாம் பேசலாமா? வா... தூங்கப் போகலாம்...''



# 27

அறைக்குள் சென்ற ஹரிணி.... யாருமில்லாத அறையில் தனிமையில் நின்றாள்... இதமான மலர்வாசம் அறையை நிறைத்திருந்தது... அழுத்தமான காலடி யோசை கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.... ஜெகன் கதவை அடைத்து... தாழ் போட்டுக் கொண்டிருந்தான்...

ஹரிணி பார்வையைத் தாழ்த்திக் கொண்டு அசையாமல் நின்றாள்... ஜெகன் அவளைப் பார்த்தபடி



கட்டிலில் அமர்ந்தான்... அவளது சங்கடத்தை அவனால் உணர்ந்து கொள்ள முடிந்தது...

''ஹரிணி...''

''......''

''ஹரிணிதானே உன் பெயர்....?''

''ம்ம்ம்....''

''இப்படி உட்கார்....''

ஹரிணி தயக்கத்துடன் கட்டிலின் முனையில் அமர்ந்தாள்.... ஜெகன் அவளைக் கருணையுடன் பார்த்தான்...

''பயம் வேண்டாம் ஹரிணி... சரியாக உட்கார்....''

ஹரிணி கூச்சத்துடன் சரியாக அமர்ந்து கொண்டாள்.... ஜெகன்... பட்டுவேட்டி... பட்டுச் சட்டையில் இருந்ததைக் கீழ்ப் பார்வையாகப் பார்த்தாள்....

அதே சமயத்தில் ஜெகனும்... அமைதியான கடல் நீலத்தில் அவள் உடுத்தியிருந்த பிரிண்டெட் சில்க் சேலையைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான்....

''நீ அழகாக இருக்கிறாய் ஹரிணி....''

''..........''

''அமைதியான... அடக்கமான சுபாவமாய் இருக்கிறாய்....''

''..........''

''என்னை நேரில் பார்க்காமல் கல்யாணத்திற்குச் சம்மதித்து இருக்கிறாய்... நானும் உன்னை நேரில் பார்க்கவில்லையென்று சொல்லாதே.... என் வீட்டில்... என் சார்பாக என் அம்மாவும் தம்பியும் வந்து உன்னைப் பெண்

பார்த்தார்கள்... உன் போட்டோவைக் கொண்டு வந்து என்னிடம் காட்டினார்கள்.... ஆனால் உன் வீட்டிலிருந்து யாரும் வந்து என்னை மாப்பிள்ளை பார்க்கவில்லை.. என் போட்டோவைக்கூட அவர்கள் கேட்கவில்லை... உனக்கும் வாங்கிக் கொடுக்கவில்லை...''

''.......''

''அந்த நம்பிக்கைதான் என்னை இந்தக் கல்யாணத் திற்குச் சம்மதிக்க வைத்தது...'''

''.......''

''நான் பேசிக் கொண்டே இருக்கிறேன்... நீ பேச மாட்டாயா?''

ஜெகன் அவள் முகம் பார்க்க... அவள் தயக்கமாய் வாயசைத்தாள்....

''என்ன பேசுவது...?''

''பேச ஒன்றுமேயில்லையா....?''

அவள் மீண்டும் மௌனமானாள்... ஜெகன் மெலி தான ஒரு சிறு புன்னகையுடன் அவளைப் பார்த்தான்...

''ஹரிணி...''

''ம்ம்...''

''இன்றைக்குக் காலையில் நான் உன் கழுத்தில் தாலி கட்டியிருக்கிறேன்... நீ இப்போது என் மனைவி.... நான் உன் கணவன்,,,''

''ம்ம்...''

'எதற்காக இவன் இதைச் சொல்கிறான்....' என்று புரி யாமல்... அவள் விரல் நகம் பார்த்தாள்....



''நீ மனைவியென்ற உரிமையைத் தாராளமாய் என்னிடம் வலியுறுத்தலாம்... உன் கணவன் என்ற கடமையை நான் தட்டிக் கழிக்க மாட்டேன்...''

அவளுக்கு எதுவோ புரிவது போல் இருந்தது... தயக்கமாய் நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள்...

''எனக்குப் புரியவில்லை....''

''புரியும்படி சொல்வதானால்... இது பர்ஸ்ட் நைட் ரூம்...'' ஹரிணி முகம் சிவந்தாள்....

''அதற்காக...?''

''ம்ம்... நீ விரும்பியதை நிறைவேற்ற வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது... இன்று காலையில் உன் அப்பா உன் கையைப்பிடித்து என்னிடம் ஒப்படைத்து... 'என் கண்ணையே உங்களிடம் ஒப்படைக்கிறேன்...' என்று சொன்னார்.... அவரது நம்பிக்கையைப் பொய் யாக்கக் கூடாது....''

ஹரிணியின் தயக்கம் இப்போது முழுவதும் பறந்து விட்டது.... நன்றாக நிமிர்ந்து அவனை நேர் கொண்ட பார்வையாய்ப் பார்த்தாள்....

''கடமையில் எந்த உறவும் வரக் கூடாது....''

''ஹரிணி... நான் சொல்ல வந்தது வேறு...''

''பொருள் ஒன்றுதானே....''

''என் மனைவியான உன்னை நான் ஏமாற்றக் கூடாது....''

''ம்ச்ச்... என்னிடம் எந்த எதிர்பார்ப்பும் இல்லை யெனும்.... போது ஏமாற்றம் எங்கிருந்து வரும்....?''

ஜெகனின் மனம் லேசானது... அவன் ஒரு விடுதலை உணர்வுடன் அவளைப் பார்த்தான்....

''தேங்க்ஸ் ஹரிணி...''

''எதற்காக இந்த தேங்க்ஸ்?''

''என்னைக் கட்டுக்குள் இருந்து விடுவித்ததற்கு?''

''ஸோ... இந்தக் கல்யாணம் உங்களைக் கட்டிப் போட்டு விட்டதாக நினைக்கிறீர்கள்...?''

ஜெகன் மௌனித்தான்... ஹரிணி.... அவனிடம் நிதானமாகக் கூறினாள்....

''எனக்கும் இந்த பர்ஸ்ட் நைட் ஏற்பாடு பிடிக்க வில்லை... ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாமல்... ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதில் எனக்கு உடன் பாடில்லை... நல்லவேளை.... நீங்களும் என்னைப் போலவே நினைவுடன் இருக்கிறீர்கள்.... குட் நைட்...''

ஹரிணி கட்டிலின் ஓரமாகப் படுத்தாள்... உடனே கண்மூடித் தூங்கியும் விட்டாள்... விடியும்வரை விழித் திருந்தது ஜெகன்தான்...



# 28

காலையில் ஜெகன் கண் விழித்துப் பார்த்த போது ஹரிணி அருகில் இல்லை... தான் எப்போது படுத்துத் தூங்கினோம், அவள் எப்போது எழுந்து சென்றாள் என்ற



நினைவுடன் எழுந்து குளியலறைக்குச் சென்றான்... குளிர்ந்த நீரில் முகம் கழுவிய பின் கொஞ்சம் புத் துணர்வாக இருந்தது... அறைக்குள் வந்து டவலை எடுத்து முகம் துடைத்தபடி கட்டிலைப் பார்த்தான்... கசங்காத மெத்தை விரிப்பு... அதில் தூவப்பட்டிருந்த பூக்களுடன் அவனைப் பார்த்துச் சிரித்தது....

ஹரிணியைப் பற்றி நினைத்துக் கொண்டான்.... அவளிடம் இவ்வளவு தெளிவான சிந்தனையும்... பேச் சும் இருக்கும் என்று அவன் நினைத்துக் கூடப் பார்க்க வில்லை... என்ன ஒரு கண்டிப்பு....! அவளுடன் சேர்ந்து மகிழ்ந்து சுகிக்க ஏன் அவனால் முடியவில்லை....

''ம்ஹூம்...' மனதிற்குள் பெருமூச்சு எழுந்தது... இதுவே அந்த முகம் தெரியாத நிலவுப் பெண் மனைவி யாக வந்து வாய்த்திருந்தால் எப்படி இருந்திருக்கும்...

'மாலையும்... மஞ்சளும்...

மாறியதே ஒரு சோதனை...

மஞ்சமும்... நெஞ்சமும்...

வாடியதே பெரும் வேதனை...

தெய்வமே...! யாரிடம்...

யாரைத் தந்தாயோ....

உன் கோவில் தீபம் மாறியதை...

நீ அறிவாயோ...'

மனதிற்குள் மீண்டும் பாடல் ஒலித்தது... கண்ண தாசனால் எப்படி இந்தக் கானல் வரிக் கவிதைகளைத் திரையிசைப் பாடல்களாய்க் கொண்டு வர முடிந்தது....?

என்று அவன் நினைத்து ஆச்சரியப்பட்டுக் கொண் டான்...

''யார் அந்த நிலவு...

ஏன் இந்தக் கனவு...?''

என்று வாய் விட்டுப் பாடியபடி திரும்பியவன் திகைத்து நின்றான்... குளித்து முடித்து.... தலையை... தளர்வாய்ப் பின்னலிட்டு... கையில் காபிக் கோப்பையுடன் வந்து நின்றாள் ஹரிணி...

''தேங்க்ஸ்....''

''எதற்காக இந்த தேங்க்ஸ்....?''

''காபிக்காக....''

''நீங்கள் ஒரு காரியம் பண்ணினால் நான் உங்களுக்கு தேங்க்ஸ் சொல்லுவேன்...''

''என்ன அது....?''

''ஒவ்வொரு நொடியும்... நான் செய்யும் இயல்பான செய்கைகளுக்கு தேங்க்ஸ் போடுவதை நிறுத்த வேண் டும்... எடுத்ததற்கெல்லாம் இப்படி தேங்க்ஸ் போட் டீர்கள் என்றால் வாழ்நாள் முழுவதும் நீங்கள் தேங்க்ஸ் சொல்லியே காலம் கழிக்க வேண்டும்...''

ஜெகனுக்கு அவள் சொல்லிய விளக்கத்தைக் கேட்டு ஆச்சரியம் வந்தது... இவள் பேசுவது... எங்கோ... எப் போதோ... யாரோ பேசி... அவன் கேட்டது போலவே இருக்க... அவன் அவளை உற்றுப் பார்த்தான்... அவளோ... மெத்தை விரிப்பை அலுங்காமல் நான்கு புறமும் பிடித் துத் தூக்கி... அதிலிருந்த பூக்குவியல்களை... அறையி லிருந்த பிளாஸ்டிக் குப்பைப் பெட்டியில் கீழே



சிதறாமல் கொட்டி விட்டு... மெத்தை விரிப்பை மாற்றி னாள்...

''இதையெல்லாம் ஏன் நீ செய்கிறாய்?''

''ஏன்... நான் செய்தால் என்ன...?''

''இல்லை... வேலையாள்தான் எப்போதும் செய் வான்...''

''இப்போது வீட்டு ஆள் செய்வதாக நினைத்துக் கொள்ளுங்களேன்... என்ன... நான் வீட்டு ஆள்தானே?''

அவள் தலைநிமிர்ந்து அவனைப் பார்த்துக் கேட்க... அவன் சிரித்துக் கொண்டே கையிலிருந்த காலிக் காபிக் கோப்பையை அங்கிருந்த டீப்பாயின் மேல் வைத்தான்...

''உன் கழுத்திலிருக்கும் தாலிக் கயிற்றைக் கேட்டுப் பாரேன்.... அது நீ வீட்டு ஆளா... இல்லை வெளியாளா என்று சொல்லும்...''

''ஊஹூம்...?''

அவள் தலையை ஆட்டிச் சிரித்து விட்டு... காலிக் கோப்பையை எடுத்துக் கொண்டு போய் விட்டாள்... இயல்பாய் அவள் பழகியது அவனது மனதிற்கு இதமாக இருந்தது... முதல் நாள் அவளைத் தொடாமல் விலகி யிருந்த குற்ற உணர்வு அவனுக்குள் வந்து விடாமல்... அவள் சகஜமாய்ப் பேசிச் சிரித்தது... அவனுக்குள் உற்சாகத்தை விதைத்தது...

குளித்து உடை மாற்றிக் கீழே இறங்கிப் போனான்... வெங்கடாசலமும்.... பரந்தாமனும்... அவனுக்காகக் காத் திருந்தனர்...

''வாங்க மாமா, சாப்பிடலாம்...'' அவன் பொதுவாக

''ஜெகன்... உங்களுடைய மாமனார் உங்களை மறுவீட்டிற்கு அழைத்துப் போக ரெடியாக இருக்கிறார்...'' என்றார் வெங்காடசலம்...

''மறு வீட்டிற்கா...? அப்படியென்றால்...?''

'இவன் ஒருத்தன்... முதலிரவுன்னாலும் மல்லுக் கட்டுவான்.... மறுவீட்டு விருந்தென்றால் என்னவென்று கேட்பான்...? என் அக்காளுக்கு இவன் மகனாகப் பிறந்து தொலைத்து விட்டதால்... நான் உரலுக்குள் தலையைக் கொடுத்து விட்டு அல்லாடுகிறேன்...' பெருமூச்சுடன் வெங்கடாசலம் பத்மாவதியைப் பார்க்க... அவள் கணவருக்கு உடனே உதவிக் கரம் நீட்டினாள்....

# 29

''அது ஒன்றுமில்லை மருமகனே... ஹரிணியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு விட்டிங்க... இல்லையா....?''

''ஆமாம்...''

''இனிக் காலமெல்லாம் ஹரிணி உங்களுடன்... உங்கள் ஊரில்... உங்கள் வீட்டில்தான் இருந்தாக வேண்டும்.... இல்லையா....?''

''ஆமாம்....''

''அங்கே ஹரிணியின் ஊரில் இருக்கிறவங்க எல்லோரும் கல்யாணத்துக்கு வந்திருக்க முடியாது.... இல்லையா....?''



''ஆமாம்...''

''அதனால்... ஹரிணியோடு அங்கே போய்... புது மாப்பிள்ளை... புதுப் பெண்ணாய் இருக்கிற போதே.... தலையைக் காட்டிவிட்டு... பொண்ணைக் கொடுத்தவங்க வீட்டில் விருந்தும் சாப்பிட்டு விட்டு... பெண்ணைக் கையோடு அழைத்துக் கொண்டு வந்து விடுவதுதான் மறுவீட்டு விருந்து....''

''ஓ... அப்படியா...''

ஜெகந்நாதன் விசயத்தைக் கிரகித்துக் கொண்டு தலையை ஆட்ட... வெங்கடாசலம் மனைவியை ஆச்சரியமாய் நோக்கினார்...

''என்ன....?''

''எங்கேடி இப்படிப் பேசக் கற்றுக் கொண்டாய்...? எட்டுப் பட்டிக்கும் பஞ்சாயத்துப் பண்ணும் என்னாலேயே... என் அக்காள் மகனுக்கு விளங்க வைக்க முடியவில்லை... நொடிப் பொழுதில் நீ விளங்க வைத்து விட்டாயே... அது எப்படிடீ....''

''அதனால்தான் ஊர் பஞ்சாயத்து பண்ணும் உங்களிடம் வீட்டுப் பஞ்சாயத்தை நான் கொண்டு வருவதில்லை...''

பத்மாவதி... குணவதியைத் தேடிச் சென்றுவிட.... வெங்கடாசலத்தைச் சாப்பிட வருமாறு சிவகாமி அழைத்தாள்... அவர் எழுந்து சாப்பிடச் சென்றார்....

சாப்பிட்டு முடிந்ததும்... வெங்கடாசலத்தைப் பார்த்த ஜெகன்....

''மாமா.... நான் கம்பெனி வரைக்கும் கொஞ்சம் போய் விட்டு வந்து விடுகிறேன்...''

''மறு வீட்டு விருந்து என்ன ஆவது மாப்பிள்ளை....?''

''கிளம்பி ரெடியாக இருங்கள்... நான் போனதும் வந்து விடுவேன்...''

சொன்னபடி ஜெகந்நாதன் வந்து விட்டான்... தேனிக்குப் பரந்தாமனின் காரில் வைஷ்ணவியும்.... வைகுந்தும் ஏறிக் கொள்ள... வெங்கடாசலத்தின் காரில் குணவதியும்... பத்மாவதியும் ஏறிக் கொண்டார்கள்...

''நாங்க பொம்பளைகள் பேசிக்கொண்டே வருவோம்... உங்களுக்கென்ன ஆச்சு...'' என்று அவர்கள் இருவரும் முறைத்த முறைப்பால்.... பரந்தாமனும்.... வெங்கடாசலமும்.... காரைப் பதிலே பேசாமல் கிளப்பினர்...

ஜெகந்நாதன் அருகே ஹரிணி அமர்ந்திருந்தாள்... சாலையில்... முன்னால் சென்ற கார்களை முந்திக் கொண்டு ஜெகந்நாதனின் கார் விரைந்தது...

''உங்களுக்கு வேகம்தான் பிடிக்குமோ....?''

''ஆமாம்... அது எப்படி உனக்குத் தெரிந்தது....?''

''நீங்கள் காரை ஓட்டும் விதத்தைப் பார்த்தே தெரிகிறதே....''

''பரவாயில்லை... நீ.... நன்றாக கெஸ் பண்ணுகிறாய்... ஆமாம்... என்ன படித்திருக்கிறாய்....?''

''பி.எஸ்.ஸி... ஃபைனல் இயர் எக்ஸாம் இப்போது தான் எழுதி முடித்தேன்...''

''என்ன மேஜர்...?''

''கம்ப்யூட்டர் சயின்ஸ்...''

''பாஸ் பண்ணி விடுவாயா...?''



''ஹலோ... யுனிவர்ஸிட்டி ரேங்கே வாங்குவேன்...''

''குட்... அப்போ... மேலே படிக்க வேண்டியதுதானே...''

''ஏன் படிக்காமல் என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டேன்னு கேட்கறீங்களா...?''

''ஹப்பா.... என்னமாய்க் கொக்கி போடுகிறாய்...? உன்னிடம் ஜாக்கிரதையாகத்தான் பேச வேண்டும்.....''

ஹரிணி மௌனப் புன்முறுவல் பூத்தபடி.... காரின் ஜன்னல் வழி வெளியே பார்த்தாள்...

''பட்... எனக்கொரு சந்தேகம்...''

''என்ன...?''

''என்னை விட வயதில் நீ மிகவும் இளையவளாக இருப்பாய்...''

''கையில் பீடிங் பாட்டிலோடு இருக்கவில்லை... நீங்களும் தடியூன்றும் தொண்டுக் கிழவரில்லை....''

''ஏய்....''

ஜெகந்நாதன் ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்தான்... முகம் தெரியாத அந்த அனாமிகாவிடம் வார்த்தையாடும் போது ஏற்படும் உற்சாகம்... இவளுடன் பேசும் போதும் ஏற்படுவது எப்படி....? அவளைப் போலவே... இவளும் துடுக்காக... கிண்டலாக... வெடுக்... வெடுக்கென்று... கெட்டிக்காரத்தனமாய்ப் பதில் சொல்கிறாளே...

அவளுடன் உரையாடுவது அவனுக்குப் பிடித்துப் போனது... அவன் அவளுடைய கல்லூரியைப் பற்றி விசாரித்தான்...

''நீ மேலே படிக்க விரும்புகிறாயா...?''

''விரும்பினால் என்ன செய்வதாக உத்தேசம்...?''

''சென்னையில் காலேஜில் சேர்த்து விடுவேன்...''

அவள் ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தாள்... அவன் அவளது ஆச்சரியத்தைக் கண்டு புருவங்களை மேலே ஏற்றி அவளை விசாரித்தான்....



## 30

''எதற்கு இவ்வளவு.. ஆச்சரியமாகப் பார்க்கிறாய்?''

''கல்யாணம் பண்ணிய பின் படிப்பதா?''

''ஏன்.... படித்தாலென்ன...?''

''எங்கள் ஊர்ப் பக்கம் அது போல் விட மாட்டார்கள்...''

''ஏன்... விட மாட்டார்கள்...?''

''கல்யாணமானால் குடும்பத்தைத்தான் முதலில் பார்க்க வேண்டும்ன்னு சொல்லுவாங்க...''

''ஏன்... படித்துக் கொண்டே குடும்பத்தைப் பார்க்கக் கூடாதா....?''

அவள் வாய் மூடி நகைத்தாள்... அவன் புரியாமல் பார்த்தான்...

''ஏன் என்ற கேள்வியின்றி உங்களால் இருக்கவே முடியாதா?''



அவன் சடன் பிரேக் அடித்துக் காரை நடுரோட்டில் நிறுத்த, பின்னால் வந்த கார்க்காரன்... அவனை எட்டிப் பார்த்துத் திட்டி விட்டு மறைந்தான்...

ஹரிணி குழப்பத்துடன் அவனை நோக்கினாள்... ஜெகனின் மனம் அலை பாய்ந்தது.. அவன் மனதில் அனாமிகாவின் குரல் எதிரொலித்தது...

'ஏன்... என்ற கேள்விகளை என் முன் நீங்கள் வைப்பது ஏன்...?'

'ஏனென்ற கேள்வியின்றி நீங்கள் இருக்க முடியாதோ....'

அவள் போலவே... இவளும் பேசுவது எப்படி....? ஒரு வேளை அவள்தான்... இவளா...? கேட்டு விடலாமா...? ஒரு வேளை இவள் அவளாக இல்லா விட்டால்... ஹரிணிக்கு அவன் மனதில் உறங்கும் கதை தெரிந்து விடுமே... அதன் பின் வாழ்நாள் முழுவதும் அவளது மனதில் நெருஞ்சி முள்ளாய் அந்த நினைவிருக்குமே...

'வேண்டாம்....' ஜெகன் காரைக் கிளப்பினான்....

''ஏன் மூட் அவுட் ஆகிட்டிங்க...?''

''ஒன்றுமில்லை...''

''ஒவ்வொரு 'ஒன்றுமில்லை...' என்ற வார்த்தைக்குப் பின்னால் ஆயிரம் அர்த்தங்கள் ஒளிந்திருக்கும்....''

மீண்டும் காரை சடன் பிரேக் போட இருந்து சுதாரித்துக் கொண்டான் ஜகன்...

இவள் பேசுவதைக் கேட்டு அதிர்ச்சியாகி விடக் கூடாது...

''ஊஹூம்... ஒவ்வொரு வார்த்தைக்கும்.... ஒரு அர்த்தம் உண்டா?''

''நிச்சயமாய்...''

''உதாரணத்திற்கு ஒன்று சொல்லேன்...''

''ம்ம்... 'பார்க்கலாம்' என்று நீங்கள் சொன்னால்... அந்தக் காரியம் முடிந்து விட்டது என்று அர்த்தம்...''

''ஐஸ் வைக்கிறாயே....''

'இவள் வேறு'.... என்ற எண்ணத்துடன் அவன் சிரித் தான்... 'அனாமிகா அன்று சொன்னவைகளை இவள் சொல்லவில்லை....'

தேனிக்குள் கார் நுழைந்தது... பெண்... மாப்பிள் ளையை ஆரத்தி எடுத்து வீட்டுக்குள் அழைத்துக் கொண்டார்கள்... வீடு முழுவதும் உறவினர் கூட்டம் நிறைந்திருந்தது... கிராமியப்புறச் சம்பிரதாயம் அங்கே பின்பற்றப்பட்டது....

ஜெகந்நாதனையும்... ஹரிணியையும்... பக்கத்தில்.... பக்கத்தில் அமர வைத்தார்கள்... நெருக்கமாக அமர்ந் திருந்தது... ஜெகனை என்னவோ செய்தது...

''பொண்ணு... மாப்பிள்ளைக்கு... பால்... பழம் கொடுங்க...''

ஜெகனின் கையில் பால் தம்பளரைக் கொடுத்தார்கள்... அவன் பாதி பருகிய பாலை ஹரிணியிடம் கொடுக்கச் சொல்ல... அவன் தயங்கினான்... ஆனால் அவள்... இயல்பாய் அதை வாங்கிக் குடித்தாள்....

ஜெகனுக்கு அது ஆச்சரியமாக இருந்தது... சற்று நேரத் தில் பரந்தாமன் அங்கே வந்தார்... மகளைப் பார்த்து...

''மாப்பிள்ளையை மாடி ரூமுக்குக் கூப்பிட்டுக் கொண்டு போம்மா....'' என்றார்...



ஹரிணி முன்னே செல்ல... ஜெகன் பின் தொடர்ந் தான்... மாடி அறை ஏஸி வசதியுடன் அவனுக்காகக் காத் திருந்தது...

''ரொம்பவும் தொந்தரவு பண்ணிட்டாங்களா...''

''நோ... நோ... ஐ லைக் இட் வெரிமச் ஹரிணி... சென் னையில் இது போல் பார்க்க முடியாது...''

''நீங்க ரெஸ்ட் எடுங்க.. நான் கீழே போய்விட்டு வந்து விடுகிறேன்...

''ம்ம்...''

ஒரு தோழியைப் போல் அவள் இயல்பாகப் பழகி னாள்... தேனியில் இருந்த நாள்களில் மட்டுமின்றி... சென்னைக்குத் திரும்பிய பின்னாலும் அவனது தேவை களைப் பார்த்துப் பார்த்துச் செய்தாள்....

ஹரிணியின் தேர்வு முடிகள் வெளியாகியிருந்தன.... சொன்னது போலவே அவள் பல்கலைக் கழகத் தங்கப் பதக்கம் வாங்கியிருந்தாள்...

ஜெகந்நாதனும் தான் சொன்னது போலவே... அவளை எம்ஸிஏ படிக்க வைத்தான்...

அவன் கல்லூரிக்கு அழைத்துச் செல்லும் வரை அவ ளுக்கு எங்கே அவன் அழைத்துக் கொண்டு போகிறான் என்றே தெரியாது... கல்லூரியில் சேர்த்து விட்டுத் திரும்பி வரும் போது அவனை அவள் பார்த்த பார்வையில் ஏதோ இருந்தது...

''ஏன் அப்படிப் பார்க்கிறாய்...?''

''சும்மா பார்த்தேன்...''

அதற்கு ஜெகந்நாதன் வாய்விட்டுச் சிரித்துக்கொண்டே ஒரு பதில் கொடுத்தான்.... அதைக் கேட்டவளின் முகம் மாறியது....

# 31

ஜெகந்நாதன் என்னவோ இயல்பாகத்தான் அதைச் சொன்னான்... ஆனால் ஹரிணியின் முகம் மட்டும் மாறிவிட்டது.....

'' 'சும்மா'... என்றா சொன்னாய்...?''

''ஆமாம்...''

'' 'சும்மா' என்ற வார்த்தைக்குப் பின்னால் ஓர் உண்மை ஒளிந்திருக்கும்...''

இதைச் சொன்னவனின் மனதில் சொன்னவளின் குரலும்... பெயரும் எதிரொலித்தது...

'அனாமிகா....' என்று நினைத்துப் பெருமூச்சு விட்ட படி... ஹரிணியின் முகத்தைப் பார்த்தவன் திடுக் கிட்டான்...

''என்ன ஹரிணி...''

''லேசாய்த் தலை வலிப்பதைப் போல் இருக்கிறது...''

''முதலிலேயே சொல்வதற்கு என்ன...''

ஜெகன் அடுத்து வந்த காபி ஷாப்பின் முன்னால் காரை நிறுத்தினான்... ஹரிணி புரியாமல் அவனைப் பார்த் தாள்...

''இறங்கு...''

''ஏன்...?''



''ஏனென்ற கேள்வியை நான் விட்டு விட்டேன்... நீ பிடித்துக் கொண்டாயா...?''

''இல்லை... இங்கே போய் காரை நிறுத்தி விட்டீங் களே...''

''உனக்குத் தலை வலிக்கிறது என்றாயே... ஒரு காபி சாப்பிட்டு விட்டுப் போகலாம்...''

''அதற்கு வீட்டிற்குப் போய் விடலாமே...''

''ஏன்... என்னுடன் காபி சாப்பிட வரக்கூடாதா? நான் என்ன... உனக்கு முன் பின் தெரியாதவனா...?''

ஜெகந்நாதன் கோபப்படவும்... சட்டென்று ஹரிணி கார் கதவைத் திறந்து கொண்டு இறங்கி விட்டாள்...

அவர்கள் அருகருகே அமர்ந்து காபி சாப்பிட ஆரம் பித்ததும் அவள் மெதுவாக வினவினாள்....

''உங்களுக்கு இவ்வளவு கோபம் வருமா?''

''கோபம் மனித இயல்பு... 'ரௌத்ரம் பழகு' ன்னு பாரதியாரே சொல்லியிருக்கிறார்... அதனால் கோபப் பட வேண்டிய விசயத்திற்குக் கோபப்பட்டுத்தான் ஆக வேண்டும்....''

''ஓ... ஐ ஆம் ஸாரி...''

''இட்ஸ் ஆல்ரைட்...''

அவள் சட்டென்று அவனை நிமிர்ந்து ஓர் புரியாத பார்வையொன்றைப் பார்த்து வைத்தாள்...

''என்ன விசயம் ஹரிணி...''

''கொஞ்ச நேரத்திற்கு முன்னால்.... காரில் ஏதோ சொன் னீங்களே...''

''என்ன சொன்னேன்...?''

''சும்மா என்ற வார்த்தைக்குப் பின்னால் ஒரு உண்மை ஒளிந்திருக்கும்ன்னு சொன்னீங்களே...''

''ஆமாம்... அதற்கென்ன இப்போது...?''

''இந்த இட்ஸ் ஆல்ரைட்.... என்ற வார்த்தைக்குப் பின்னால் என்ன ஒளிந்திருக்கும்...?''

''ஓர் மன வலி ஒளிந்திருக்கும்...''

ஹரிணியின் உடலில் ஓர் அதிர்வு தோன்றுவதை உணர்ந்தவன் அவளைக் கேள்வியோடு பார்த்தான்....

''இந்த இரண்டு வார்த்தைகளுக்கும் நீங்கள் சொல்லும் அர்த்தம் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது... எப்படி இதை நீங்கள் யோசித்தீங்க...''

''ம்ம்... இதுக்குன்னு ரூம் போட்டா யோசிப்பாங்க... எல்லாம் தானாய் வருவதுதான்...''

ஏன் அவள் முகத்தில் ஓர் ஏமாற்றம் படிந்தது என்று அவனால் இனம் கண்டு கொள்ள முடியவில்லை... அவள் ஒரு பெருமூச்சோடு காபிக் கோப்பையை வைத்து விட்டு எழுந்தாள்....

''போகலாமா...?''

''ஒகே....''

காரில் வரும் போது மௌனமாகவே அவள் வந்தாள்... அனாமிகாவைப் பற்றிய யோசனையில் இருந்த ஜெகனும் அதைக் கவனிக்கவில்லை....

ஹரிணி மேலே படிக்கப் போவதை அறிந்ததும்... பரந்தாமன் ஆட்சேபிக்க முயன்றார்... ஜெகனுக்குப் போன் போட்டுப் பேசினார்...



''மாப்பிள்ளை... நான் கேள்விப்பட்டது உண்மையா....?''

எதைச் சொல்கிறீங்க மாமா...?''

''ஹரிணியை மேலே படிக்க வைக்கப் போகிறீங்களாமே...''

''ஆமாம்... அவள் காலேஜில் சேர்ந்து விட்டாளே....''

''எதுக்கு மாப்பிள்ளை... இந்த வேண்டாத வேலை...?''

''ஏன் மாமா இப்படிச் சொல்கிறீங்க?''

''பொம்பளைப் புள்ளைக்கு எதுக்குப் பெரிய படிப்பு? அதுதான் பட்டம் வாங்கியிருக்கிறாளே... போதாதா....? கல்யாணம் ஆன பொண்ணு.... குடும்பம் நடத்தி.... குழந்தை குட்டின்னு ஆனால்தானே... பெரியவங்களுக்கு சந்தோசமா இருக்கும்...? அதை விட்டுவிட்டு.... புத்தகத்தைத் தூக்கிக்கிட்டு காலேஜுக்குப் போனால் நல்லாவா இருக்கும்....?''

ஜெகந்நாதனுக்கு ஹரிணியை நினைத்த போது உண்மையிலேயே பாவமாக இருந்தது... பல்கலைக் கழகத்தில் தங்கப் பதக்கம் பெற்ற பெண்... மேலே படிக்கக் குடும்பம் ஒரு தடையாய் இருப்பதா?

''மாமா... படிப்பு எல்லோருக்கும் பொதுவான ஒன்று... ஆண்பிள்ளைகள்தான் படிக்க வேண்டும்... பெண் பிள்ளைகள் கல்யாணம் பண்ணிக் கொண்டு செட்டிலாகி விட வேண்டும்... என்பது என்ன நியாயம்...? ஹரிணி என் மனைவி... என்னுடன் என் கம்ப்யூட்டர் பிஸினெஸ்ஸை சேர்ந்து கவனிக்க வேண்டியவள்... அவள் கம்ப்யூட்டரில் மேல் படிப்பு படிக்க வேண்டியது... எனக்கு மிகவும் அவசியம்....''

ஜெகன் தீர்மானமாகக் கூறிவிட்டான்....

# 32

ஜெகன் கைக்கடிகாரத்தில் மணி பார்த்தான்... நான்கு என்றது... 'ஹரிணிக்கு காலேஜ் முடிந்திருக்கும்...' என்ற நினைவோடு எழுந்து கொண்டான்...

இது பரந்தாமனின் வேண்டுகோள்... ப்ரீதாவிற்கு என்று தனி கார் அவள் கல்லூரிக்குப் போய் வருவதற்கு என்று ஜெகன் வாங்கிக் கொடுத்திருந்தான்... ராமநாதன் நினைத்தால் காரில் போவான்... இல்லாவிட்டால் பைக்தான். ஹரிணிக்கும் அது போல் வாங்கிக் கொடுத்து விட ஜெகந்நாதன் முனைந்த போது பரந்தாமன் போனில் அவனை அழைத்து அந்த வேண்டுகோளை வைத்தார்...

''மாப்பிள்ளை... ஹரிணி... எங்கள் கண் பார்வையிலேயே வளர்ந்த பெண்... அவளை ஹாஸ்டலில் தங்க வைத்துத்தான் படிக்க வைத்தோம்... எங்கேயும் தனியாகப் போய் வந்து அவளுக்குப் பழக்கமில்லை...''

''நீங்கள் பழக்கவில்லையென்று சொல்லுங்கள்...''

''எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும்... எங்கள் வீட்டில் நாங்கள் அவளுக்குக் கொடுத்த பாதுகாப்பை.... உங்கள் வீட்டில் நீங்களும்... அவளுக்குக் கொடுக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்...''

''இப்போது நான் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீங்க...?''



''அவளை காலேஜிற்கு அனுப்பி... எம்ஸிஏ படிக்க வைக்கணும்னு ஒரே குறியாய் இருக்கீங்க... சரி... ஆனால் உங்கள் காரிலேயே கூப்பிட்டுக் கொண்டு போய் நீங்களே அவள் காலேஜில் இறக்கி விட்டுவிட்டு... திரும்பவும் வரும் போது நீங்களே கூப்பிட்டுக் கொண்டு வந்தால் எங்களுக்குக் கொஞ்சம் நிம்மதியாக இருக்கும்...''

ஜெகந்நாதன் அப்படியே செய்வதாக அவருக்கு வாக்குக் கொடுத்தான்... ஆனால்.... அவனுக்குமே இது புதிய வேலை... அவன் இதுவரையில் இப்படிப்பட்ட பொறுப்புகளை எடுத்துக் கொண்டது இல்லை.... எடுத்துக் கொள்ள அவனுக்கு நேரமும் இல்லை... சிவகாமிக்கு மருத்துவமனைக்குப் போக வேண்டுமென்றால்... ஆபிஸிலிருந்து தன் பிஏவை அழைத்து... சிவகாமியை மருத்துவமனைக்குக் கூப்பிட்டுக் கொண்டு போய் விட்டு வரச் சொல்வான்... ராமநாதன் வளர்ந்த பின்... அவன் தாயையும்... தங்கையையும் பார்த்துக் கொண்டான்... குடும்பப் பொறுப்பை அவனது குடும்பத்தார் யாரும் அவனது தலைமேல் வைத்தது இல்லை....

இன்று மனைவியைக் கொண்டு போய் விட்டுவிட்டு... அழைத்து வரும் மிகப் பெரும் பொறுப்பை அவன் ஏற்றுக் கொள்ள வேண்டியதாகிவிட்டது... எந்த நேரமும் கம்பெனியிலேயே இருக்க வேண்டியவன்... கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டு... காலையிலும்.... மாலையிலும் ஓட வேண்டியதாக இருந்தது...

ஹரிணி அவனைப் பார்த்து இரக்கப்பட்டாள்...

''ஏன்... இப்படி ஓடிவர வேண்டும்? நான் வேண்டுமானால் ப்ரீதாவை வரச்சொல்லி... அவளுடன் வந்து விடுகிறேனே.. இல்லை... அவளுக்கு வேலையிருக்கு

மென்றால்... நீங்கள் காரை டிரைவரிடம் கொடுத்து அனுப்பி விடலாமே...''

''உன் அப்பாவிற்கு வாக்குக் கொடுத்திருக்கிறேனே...''

''ஓ... இதற்குத்தான் யோசித்து வாக்குக் கொடுக்க வேண்டுமென்பது...''

''இதற்கெல்லாம் யோசிக்கக்கூடாது... என்னிடம் அவர் உன்னை ஒப்படைத்திருக்கிறார்... நான் அவருடைய நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டாமா...?''

''கடமை...?''

''யெஸ்.... கடமைதான்...''

ஹரிணி உதட்டைக் கடித்துக் கொண்டு மௌனமாகி விடுவாள்...

அதை உணராமல் ஜெகந்நாதன் தன் போக்கில் காரை ஓட்டிக் கொண்டிருப்பான்...

அன்றைக்கும்... அப்படித்தான்... அவன் அரக்கப்பரக்க காரை ஓட்டிக் கொண்டு போனபோது... ஹரிணி மரத்தடியில் அவனுக்காகக் காத்திருந்தாள்... அவளருகில் ஒருவன் நின்று பேசிக் கொண்டிருந்தான்... ஜெகனின் காரைக் கண்டதும் ஹரிணி அவனிடம் தலையசைத்து விடை பெற்று விட்டு.... காருக்கு வந்தாள்... அவள் ஏறி அமரும் வரை காத்திருந்த ஜெகன்.. காரைக் கிளப்பியவாறு அவளிடம் கேட்டான்...

''யார் அது...?''

''எது....?''

''உன்னிடம் பேசிக்கொண்டிருந்தது....''



''என்னிடம் பேசிக் கொண்டிருந்தது... இரண்டு காலிருக்கும் மனிதப் பிறவியாயிற்றே... நீங்கள் நாலுகால் பிராணிகளைச் சொல்வது போல்... 'அது' என்கிறீங்களே...''

''ஹா... ஹா..''

ஜெகந்நாதன் வாய்விட்டு அதை ரசித்துச் சிரித்தான்... ஹரிணி... பயந்தது போல் பாவனை செய்தாள்...

''எதற்குப் பயம்?....ம்ம்..''

''இப்படியொரு இடிச் சிரிப்பா....?''

ஜெகந்நாதனின் முகத்தில் இருந்த புன்னகை மறைந்தது... அவன் மனதில் அனாமிகாவின் குரல் ஒலித்தது...

'உங்களுக்கு இடி அமீன் என்று பெயர் வைத்திருக்கலாம்...'

ஜெகன் மௌனமாகி விட்டான்... ஹரிணியிடம் சில சமயம் தென்படும் அனாமிகாவின் சாயல்... அவனைக் கிளர்ச்சி கொள்ளச் செய்தது... அதே சமயம்... அனாமிகாவைப் பற்றி ஹரிணியிடம் பேசவும் தயக்கமாய் இருந்தது...

# 33

அடை மழை காலம் ஆரம்பமாகி விட்டிருந்தது... கண்ணாடித் தடுப்புக்குள் இருந்த ஜெகந்நாதனின் கம

பெனியை... வெளியே அடிக்கும் கத்தரி வெயிலும் பாதிக்காது.... 'சோ' வென்று பெய்யும் அடைமழையும் பாதிக்காது... வெயிலோ... மழையோ தெரியாமல் செயற்கைக் குளிரில்.... செயற்கை வெளிச்சத்தில்... நாளின் பெரும் பகுதியை ஓட்டுபவன்... இப்போது ஹரிணியை அழைப்பதற்காக அவசரமாய்க் காரைக் கிளப்பிக் கொண்டு சென்றான்....

கல்லூரி வராண்டாவில் நின்றவள்... விரைந்து வந்து காரில் ஏறிக் கொள்வதற்குள் தொப்பலாய் நனைந்து விட்டாள்...

காரை வலது கையால் ஓட்டிக் கொண்டே.... இடது கையால் காரின் முன்பக்க அலமாரியில் இருந்த டவலை எடுத்து அவளிடம் நீட்டினான் ஜெகன்...

''துடைத்துக் கொள்.. நனைந்து போயிருக்கிறாய்... இப்படியா மழையில் நனைவது....?''

''நான் வேண்டுமென்றே நனைந்தது போல் பேசு கிறீங்களே... ஒரே ஓட்டமாய் ஓடி வருவதற்குள் இப்படி நனைந்து விடுவேன் என்று கனவா கண்டேன்...''

தலையை ஆட்டி அவள் சொல்லிய விதத்தில் கவரப் பட்டவனாய் அவன் அவளை ஊன்றிப் பார்த்தான்...

பனியில் குளித்த மலர் மேல் ஆங்காங்கே நீர்த் துளி கள் இருப்பதைப் போல்... அவள் முகத்தில் நீர்த்திவலை கள் தெரிந்தன... அவள் உடுத்தியிருந்த பிரிண்டெட் சேலை நனைந்து... அவளது உடலோடு ஒட்டித் தெரிந்த தால்... என்றைக்கும் விட.... இன்று அவளைப் பார்க்கும் போது ஜெகன் தடுமாறினான்...

அடிக்கடி... அவளை ஓரக்கண்ணால் பார்த்தபடி காரை ஓட்டியவன்... வீட்டு காம்பவுண்டில் காரை நிறுத்தியதும்



இறங்கி... வேகமாய்ப் படியேறி மாடியறைக்குச் சென்று விட்டான்...

சற்று நேரத்தில்... கையில் சூடான காபிக் கோப்பை களோடு அறைக்குள் வந்தாள் ஹரிணி... ஈரம் உலராத உடை... இன்னும் அவள் உடலோடு ஒட்டியிருக்க... லேசாய் நடுங்கினாள்...

''ஈர டிரஸ்ஸை மாற்றிவிட்டுக் காபி கொண்டு வர வேண்டியதுதானே....'' அவன் எரிந்து விழுந்தான்...

அவனது கோபத்திற்கான காரணம்.... அவனுக்கே பிடிபடவில்லை... அவள் மிரள... மிரள விழித்தாள்...

''இல்லை... நீங்க உடனே கம்பெனிக்குத் திரும் பணும்... நான் டிரஸ் மாற்றிவிட்டு காபி கொண்டு வந்தால்... உங்களுக்கு நேரம் ஆகிவிடும்... அதனால் தான்...'' அவள் மென்று விழுங்கினாள்...

''என்னை... கம்பெனிக்குத் துரத்தி விடுவதிலேயே குறியாய் இரு...'' அவனுக்கு எரிச்சல் கூடியது....

''நான் அப்படிச் சொன்னேனா...? நீங்கள்தான் வீட்டை மறந்து ஆபிஸிலேயே கிடக்கறீங்களே...'' அவளுக்கும் கோபம் வந்தது.... சுள்ளென்று பதில் சொன்னாள்...

''உனக்கு அது நிம்மதியாய்ப் போய்விட்டது...''

''எனக்கு நிம்மதியா....?''

அவள் கண்கள் கலங்க... சட்டென்று உடைமாற்றும் அறைக்குள் போய் விட்டாள்....

தன் முன் இருந்த சூடான காபியை எடுத்துக் குடித்துக் கொண்டிருந்த ஜெகனுக்கு அவனது கோபத்திற்கும்... எரிச்சலுக்குமான காரணம்... அவனுக்குள் கிளர்ந்தெழுந்த மோகம்தான் என்பது தெரியவில்லை...

தலைமுடி காய்வதற்காக விரித்துப் போட்டு... பட்டு ரோஸ் கலரில் நைட்டி அணிந்து... அவன் முன்னால் வந்து அமர்ந்த ஹரிணி... அவன் முகம் பார்க்காமல்... காபியைக் குடிக்க ஆரம்பித்தாள்...

ஜெகன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்... அவனுக்கு அவளிடம் பேச வேண்டும் போல் தோன்றியது...

"ஹரிணி..."

"ம்ம்ம்..."

"என் மேல் கோபமா...?"

"உங்களுக்கு என் மேல் கோபமா?"

"இல்லையே..."

"அப்புறம் ஏன் என்னைத் திட்டினீங்க...?"

"ஈர டிரஸ்ஸோடு இருந்தால்... காய்ச்சல் வந்து விடாதா...?"

"என் மேல் அவ்வளவு அக்கறை கூட உங்களுக்கு இருக்கிறதா?"

"இது என்ன கேள்வி....?"

"தோன்றியது. கேட்டேன்..."

"யு ஆர் மை வொய்ப்..."

"இதையே எத்தனை தரம் சொல்வீங்க... அதனால் என் மேல் அக்கறைப் படறீங்க... குட்..."

"இப்போது எதற்காக குட் சொன்னாய்...? நான் உன்னை என் மனைவியாகத்தான் பார்க்கிறேன்... நீதான்... என்னிடம் உன் உரிமையைக் கேட்க மறுக்கிறாய்..."




"புரியவில்லை..."

"பர்ஸ்ட் நைட்டிலேயே சொல்லிவிட்டேன்.... நீ தாராளமாய் என்னிடம் உன் உரிமையைக் கேட்கலாம் என்று..."

ஹரிணிக்கு அவன் மனம் புரிந்தது... அவன் அவளுடன் கூடிக் கலந்து விட விரும்புகிறான்... ஆனால்... அதை ஏதோ தடுக்கிறது... அதனால்.. ஹரிணியைத் தன் உரிமையைக் கேட்கச் சொல்லி மறைமுகமாக வற்புறுத்துகிறான்...

அவளால் அது எப்படி முடியும்....? ஹரிணி உதட்டைக் கடித்துக் கொண்டு எழுந்து... காபிக் கோப்பையை எடுக்கப் போனாள்... ஜெகந்நாதனுக்குச் சினம் வந்தது...



## 34

"ஏய்.... நில்லு..."

"என்ன...?"

"இப்போது ஏன் ஓடப் பார்க்கிறாய்...?"

"எங்கே ஓடப் பார்க்கிறேன்...? கீழேதானே போகிறேன்...!"

"அங்கே உனக்கு என்ன வேலை....?"

"இங்கே மட்டும் என்ன வேலை...?"

"நான் இங்கேதானே இருக்கிறேன்..."

''நீங்கள் இருக்குமிடத்தில்தான் நானும் இருக்க வேண்டுமா?''

''இந்தக் கேள்வியை உன் அப்பாவிற்குப் போன் போட்டுத் தருகிறேன்... அவரிடமே கேள்...''

ஹரிணி மௌனம் சாதித்தாள்... ஜெகன் எழுந்து அவளை நெருங்கினான்... அவள் பின்னால் நகர்ந்தாள்... அவள் சுவரோடு சுவராகப் படிந்து நிற்க... ஜெகன் அவளுக்கு இருபுறமும் கைநீட்டி அவளைச் சிறைப்படுத்தினான்...

''சொல்... ஹரிணி...''

''என்ன சொல்ல...?''

''நான் யாரென்று சொல்...''

''என் ஹஸ்பெண்ட்...''

''அப்படியானால் உன் ஹஸ்பெண்டிடம் உரிமையாய்ப் பேச உனக்கு என்ன தயக்கம்....?''

''நான் உரிமையாகத்தான் பேசுகிறேன்...''

''உன் உரிமையைக் கேட்கவில்லையே...''

''நீங்களும் கொடுக்கவில்லையே...''

அவள் தன்னையும் அறியாமல் பட்டென்று பேசி விட்டாள்... அவன் கண்கள் மின்னின...

''ஓ... நீ அப்படி வருகிறாயா...?''

''நான் எப்படியும் வரவில்லை... கையை எடுங்கள்...''

''எடுக்க முடியாது.... என்ன செய்வாய்...?''

அவள் என்ன செய்வாள்... அவனது மூச்சுக்காற்று அவள் முகத்தின் மீது பட... இனம் புரியாத இன்ப அவஸ்தையில் சிக்கியிருந்தவளால் என்னதான் செய்ய



முடியும்....? அவனது அண்மை உணர்த்திய ஆண்மையின் அருகாமை அவளை ஆகர்ஷித்துக் கொண்டிருந்த போது... அவளால் சிந்திக்கக் கூட முடியவில்லையே...

லேசாக அசைந்தாலும்.. அவன் மேல் பட்டு விடக் கூடிய அருகாமையில் அவள் மனம் படபடக்கக் கண்களை மூடிக்கொண்டாள்... அவனது மீசை அவளது முகத்தில் உராய்வதை உணர்ந்தவளின் மேனி நடுங்கியது... சூடான அவனது இதழ்கள் அவள் கன்னத்தின் மீது பதிந்த போது அவள் நிற்க முடியாமல் தொய்ந்து சரிந்தாள்...

அவனது கைகள் அவளைத் தாங்கி அருகில் இழுத்துக் கொண்டன... அவன் அவளை உன்மத்தமாய்த் தழுவித் தன் கைகளில் அள்ளிக் கொண்டான்... கட்டிலில் கிடத்தியவன்... அவள் மேல் படர்ந்தான்... அவளது கைகள் அவனது முதுகைத் தழுவிக் கொள்ள அவளுள் அவன் புதையுண்ட அந்த நேரத்தில்... அவன் கிளர்ச்சியுடன் அவளது காதுகளில் முணுமுணுத்தான்..

''அனாமிகா...''

கண்மூடிக் கிறங்கி.. எல்லாமும் அவனாகி உருகிக் கரைந்து கொண்டிருந்த ஹரிணி மனதில் அதிர்வை வாங்கினாள்... அவளது உணர்வுகளில் இருந்த கிளர்ச்சி மறைய.... அவனை விலக்கி விட்டுச் சரேலென விலகி நின்றாள்... அவள் மேனி நடுங்கிக் கொண்டிருந்தது...

ஜெகனுக்குத் தன் தவறு உறைத்தது... எது நடக்கக் கூடாது என்று அவன் நினைத்தானோ... அது நடந்து விட்டதில் அவன் கலங்கிப் போனான்....

''என்ன சொன்னீங்க...?''

''ஹரிணி...''

''இல்லை... இந்தப் பெயரை... என் பெயரை... நீங்கள் சொல்லவில்லை... வேறு ஒரு பெயரைச் சொன்னீங்க...''

''தயவு செய்து நான் சொல்வதைக் கேள், ஹரிணி...''

''என்ன பெயரைச் சொன்னீங்க...''

''நீ இப்படி உட்கார்... நாம் பேசி ஒரு முடிவுக்கு வரலாம்...''

''வேண்டாம்... பேசியவரை போதும்... என்ன பெயரைச் சொன்னீங்க...''

ஜெகந்நாதன் செய்வது அறியாமல் ஆற்றாமையோடு அவளையே பார்த்தான்... அவள் பிடிவாதத்துடன் அவனது பார்வையை எதிர் கொண்டாள்...

''நான் சொன்னால் கேட்க மாட்டாயா...?''

''நீங்கள் சொன்னதைத்தான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்...''

''நாம் வேறு பேசலாம்...''

''இல்லை... எனக்கு அந்தப் பெயர் தெளிவாகக் கேட்டது...''

''ஏதோ... மயக்கத்தில் உளறியிருப்பேன்...''

''மயக்கத்தில் என் பெயரை நீங்கள் உளறவில்லை... வேறு ஒரு பெயரை உளறினீங்க.... யார் அது....?''

''ச்ச்... பேச்சை விடு...''

''முடியாது... எனக்கு அந்தப் பெயர் தெரிய வேண்டும்...''

''அனாமிகா...! போதுமா... ச்சே... மனிதனுக்கு நிம்மதியே இல்லை... அந்தப் பெயரைத் தெரிந்து நீ என்ன செய்யப் போகிறாய்? என்ன செய்வாயோ... அதைச் செய்து கொள்...''

ஜெகந்நாதன் அறைக் கதவைத் திறந்து கொண்டு விர்ரென்று வெளியே போய்விட்டான்... சற்று நேரத்தில்



அவனது கார் கிளம்பும் ஓசை கேட்டது... ஹரிணி அப்படியே தரையில் அமர்ந்து விட்டாள்...



# 35

ஹரிணி... அப்படியே தரையில் அமர்ந்து... சுவரில் சாய்ந்து கொண்டாள்.... அவளது கண்களில் இருந்து அருவி போல் கண்ணீர் பெருகி வழிந்து கொண்டிருந்தது... விளக்கைக் கூடப் போட்டுக் கொள்ளாமல்... அப்படியே இருளில் புதைந்து போய் அமர்ந்திருந்தாள்... எவ்வளவு நேரம் அப்படியே இருந்தாளோ... அறையின் விளக்கு எரிந்தது... அவள் தலையைக் கூட நிமிரவில்லை... ஜெகன் அவள் அருகில் வந்தான்... அவளையே பார்த்துக் கொண்டு நின்றான்... ஒரு சோபாவை அவளருகில் இழுத்துப் போட்டு அதில் அமர்ந்தான்...

''நீ கீழேயே வரவில்லையாம்... அம்மா சொன்னாங்க...''

''......''

''அப்போதிருந்து இப்படியே உட்கார்ந்திருக்கிறாயா...?''

''......''

''உன்னிடம்தான் ஹரிணி பேசிக் கொண்டிருக்கிறேன்... எதுவாக இருந்தாலும்... வாய் திறந்து பேசு...''

''இப்போது பேசச் சொல்கிறீங்களே... இதுவரை ஏன் நீங்கள் என்னிடம் இதைப் பற்றிப் பேசவில்லை...?''

''எதைப்பற்றி...?''

''அனாமிகாவைப் பற்றி...''

''அவளே அனாமிகா... பெயரில்லாதவள்... நான் முகமறியாதவள்... அவளைப் பற்றி உன்னிடம் பேச என்ன இருக்கிறது... என்று நினைத்து விட்டேன்...''

''எதுவுமில்லாத போது... எப்படி... அப்படியொரு நேரத் தில் அவள் பெயரைச் சொல்ல உங்களால் முடிந்தது?''

''ஹரிணி...''

''உங்கள் உயிரில் அவள் கலந்திருக்காவிட்டால் அந்த நேரத்தில் அவள் பெயர் உங்கள் வாயில் வந்திருக்காது...''

''இது எப்படி நிகழ்ந்தது என்று எனக்கே தெரிய வில்லை, ஹரிணி...''

''ஆனால் எனக்குத் தெரிகின்றது... நீங்கள் என்னை அவளாக நினைத்துக் கொண்டு என்னைத் தொட்டிருக் கிறீங்க... உங்கள் நினைவில் அவள்.... நிஜத்தில் நானா...?''

ஜெகன் முகத்தில் அறை வாங்கியதைப் போல் உணர்ந் தான்.... அவள் கேள்வியில் இருந்த உண்மை அவனைச் சுட்டது... அவளது கேள்வியில் இருந்த நியாயமும் அவனுக்குப் பிடிபட்டது.... அவன் குற்றவாளியாய்த் தலை குனிந்தான்...

''யார் அந்த அனாமிகா...?''

''சொல்கிறேன்... எல்லாவற்றையும் சொல்லி விடு கிறேன்...''

ஜெகந்நாதன் அவளிடம் அனைத்தையும் கொட்டி னான்... அவள் அசைவில்லாமல் அமர்ந்து அதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.... யோசனையுடன்



அமர்ந்திருந்தவளிடம்... தன் பக்க நியாயத்தைக் கூறி னான் ஜெகன்...

''யார் அந்த அனாமிகான்னு தெரியவில்லை... எனக்குத் தெரிந்தது அந்த செல்போனின் நம்பர்தான்... அதை வைத்து... கண்டு பிடித்து விடலாம் என்றால்... அவள் பிரிவைச் சொல்லி விலகிச் சென்று விட்டாள்... என் குடும்ப நிலைமை இதுதான்... நீ என்னைத் தொந் தரவு செய்யாதேன்னு சொல்லி ஒருத்தி விலகிச் சென்று விட்ட பின்பு... அவளைத் தேடிப்போவது சரியா? அவ ளுடைய கோரிக்கையை நான் மதிக்கவில்லை என்று அர்த்தமாகி விடாதா...?''

''அப்புறம்...''

''அவளுடைய நினைவை என்னால் மறக்க முடிய வில்லை... யார் அந்த நிலவுன்னு... பாட்டைக் கேட்டு... பைத்தியம் போல் எனக்குள் நானே புலம்பிக் கொண் டிருந்தேன்... உன்னுடன் நம் கல்யாணத்தை உறுதி செய்து விட்டு... என் தாய் மாமன் வந்து நின்றார்... அவர் மேல் எனக்கு மதிப்பும்... மரியாதையும் மிகவும் அதிகம்... அவர் சொல்லைத் தட்ட முடியாமல் இந்தக் கல் யாணத்தை நான் பண்ணிக் கொண்டேன்...''

''ஓ... தாய் மாமனின் வார்த்தைக்காக.... உங்கள் காதலைத் தியாகம் செய்திருக்கிறீங்க... வெரிகுட்... ஆனால்.. என் வாழ்க்கையைப் பணயம் வைக்க... யார் உங்களுக்கு அதிகாரம் கொடுத்தது....?''

''ஹரிணி.... நீ என்னைப் பார்க்காமலே கல்யாணத் திற்குச் சம்மதம் சொல்லி விட்டாய்...''

''என் வீட்டில் என்னை அப்படித்தான் நினைத்திருக் கிறார்கள்... அவர்கள் தேர்ந்தெடுக்கும் மாப்பிள்ளைக்குத்

தான் நான் கழுத்தை நீட்டியாக வேண்டும் என்றிருக்கும் போது... நான் உங்களைப் பார்த்து என்ன செய்ய?''

''அதற்கு நான் எப்படிப் பொறுப்பாவேன் ஹரிணி... நீ ஒரு வேளை என்னைப் பார்க்க நினைத்திருந்தால்... நான் கட்டாயம் என் காதலைப் பற்றி உன்னிடம் சொல்லி யிருப்பேன்... பார்க்காதது உன் தவறா...? இல்லை, என் தவறா...?''

''நீங்கள் கெட்டிக்காரர்... சாமர்த்தியமாய்ப் பழியை என் மேல் தூக்கிப் போடுகிறீங்க...''

ஜெகந்நாதன் இமைக்காமல் அவளையே பார்த்தான்... அவளது விழிகளில் தெரிந்த துயரத்தை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை....

## 36

ஜெகந்நாதன் வேதனையுடன் விழிகளை மூடிக் கொண்டான்... அவனது நெஞ்சம் துயரத்தில் அரற்றியது...

'வாழ்வது போலொரு....

பாவனை செய்திடும் நெஞ்சமே...

கண் பாராதிருந்தால்...

நிம்மதியாவது மிஞ்சுமே...'

யாரோ எழுதி... யாரோ பாடிய பாடல் வரிகள்... கானல் வரிக் கவிதை போல் அவன் நெஞ்சத்தில் ஓடின...



அவனால் ஹரிணியை விட முடியவில்லை... கண் எதிரே புத்திசாலியாய்... அமைதியாய்... பாந்தமாய்.... அழகாய்... நான் உன்னுடைய மனைவியென்று உரிமை யோடு அவள் வளைய வரும்போது அவன் மனம் நீரில் மிதக்கும் படகு போல் ஆடியது...

அவளைத் தொட விரும்பியவனின் ஆழ்மனம்... அவள் அவனுடைய அனாமிகாவாக இருந்து விடக் கூடாதா என்று ஏங்கியதன் விளைவுதான் அவன் சொல்லக் கூடாத நேரத்தில் அனாமிகாவின் பெயரைச் சொல்லித் தொலைத்தது....

ஹரிணியைப் பாராதிருந்திருந்தால் அவன் நிம்மதியாக வாழ்ந்திருப்பான்... இன்று அந்த நிம்மதி தொலைந்து விட்டதே என்று அவனுக்கு இருந்தது...

'இவளை ஏன் பார்த்துத் தொலைத்தேன்...'

ஜெகன் வேதனையில் வெந்தான்... வாழவும் முடி யாமல்... வாழாமல் இருக்கவும் முடியாமல்... இப்படி ஒரு வாழ்க்கையை வாழ்ந்து தொலைக்கிறோமே என்று அவன் மனம் நொந்தான்.... ஹரிணியிடமே இதற்கொரு வழியைக் கேட்டான்...

''சொல் ஹரிணி.... இதற்கு வழிதான் என்ன...?''

செய்வதையும் செய்து விட்டு.... என்னிடம் வந்து வழி கேட்கிறாயா... என்ற பாவனையில் அவள் அவனை முறைத்தாள்... பின் எழுந்து கொண்டாள்...

''ஒன்று அனாமிகாவை நீங்கள் மறக்க வேண்டும்.... இல்லை... ஹரிணியை விட்டு விட வேண்டும்...''

''இதோ பார்... உன்னை விட என்னால் முடியாது... நீ என் மனைவி...''

''அப்போ... அவளை மறந்து விடுங்கள்...''

''நினை... என்றால் நினைப்பதற்கும்.... மற என்றால் மறப்பதற்கும்... மனம் என்ன.... நம் கைக்குள் அடங்கும் பொருளா... அது திமிறும் குதிரை ஹரிணி... அவளை என்ன நான் வேண்டுமென்றா நினைத்துக் கொண்டிருக்கிறேன்... என்னால் அவளை நினைக்காமல் இருக்க முடியவில்லையே... அவளை மறக்கவும் முடியவில்லையே...''

''இப்படிச் சொன்னால் எப்படி....?''

''இதற்கு நீதான் ஒரு வழி கண்டு பிடித்துச் சொல்ல வேண்டும்...''

''இல்லை.... நீங்கள் தான் வழிகண்டு பிடிக்க வேண்டும்...''

''என் காதலில் குற்றமில்லை, ஹரிணி...''

''காதலா... நீங்களா... அனாமிகாவின் மேல் உங்களுக்கு இருப்பது காதலா? இதை நீங்கள் சொன்னால்... நான் உடனே நம்பி விட வேண்டுமா...?''

''என்ன சொல்கிறாய் ஹரிணி...''

''அனாமிகாவின் முகம் உங்களுக்குத் தெரியாது... அவளைப் பற்றிய வேறு அடையாளங்களாவது உங்களுக்குத் தெரியுமா?''

''ஏன் தெரியாது....? பேச்சு.... சிரிப்பு... கவிதை... நகைச்சுவை... புத்திசாலித்தனம் என்று எத்தனையோ அவளிடம் தனிப்பட்டு இருக்கிறதே...''

''அது எல்லோரிடமும்தான் இருக்கிறது...''

''இல்லை... இவை... இவளிடம் தனிப்படத் தெரியும்... உனக்கு ஒன்று தெரியுமா...? நீ சொல்லும் சில வார்த்தைகள்... எனக்கு அவளை நினைவுபடுத்தின...''

ஹரிணி.. சட்டென்று அவன் முகம் பார்த்தாள்... பின் பேசாமல் அறைக் கதவைத் திறந்து கொண்டு கீழே இறங்கிச் சென்று விட்டாள்.... இரவு சாப்பிடும் போது அவ



னுக்கு மௌனமாகப் பரிமாறினாளே தவிர... பேசவில்லை.

இரவின் மெல்லிய ஒளியில் அவள் அவனருகில் படுத்திருந்த போது... ஜெகந்நாதன்... தாளாத தாபத்தோடு அவளருகில் நகர்ந்தான்... அவள் தோள் பற்றித் தன்புறம் திருப்பினான்...

ஹரிணியின் பார்வை தன்னை ஊடுருவுவதை அந்த மெல்லிய வெளிச்சத்திலும் அவனால் உணர முடிந்தது...

''நான் உன் கணவன் ஹரிணி...''

''அதனால்...?''

''நீ எனக்கு அந்த உரிமையைத் தர மறுக்கலாமா?''

ஹரிணியின் இதழ்களில் ஒரு புன்னகை முகிழ்த்தது... அவனது கரங்களை விலக்கி விட்டு நேராகப் படுத்தாள் அவள்...

# 37

ஜெகன் இத்தனை நாளாய்... நீ உன் மனைவியென்ற உரிமையை நிலை நாட்ட வேண்டாமா...? என்றுதான் அவளைக் கேட்டுக் கொண்டிருந்தான்... முதன் முதலாக... தன் கணவன் என்ற உரிமையை நிலை நாட்டத் துடிக்கிறான்...

இது ஹரிணியின் முதல் வெற்றி... அதனால்தான் அவள் புன்னகைத்தாள்... புன்னகையோடு அவன் கைகளை விலக்க.. அவன் சீறினான்...

''ஏன்...?''

''ம்ம்... ஏன் என்ற கேள்விகளையே... எப்போதும் என்முன் நீங்கள் வைப்பது ஏன்....?''

தானாக ஹரிணியை விட்டு விலகிய ஜெகந்நாதனின் கண்கள் விரிந்தன...

''என்ன தள்ளிப் போய் விட்டீங்க... உங்களின் கணவன் என்ற உரிமையை நிலை நாட்டவில்லையா...?''

அவள் கேலியான குரலில் வினவினாள்... எப்படி அவளை நெருங்குவது...?

அன்று அனாமிகா உதிர்த்த சொற்களை இன்று இவள் உதிர்க்கும் போது... அனாமிகாவின் நினைவு நெஞ்சினில் பொங்கி எழுகின்றதே... இதில் இவளைத் தொட்டு அணைப்பது எப்படிச் சாத்தியமாகும்....?

அவன் விலகிப் படுத்துக் கண் மூடித்தூங்கி விட்டான்... வெகு நேரம் ஹரிணி உறங்கவே இல்லை... அவள் விழியோரம் கண்ணீர் வழிந்து கொண்டேயிருந்தது...

காலையில் இருவரும் இயல்பாய்க் கிளம்பி அவரவர் வேலைகளைப் பார்க்கப் போனாலும்... அவர்களின் மனம் கொந்தளித்துக் கொண்டிருந்தது...

அதன் பின்.. ஜெகன் அவளைக் கல்லூரியில் இருந்து மாலையில் அழைத்துக் கொண்டு வந்து... வீட்டில் விட்டு விட்டு... திரும்பவும் கம்பெனிக்குப் போனால்.. இரவு... வெகுநேரம் ஆன பின்பே... வீடு திரும்புவதை வழக்கமாக்கிக் கொண்டான்...

ஹாலில் அமர்ந்து எதையாவது படித்துக் கொண்டே அமர்ந்திருக்கும் ஹரிணி... அவனுக்காகக் காத்திருப்பதை வழக்கமாக்கிக் கொண்டாள்...

''எனக்காக ஏன் நீ காத்திருக்கிறாய்... போய்ப் படுக்க வேண்டியதுதானே...''

''உங்களுக்குச் சாப்பாடு பரிமாற வேண்டாமா?''



அதன் பின் தொடர்ந்து இரண்டு நாள்கள் அவன் வெளியே சாப்பிட்டு விட்டு வந்தான்... அவள் பட்டினியாய்ப் படுத்துக் தூங்கினாள்...

அவனுக்குக் கோபம் வந்து விட்டது.... அவளிடம் முறைத்தான்....

''வீம்பு பண்ணுகிறாயா...?''

''ஆமாம்...''

''நான் பசித்தால் வெளியே சாப்பிட்டு விடுவேன்...''

''செய்யுங்கள்... யார் உங்களைத் தடுத்தது?''

''நீ ஏன் பட்டினி கிடக்கிறாய்....?''

''அது என் இஷ்டம்...''

''பட்டினி கிடந்தால் உடம்பு என்னத்துக்கு ஆவது?''

''அதைப் பற்றி நீங்கள் ஏன் கவலைப்படுகிறீங்க...''

''நான் கவலைப் படாமல் யார் கவலைப்படுவது? உன் அப்பாவிற்கு வாக்குக் கொடுத்திருப்பது யார்...? நான்தானே...''

''அதுதானே பார்த்தேன்... என்னடா... நம் மேல் கரிசனம் பொங்கி வழிகிறதேன்னு நினைத்தேன்...''

''ஹரிணி.. இப்போது என்ன.. என்னுடன் சண்டை போடணும்ன்னு நினைக்கிறாயா...?''

''அதெல்லாம் நான் நினைக்கவில்லை... நீங்கள் தான் நினைத்துக் கொண்டிருக்கிறீங்க...''

பெண்களிடம் சண்டை போட்டு ஜெயிக்க முடியுமா? ஜெகந்நாதன் வேறு வழியின்றி மறுநாள் சாப்பிடாமல் வந்து சேர்ந்தான்...

''டிபன் எடுத்து வை...''

அவள் முகமலர்ச்சியுடன் ஓடிப் போய்ப் பரிமாற ஆரம்பித்ததைப் பார்த்துக் கொண்டே அவளருகில் சென்றவன் மெல்லிய குரலில் கேட்டான்....

''ஏன் இந்தக் கரிசனம்...? இதை பெட்ரூமில் காட்ட மாட்டேன் என்கிறாயே...''

அவ்வளவுதான். அவள் முகம் குப்பென்று சிவந்து விட்டது.... அதைப் பார்த்தவனின் மனதில் ஆசைக்கனல் கொழுந்து விட்டெரிந்தது... அணைத்து... அதை அணைக்க வேண்டியவளோ... அதை வேடிக்கை பார்த்துக் கொண்டு... விவாதம் செய்து கொண்டு ஒதுங்கி நின்றாள்... இந்த நிலையில் அவர்களின் திருமண நாளும் வந்தது....

## 38

பரந்தாமன்.... வீட்டிற்கு வந்திருந்தார்... திருமண நாளைக் கொண்டாடும் தம்பதிகள் அவரவர் வேலைகளில் கவனமாக இருப்பதைக் கண்டு அவர் புருவம் உயர்ந்தது... அரையும் குறையுமாய்ச் சாப்பிட்டு விட்டு வெளியேறப் போன.... மகளையும்... மருமகனையும்... தடுத்து நிறுத்தியவர்...

''இன்றைக்கு என்ன நாள் என்று தெரியுமா மாப்பிள்ளை...'' என்று கேட்டார்...

''என்ன நாள்... ம்ம்... வெள்ளிக் கிழமை மாமா...''

''ஹரிணி! உனக்காவது நினைவிருக்காம்மா...?''

அவள் தகப்பனாரின் முகத்தைப் பார்த்து விட்டு உதட்டைக் கடித்துத் தலைகுனிந்து விளக்கம் சொல்லும் பாவனையில் கூறினாள்...



''அவருக்கு வேலை அதிகம் அப்பா...''

''அதற்காகக் கல்யாண நாளைக் கூட மறந்து விடுவதா அம்மா...?''

ஜெகந்நாதன் நாக்கைக் கடித்துக் கொண்டு ஹரிணியைக் குற்றம் சாட்டும் பாவனையில் பார்த்தான்...

''நீ நினைவு படுத்த வேண்டாமா?''

''என் மகள் நினைவு படுத்தித்தான் உங்களுக்கு இந்த நாள்... என்ன நாளென்று தெரிய வேண்டுமா, மாப்பிள்ளை?''

''இல்லை மாமா... அது வந்து...''

''வேண்டாம் மாப்பிள்ளை... உங்கள் விளக்கம் எதுவுமே எனக்கு வேண்டாம்... இதை மட்டுமா மறந்தீங்க...? உங்களோடு இதே தேதியில் கல்யாணமான மற்ற ஜோடிகள் எல்லாம் கையில் ஒரு குழந்தையை... இல்லை, குழந்தை வரப்போகிற சேதியை வைத்திருப்பாங்க.. ஆனால் நீங்கள்... அதைப் போலச் செய்தி இருக்குமென்றாவது நினைத்துப் பார்த்தீங்களா....?''

ஜெகந்நாதன்...'நானா நினைக்கமாட்டேன் என்றேன்' என்று விழியால் ஹரிணியைக் கேட்டான்... அவள் தந்தையிடம் போய் இதற்கு எப்படிப் பதில் சொல்வது என்ற சங்கடத்துடன் பேசாமல் இருந்தாள்....

வேறு வழியின்றி ஜெகந்நாதனே அதற்குப் பதில் சொன்னான்...

''ஹரிணி இப்போது படித்துக் கொண்டிருக்கிறாள் மாமா... அவள் படிப்பு முடியட்டும் என்று...''

''இதைப் போய்த் தேனியில் என் சொந்த பந்தம் எல்லோரின் வீட்டுக் கதவையும் தட்டி நான் சொல்ல முடியுமா...? முதல் குழந்தையைத் தள்ளிப் போடக் கூடாது மாப்பிள்ளை...

ஹரிணி செய்வது அறியாமல் தந்தையின் கால்களில் ஆசிர்வாதம் வாங்கப் பணிய... பரந்தாமனின் கோபம் ஒரு வழியாய்த் தணிந்தது...

''மாப்பிள்ளை, இந்தாங்க...'' என்று வெளிநாட்டுக் கைக்கடிகாரத்தை அவனுக்குப் பரிசளித்தவர்...

''இந்தாம்மா.... நீ ஆசைப்பட்ட வைர நெக்லஸ்...'' என்று மகளுக்குப் பரிசளித்தார்...

ஒருவரையொருவர் பார்த்த வண்ணம் அவர்கள் இருவரும் சேர்ந்து கோவிலுக்குப் போனார்கள்.....



# 39

பரந்தாமன் கிளம்பிப் போகும் போது ஜெகந்நாதனிடம் மனம் விட்டுப் பேசி விட்டுக் கிளம்பினார்...

''பலராமனுக்கு மேற்படிப்பு படிக்கச் சென்னையில் இடம் கிடைத்திருக்கு மாப்பிள்ளை... அவன் மனதில் நம்ம ப்ரீதாவைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசையிருக்கு... எங்களுக்கும் அதே எண்ணம்தான்...''

''ஓ...''

தன்னிலேயே மூழ்கியிருந்த ஜெகந்நாதனுக்கு எப்படித் தன் தங்கை திருமண வயதிலிருப்பதைக் கவனிக்கத் தவறி விட்டோம் என்று தோன்றிவிட்டது... தன்னை அதற்காகக் கடிந்து கொண்டவன்...



''ப்ரீதா இப்போது தான் மூன்றாம் வருடம் படிக்கிறாள்...''

''பலராமனின் படிப்பு முடியும் போது ப்ரீதாவின் படிப்பும் முடிந்து விடுமே..''

இது அருமையான சம்பந்தம் என்பதை நன்றாகவே உணர்ந்து இருந்தான் ஜெகந்நாதன்...

'பெண்ணைக் கொடுப்பது... கண்ணைக் கொடுப்பது போல்...' என்பார்கள்...

ப்ரீதா அந்த வீட்டின் செல்லப் பெண்... அவளை முன் பின் அறியாத ஒரு வீட்டில் திருமணம் செய்து கொடுப்பது என்பது கவலைக்குரிய விசயம் தான்...

அதுவே.. அவர்களைப் போல செல்வந்தர் வீட்டு ஆண் வாரிசு.. படிப்பும் இணையான டாக்டர் படிப்பு என்று திருமணம் செய்து வைப்பது மிகவும் மகிழ்ச்சியையும்... நிம்மதியையும் தரும் விசயம் அல்லவா...?

''ரொம்ப சந்தோசம் மாமா...?''

''ஆனால்... எனக்கு இதைப் பற்றி இன்னும் கொஞ்சம் யோசிக்கலாமோ என்று இப்போது தோன்றிவிட்டது...''

''ஏன்...?''

''ஏன்னா... என் மகள் இங்கே நிம்மதியாய் வாழலை... நாளைக்கு உங்கள் தங்கையைக் கல்யாணம் பண்ணணும்னு நாங்க நினைத்துப் பார்க்கும் போது... என் மகளின் இந்த நிம்மதியில்லாத வாழ்வுதானே எங்களுக்கு நினைவில் வரும்...?''

ஜெகந்நாதன் பேச்சிழந்து போனான்... இப்படி ஒரு இடையூறு தங்கையின் வாழ்வில்... தன்னால் ஏற்படுகிறதா... என்று... அவனுக்குள் பொங்கியது...

பரந்தாமன் தேனிக்குப் போய்விட்டார்... ஜெகந்நாதன் மனதிற்குள் இதே சிந்தனையில் இருந்தான்... அப்போது தான் அது நிகழ்ந்தது...

ஒரு நாள் அவசரமாய் ஒரு பைலைத் தேடியவன்... ஹரிணியின் அலமாரியைத் திறந்து விட்டான்... உள்ளேயிருந்து ஒரு நோட்டு பிரிந்த வாக்கில் வெளியே வந்து விழுந்தது...

அதில் தெரிந்த வாக்கியங்கள் அவனைப் பார்த்துக் கை கொட்டிச் சிரித்தன...



# 40

**'நான் தேடிய நட்பு...**

**வள்ளுவரின் குறள் வார்ப்படம்....**

**வாய்ப்பதெல்லாம் புருட்டஸ் இனம்...'**

கவிதை வரிகள் அவை... அனாமிகா போனில் அவனிடம் சொன்ன கவிதை வரிகள் அவை... அவசரமாய் அதை எடுத்துப் புரட்டிப் பார்த்தான்... அத்தனையும் கவிதைகள்...

'இவளுக்குக் கவிதை எழுதத் தெரியுமா?' என்ற எண்ணம் அவன் மனதில் ஓடிய அதே நொடியில்... இவளுக்கு எப்படி அனாமிகாவின் கவிதை வரிகள் தெரிந்தன என்று அவனுக்குச் சந்தேகம் தோன்றியது...



அவன் அனாமிகாவைப் பற்றித்தான் அவளிடம் சொல்லியிருக்கிறான்... அவளின் கவிதைகளைப் பற்றியோ... அவளின் பேச்சுப் பற்றியோ.... எதுவும் சொன்னது கிடையாது... அப்படியிருக்கும் போது.... அவள் சொன்ன கவிதை வரிகள் எழுத்துப் பிசகாமல் இவள் நோட்டில் இருப்பது எப்படி...?

அவனது புருவம் சுருங்கியது... அந்த நேரம் பார்த்துக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்த ஹரிணி... அவன் கையிலிருந்த நோட்டைப் பார்த்ததும் பிடிபட்டது போல் திகைத்து நின்றாள்...

அவளது முகத்திலிருந்தே உண்மையை உணர்ந்து கொண்டவன் அதிர்ந்து போனான்....

''நீ.... நீ... நீதான் அனாமிகாவா....?'' அவன் குரல் நடுங்கியது...

அவள் பதில் பேசாமல் இருந்தாள்... அவளது மௌனம் அவள் உண்மையை ஒப்புக் கொண்டதை உணர்த்தியது...

''ஏன்... என் வாழ்வில் விளையாடினாய்...?'' அவன் விழி சிவக்கக் கேட்டான்...

''நான் விளையாடினேனா...? என் போனில் ராங் நம்பராக வந்தது நீங்கள்தான்.... என்னோடு பேசிக் கொண்டிருக்க ஆசைப்பட்டதும் நீங்கள்தான்... என்னிடம் காதல் கவிதை சொன்னதும் நீங்கள்தான்.... நான் இதில் ஒன்றையாவது செய்தேனா...?''

''ஏன் செய்யவில்லை? பிரிவைச் சொன்னாய்...?''

''வேறு வழியென்ன எனக்கு இருந்தது....? பார்த்தீர்கள்... தானே... உங்களை என் கண்ணில் கூடக் காட்டாமல் கல்யாணத்தை நிச்சயம் பண்ணிய வீடு... என்

வீடு.... என் மேல் அவர்கள் வைத்திருந்த நம்பிக்கையை நான் காப்பாற்ற வேண்டுமானால் உங்களிடம் பிரிவைச் சொல்லித்தானே ஆக வேண்டும்....?''

''அதற்காக... என் நினைவு கொஞ்சம் கூட உன் மனதில் இல்லவே இல்லையா...?''

''அது இருக்கப் போய்த்தான்... கல்யாணமான நாளில் இருந்து உங்களிடமிருந்து விலகி இருந்தேன்... நான் உங்கள் காதலை ஏற்கவில்லைதான்... ஆனால் என்னால் உங்கள் காதலை உணர முடியும் தானே... அதை உணர்ந்த எனக்கு உங்களின் காதலை மறந்து... என் மனதைச் சமனப்படுத்திக் கொள்ளக் கொஞ்சம் காலம் அவகாசம் தேவைப்பட்டது.... இடையில் உங்கள் பேச்சுக்கள் உங்களை உணர்த்தினாலும் அது என் பிரமை என்று நான் நினைத்துக் கொண்டேன்...''

ஹரிணி உதடு துடிக்கப் பேசிக் கொண்டிருந்தாள்....

# 41

''உங்களை மறந்து... என் கணவனான உங்களுடன் வாழ மனதளவில் நான் தயாராகி நின்ற சமயத்தில்தான் நீங்கள் அனாமிகான்னு சொல்லி வைத்தீங்க...''

''ஏன்டி பாவி... நீதானே அனாமிகா... அப்புறம் ஏன்டி அன்றைக்கு அப்படி என்னுடன் சண்டை போட்டாய்...''

''ஏன் பேசமாட்டீர்கள்... நீங்கள் ஆண்... உங்கள் காதலை வெளிப்படையாய்ச் சொல்ல முடியும்... காதல்



தோல்வியைச் சொல்ல முடியும்... ஆனால் நான்...? காதல் செய்யாமலேயே... அந்த உணர்வுகளால் தாக்கப் பட்டவள்... உங்களை மறக்க நான் எவ்வளவு போராடி னேன் என்று உங்களுக்குத் தெரியுமா....? அந்த அள வுக்கு வேதனையை வெளிக் காட்டிக் கொள்ளாமல் எனக்குள் நானே... செத்துக் கொண்டிருந்த போது.... நீங்கள் அந்தப் பெயரைச் சொன்னால்... எனக்கு எப்படி இருக்கும்...? அதுவும் அனாமிகா என்று அந்தப் பெயரை மறந்து.... நான் முழுமனதாக ஹரிணி ஜெகந்நாதனாக ஆன பின்னால்... நீங்கள் அனாமிகாவின் தருணாக அந்தப் பெயரைச் சொன்னால் எனக்கு எப்படியிருக்கும்...?''

''அதற்காகவா கோபப்பட்டாய்...?''

''அதுமட்டுமா....? நான் பட்டவேதனைகள் ஏராளம்... அதெல்லாம் எதற்காக...? தவறே செய்யாமல் நான் அனுபவித்த குற்ற உணர்வு யாருக்காக? உங்களை என் கண் முன் வைத்துக் கொண்டே... உங்களை மறக்க நான் போராடியது எதைக் காப்பாற்ற...?''

''ஹரிணி...''

''இனித் தாராளமாய் என்னை அனாமிகாவென்று நீங்கள் கூப்பிடலாம்....''

''கடைசியில் என் காதல் ஜெயித்ததா?''

''இப்போது உங்கள் காதல் மேல் எனக்கு நம்பிக்கை இல்லை.... அனாமிகாவைக் காதலித்திருந்தால் அவளை அறியாமல் எப்படிப் போனீர்கள்...? ஒரு பேச்சு... ஒரு சிரிப்பு... இவை எதுவுமே... என்னிடமிருந்து அனாமிகா வின் வெளிப்பாடாய் உங்களுக்குத் தோன்றவில்லையா...?''

''எனக்குத் தோன்றியது என்று உன்னிடம் சொல்லி விட்டேன்...''

''தாமதமாகச் சொன்னீர்கள்... பர்ஸ்ட்நைட்டில் அவ் வளவு பேசியவர்.... இதைச் சொல்லியிருந்தால்... இவ் வளவு வலிகளையும்... வேதனையையும் நாம் தாங்கிக் கொள்ள வேண்டிய அவசியமே இருந்திருக்காது...''

''ஏய்ய்... இன்னும் ஏன்டி தள்ளி நிற்கிறாய்... அது தான் நான்தான் உன் தருண்... நீதான் என் அனா மிகாவென்று தெரிந்து விட்டதே... கிட்டே வா..''

ஹரிணியை இழுத்து அணைத்துக் கொண்ட ஜெகந் நாதனின் மனதில் முழுநிலாவின் ஒளியில் தோன்றும் நிறைவும்.. மகிழ்ச்சியும் தோன்றியது...

''ஹரிணி..... வலிகள் இல்லாத வெற்றி இல்லை.... நீ கொண்ட மனவலியும்.... நான் கொண்ட மனவலியும் இந்தக் காதலின் வெற்றிக்காகத்தான்...''

அவள் பதில் பேசாமல் விம்மினாள்.... அவன் நெகிழ்ச்சி யுடன் அவளைக் கடிந்து கொண்டான்...

''பைத்தியம்.. இனியும் அழுகை எதற்கு.. நீ சொன்னது போல் நான் அனாமிகாவை மறந்து விட்டேன்... இனி என் வாழ்வில் ஹரிணி மட்டும் தான்... நீயும் தருணை மறந்து விடு.... உன் வாழ்வில் ஜெகந்நாதன் மட்டும்தான்... புரிந்ததா...''



# 42

அன்று இரவு.... அவளை இழுத்து அணைத்துச் சுகித்த போது.... அவளது காதருகில் அவன் பாடினான்...



''அன்றொரு நாள் இதே நிலவில்...

அவள் இருந்தாள் என் அருகே...

நான் அடைக்கலம் கொண்டேன் அவள் அழகை....

நீயறிவாயே... வெண்நிலவே..''

அவனது மோகத் தீயை அணைத்து அவள் முழுமன தாய் அவனுடன் கலந்தாள்... தேநிலவு என்று வெளி யில் சொல்லாமல் வியாபார ஒப்பந்தத்தில் கையெழுத் திட என்று பெயர் பண்ணிக் கொண்டு அவளை அழைத் துக் கொண்டு வெளிநாட்டிற்குப் பறந்தான் ஜெகன்....

அடுத்த திருமண நாளின் போது... ஹரிணிக்கு வளை காப்பு நடந்தது... பரந்தாமன் மகிழ்ந்து போய் ப்ரீதாவை அன்றே பெண் கேட்டு... தன் மகனுக்காக நிச்சயம் பண்ணி விட்டுப் போனார்...

ஜெகந்நாதனும்... ஹரிணியும்... தங்களது ஒரு வயதுக் குழந்தையான ரகுநந்தனோடு... ப்ரீதாவின் பெற்றோர் ஸ்தானத்தில் திருமண மேடையில் நின்று ப்ரீதாவைப் பலராமனுக்குத் தாரை வார்த்துக் கொடுக்க... ப்ரீதா... பலராமன் திருமணம் நடந்து முடிந்தது...

தேனியில் பெரிய மருத்துவமனையைக் கட்டி மகனுக் கும்... மருமகளுக்கும் திருமணப் பரிசாகத் தந்தார் பரந் தாமன்...

ராமநாதன் அண்ணனுக்கு உதவியாக கம்பெனியில் முக்கியப் பொறுப்பேற்றான்... எம்பிஏ படித்து முடித்த ஹரிணி... ரகுநந்தன் வளர்ந்த பின்னால் அவனைப் பள்ளிக்கு அனுப்பி விட்டு... கம்பெனிக்கு வருவதாகக் கணவரிடம் உறுதி சொன்னாள்...

''ஏன்டி... அதற்குள் ரகுநந்தனுக்கு ஒரு தங்கைப் பாப்பா பிறந்து விடுமே... அப்போது என்ன செய்வே....?''

இரவின் தனிமையில் அவளைத் தன்னோடு இறுக்கிக் கொண்டே ஜெகன் ஹரிணியின் காதுகளில் முணு முணுத்தான்...

அவள் வெட்கத்துடன் அவன் மார்பில் குத்திவிட்டு அவனுடன் ஒன்றிக் கொண்டாள்...

வைஷ்ணவியைப் பெண் கேட்டு மாப்பிள்ளை வீட் டார் வருவதாக வெங்கடாசலம் சென்னைக்கு வந்திருந்த போது சொல்ல... ராமநாதன் ஜெகந்நாதனிடம் தன் காதலைச் சொல்லி முறையிட்டான்... ஜெகந்நாதன் தம்பிக்காகப் பெண் கேட்க.. வெங்கடாசலம் யோசித்தார்...

''அது மாப்பிள்ளை... நம்ம சின்ன மாப்பிள்ளை ஒரு மார்க்கமான ஆளு... நானோ வீச்சரிவாளைத் தேடுகிற ரகம்... இது சரிப்படுமா...?''

ஜெகந்நாதன் சிவகாமியை முடுக்கிவிட... அவள் தம்பியின் முன் நின்று வராத கண்ணீரை முந்தானை யால் துடைப்பதாய்ப் பாவனை செய்தாள்...

''ஏன்டா... தம்பி.... என் மகனை நீயே அனுசரித்து வைத்துக்கலைன்னா... யாருடா அனுசரிப்பா...? எனக் கிருக்கும் ஒற்றை உடன்பிறப்பு நீ... நீயே என்னைக் கை விட்டால்... நான் எங்கே போவேன்... என்ன ஆவேன்...?''

அவ்வளவுதான். அடுத்த முகூர்த்தத்தில் தன் பெண் ணைக் கட்டி வைத்து விட்டார் வெங்கடாசலம்... நிலவோட்டம் போன்றது வாழ்க்கை... அமாவாசை வந்தால்... பௌர்ணமி வராமல் போய் விடுமா என்ன?